**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 9-4-2012 Issued : 9-4--2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, பிப்ரவரி 1, 2012—தொகுதி 18—எண் 2**

**Wednesday the 1st February 2012—Volume 18—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 1–2–2012

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | *பக்கங்கள்* |
| **1.** | **வினாக்கள்–விடைகள்—** | |
| | *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 203-247 |
| **2.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—*தொடர்ச்சி* | 247-251, 256-271, 276-344 |
| | **திரு. பி.ஜி. நாராயணன்* | 247-251 |
| | *திரு. வி.சி. சந்திரகுமார்* | 251, 256-267 |
| | **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி* | 257-259, 311-313 |
| | **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி* | 260-261, 263-264 |
| | *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 261-262, 265, 266, 270, 287-288 |
| | *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்* | 262,265-266, 283-284, 315,317 |
| | *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 267-269, 278, 288,290, 291,292 |
| | *திரு. விஜயகாந்த்* | 269-270, 271 |

பக்கங்கள்

**2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 292-295, 306-311, 321 |
| திரு. எ.வ. வேலு | 271,276-295 |
| மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி | 279 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 281, 282 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 285-287, 289 |
| *திரு. எஸ்.கே. செல்வம் | 296-303 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 303-308, 313-323 |
| *மாண்புமிகு திரு. செ. தாமோதரன் | 305 |
| திரு. சு. குணசேகரன் | 309-310, 337, 339 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 318-319 |
| திரு. உ. தனியரசு | 323-325 |
| திரு. வெ. பொன்னுப்பாண்டி | 325-330 |
| திரு. ஆர். மனோகரன் | 330-336 |
| திரு. எஸ்.எஸ். சிவசங்கர் | 336, 341 |
| *திருமதி எஸ். விஜயதரணி | 336, 338-340 |
| செல்வி கே. பாலபாரதி | 338 |
| *திரு. பி.வி. கதிரவன் | 338 |
| திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 341-344 |





பக்கங்கள்

**3. அறிவிப்புகள்**—

| | |
|---|---|
| (அ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் திறப்பு | 252 |
| (ஆ) எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் | 272 |
| **4. பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி**— | 252-255 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 252 |
| மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா | 253 |
| செல்வி கே. பாலபாரதி | 254 |
| *திருமதி எஸ். விஜயதரணி | 254-255 |
| *டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் | 255 |
| **5. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவையில் நடந்து கொண்ட விதம்**— | 272-275 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 272 |
| திரு. அ. சவுந்தரராசன் | 273 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 273-275 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 344-346 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 18

## 2012 பிப்ரவரி 1, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்."*

*ஒழுக்கம் எல்லோருக்கும் உயர்வைத் தரும். அதனால் அந்த ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றிக் காக்க வேண்டும்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**11—**

### துணை மின் நிலையம்

****6859—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 பிப்ரவரி 1

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சங்ககிரி ஐவேலியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சங்ககிரி ஐவேலியில் புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிவடைந்து, இயக்கி வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஏந்தல், தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்று பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நவீன உடற்பயிற்சிக் கூடத்தை தன்னுடைய பொற்கரத்தால் திறந்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக பெண் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்ககிரி தொகுதியில், ஐவேலி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கக் கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற நேரத்தில், சங்ககிரி, ஐவேலியில் துணை மின் நிலையப் பணிகள் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடைந்து, இயக்கி வைக்கப்படும் என்று



2012 பிப்ரவரி 1]

கூறினார்கள். தேசிய நெடுஞ்சாலையிலிருந்து துணை மின் நிலையத்திற்குச் செல்லும் மண் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, அங்கு வைக்க வேண்டிய இரண்டு 50 டன் மின் மாற்றிகள், சாலை வசதி இல்லாத காரணத்தால், பக்கத்திலுள்ள சன்னியாசிப்பட்டி துணை மின் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து, விரைவாகத் துணை மின் நிலையம் செயல்பட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து, அந்தத் துணை மின் நிலையம் இயங்குவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக, விரைவாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய சங்ககிரி தொகுதிக்குட்பட்ட தேவூரில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு நீண்ட நாட்களாகியும், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படவில்லை. இதனால், அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்களும், விசைத்தறி நெசவாளர்களும் மற்றும் பொது மக்களும், குறைந்த மின்னழுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், தேவூரில் விரைவாகத் துணை மின் நிலையத்தைத் தொடங்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தப் பேரவையில் அமர வைத்த வாழும் வள்ளுவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், ஓய்வறியாச் சூரியன் தளபதியார் அவர்களுக்கும், (குறுக்கீடு) என்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க வேண்டும்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் கூடலூர், பந்தலூர் வட்டங்களில் மின் இணைப்பு கேட்கும்போது, உரிமைச் சான்றிதழ் கேட்கிறார்கள். ஆனால், கூடலூர், பந்தலூர் பகுதியைப் பார்த்தீர்களேயானால், பல வகையான நிலம் அங்கு இருப்பதனால், அனுபோகச் சான்றிதழ்தான் இருக்கிறது; உரிமைச் சான்றிதழ் கிடைக்காது. ஆகையினால், வீட்டு வரி செலுத்தும் அனைவருக்கும் மின்சாரம் வழங்கும் சிறப்புச் சலுகையை மலைப் பகுதிக்கு வழங்க இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.



2012 பிப்ரவரி 1]

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு வினாவைக் கேட்க விரும்புகின்றேன். என்னுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு, உங்கள் கேள்வியைத்தான் எடுத்திருக்கிறோம். நேரத்தை வீணாக்க வேண்டாம்.

**திரு. சி. சண்முகவேலு:** என்னுடைய மடத்துக்குளம் தொகுதியிலே, எலயமுத்தூர் ஊராட்சியிலே கடந்த மூன்று ஆண்டுகளாகக் கட்டி முடிக்கப்பட்டு, அந்த 110 KVA மின் நிலையமானது, இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. அது தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்கு உள்ளது; மூன்று கம்பங்கள் போட வேண்டியுள்ளது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய வகையில் விரைவாக நடவடிக்கை எடுத்து, நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைவிடப்பட்ட உடன்குடி அனல் மின் நிலையம் மீண்டும் துவங்கப்படுமா என மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற சூழ்நிலையிலே, இத்தகைய அனல் மின் நிலையங்கள் எல்லாம் தொடங்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். பதில் உள்ளதா?

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பில்லாத கேள்வி என்பதால், இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில், தேவதானம்பட்டி பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக குறைந்த மின்னழுத்தம் காரணமாக விவசாயிகளுக்கு இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம்கூட மின்சாரம் கிடைப்பதில்லை. இரண்டு ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் அங்குள்ள விவசாயிகள் தேவதானம்பட்டியில் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், அதற்கான முன்மொழிவும் அனுப்பப்பட்டிருக்கிறது. மக்கள் மிகச் சிரமத்திற்குள்ளான சூழ்நிலையில், அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 12–வது திட்டத்திலே அனுமதியளிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்து, பிறகு தகவல் சொல்கின்றேன். ஏனென்றால், 12–வது திட்டத்தின்கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் அமைக்க வேண்டிய துணை மின் நிலையங்களின் பட்டியல் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதிலே பார்த்து, பிறகு உங்களுக்குப் பதில் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி நேரத்தின்போது அவரவர்கள் இருக்கையில் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. அன்பழகன் அவர்களும், திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களும் இருக்கை மாறி அமர்ந்திருக்கின்றார்கள். எனவே,



2012 பிப்ரவரி 1]

அவரவர் இருக்கையில் அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதி விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற மக்கள் இருக்கின்ற தொகுதி. மேலவளவு சேக்கிப்பட்டி பகுதியில் மின்னழுத்தம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேக்கிப்பட்டி பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி 12–வது ஐந்தாண்டு திட்டத்திலே இடம்பெற்றிருந்தால் அந்தப் பணிகளை விரைவுபடுத்தவும், அப்படி இடம் பெறவில்லையென்றால், அடுத்து வருகின்ற திட்டங்களிலே அதை சேர்த்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள்.

*முற்பகல் 10–10*

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வணக்கங்கள் கோடிக் கோடி. இன்றைக்கு தியாகராய நகரில் வணிக நிறுவனங்கள் அதிகம் இருக்கின்றன. அங்கு அடிக்கடி மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. மேலும் மைலாப்பூரில் உள்ள Sub–station–லிருந்துதான் மின்சாரம் வந்து கொண்டிருப்பதாக சொல்கின்றார்கள். எனவே, இந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால், அங்கு வாழும் மக்களுக்கும் மற்றும் அங்குள்ள வணிக நிறுவனங்களுக்கும் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் அப்பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சென்னைப் பெருநகரத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. உறுப்பினர் கூறிய அந்தப் பகுதியில், துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் கண்டறியப்பட்டு, துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

**தரம் உயர்த்துதல்**

*__7274—திருமதி க. அழகுவேலு:__

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியை முதல் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தவும், இந்நகராட்சியில் ஆணையாளர் மற்றும் மருத்துவர் பணியிடங்களை நிரப்பவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி நகராட்சி முதல் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, இந்நகராட்சியின் செயல் அலுவலர் பணியிடத்தை நகராட்சி ஆணையாளராக மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்குத் தேவையான பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழகத்தின் காவல் தெய்வம் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கும், அதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

8–9–2011 அன்று சட்டசபையில் கருணையுடன் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தில் பேரறிஞர் அண்ணா, பாரத ரத்னா புரட்சித் தலைவர் ஆகியோருடைய திருவுருவச் சிலைகள் நிறுவப்படும் என்று அறிவித்ததற்கேற்ப புரட்சித் தலைவர் அவர்களுடைய பிறந்த நாளான 17–1–2012 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திருவுருவச் சிலைகளைத் திறந்து வைத்து கள்ளக்குறிச்சி நகரத்திற்கே பெருமை சேர்த்த கழகத்தின் காவல் தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, கள்ளக்குறிச்சி பகுதிவாழ் மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மேலும், இன்று சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள 'சி' பிளாக்கில் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பிரேத்தியேக உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்த மங்கையர் குல மாணிக்கம், எங்கள் காவல் தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆரணி நகராட்சி என்பது திருவண்ணாமலை நகராட்சிக்கு அடுத்த பெரிய நகராட்சியாகும். இந்நகராட்சியில் ஏறத்தாழ 63,230 நபர்கள் வசிக்கின்றனர். இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவுத் தொழிலாளர் பணியிடங்கள் 143. ஆனால், தற்போது பணியில் இருக்கின்ற தொழிலாளர்கள் 115. அதில் மாற்றுப் பணிக்காகச் சென்று விட்ட தொழிலாளர்களைத் தவிர, தற்போது 93 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், அந்நகராட்சியில் மருத்துவரும் இல்லை. ஐந்து துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடம் அனுமதிக்கப்பட்ட நிலையில், அங்கு தற்போது இரண்டு துப்புரவு ஆய்வாளர்கள்தான் பணியாற்றுகின்றனர். எனவே, இருக்கின்ற காலிப் பணியிடங்களை நிரப்பி, அந்நகராட்சியைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய நகராட்சி, முதல் நிலை நகராட்சி ஆகும். ஏற்கெனவே நகராட்சிகளில் பணியிடங்கள் காலியாகின்றபோது, அந்தப் பணியிடங்களை பூர்த்தி செய்கின்றபொழுது, அந்த நகராட்சியில் வருகின்ற வருவாயைப் பொறுத்து, அதாவது 49 விழுக்காடுக்கு அதிகமாக நிருவாகச் செலவு கூடுகின்ற நேரத்தில், அந்த காலிப் பணியிடங்களை நிரப்ப முடியாமல் போய் விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அதை அறிந்து, அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து, அனைத்து நகராட்சிப் பணியிடங்களையும் நிரப்புகின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அனைத்து நகராட்சிகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.



*முற்பகல் 10–15*

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாக முதலமைச்சராக இருந்த காலத்தில், எங்களுடைய தளபதி துணை முதலமைச்சராக இருந்த காலத்தில், ஒட்டன்சத்திரம் சிறப்பு நிலை பேரூராட்சி என்பது இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. இப்போது அங்கு ஆணையர், பொறியாளர், மருத்துவர் மற்றும் இதர பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை விரைவில் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரமாக இருக்கின்ற சூழ்நிலையாக இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நான் பதிலைச் சொல்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். பேரூராட்சியை செல்வாக்கின் காரணமாக, கடந்த கால ஆட்சியில், அவர்கள் செல்வாக்கை வைத்துக்கொண்டு இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அது பேரூராட்சியாக இருப்பதற்கு மட்டுமே தகுதியான இடமாகும். இவர்கள் நகராட்சியாக மாற்றுகின்றபோது ஆணையாளரை அரசு நியமிக்க வேண்டும். இப்படிப் பல்வேறு பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றிவிட்டுச் சென்றுவிட்ட காரணத்தினால், அவற்றையெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது சரி செய்து, ஏற்கெனவே சொன்னதுபோல அனைத்து இடங்களுக்கும் உரிய அதிகாரிகளை நியமிப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டாவது துணைக் கேள்வி கேட்பதனால், மூலக் கேள்வி கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடு) No. Please sit down. திரு. சக்கரபாணி, ஏற்கெனவே நீங்கள்

[2012 பிப்ரவரி 1

உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். மூலக் கேள்வி கேட்டவருக்குதான் இரு துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படும். (குறுக்கீடு) நீங்கள் விவாதத்தில் பேசும்போது அதைக் குறிப்பிடலாம்.

வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

**சீரமைப்பு**

***1165—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராந்தி அரசு விதைப் பண்ணை இயங்கி வரும் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராந்தி அரசு விதைப் பண்ணையில் உள்ள 4 கட்டடங்களில், இரு கட்டடங்கள் முழுவதும் பழுதடைந்து சீர் செய்ய இயலாத நிலையில் உள்ளன. மேலும், இரண்டு கட்டடங்களில் பழுதடைந்துள்ள கதவு, ஜன்னல்களில் வலை அடித்து மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விதைகள், இதர பொருட்களுக்குச் சேதாரம் ஏற்படாத வகையில் தற்காலிகமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை. மாற்றாக, திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, நெடும்பலம், கீராந்தி, தீபம்மாள்பட்டினம் ஆகிய பகுதிகளில் சிறப்பான முறையிலே விதை சுத்திகரிப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் கீராந்தி பகுதியிலே இருக்கக்கூடிய விதை சுத்திகரிப்பு மையத்தைப் பொறுத்தவரை, 4 பிரதான கட்டடங்கள் இருக்கின்றன. அந்தப் பிரதான கட்டடங்கள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை அங்கிருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் பயன்பெறுகின்ற வகையிலே புதிய கட்டடங்களாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராந்தி அரசு விதைப் பண்ணையில் 4 கிடங்குகள் உள்ளன. இவற்றில் 3 சிமெண்ட் கான்கிரீட் கூரையுள்ள கட்டடங்கள்; ஒன்று ஓடு வேய்ந்த கட்டடமாக இருக்கிறது. இவற்றில் 1958–1962–ல் கட்டப்பட்ட இரண்டு கட்டடங்கள் முழுவதும் பழுதடைந்து சீர் செய்ய முடியாத நிலையில் உள்ளன. 1972–ல் கட்டப்பட்ட இரண்டு கட்டடங்களின் மேல்தளம் பழுதடைந்துள்ளது. ஓரளவு பழுதடைந்து சீர் செய்யக்கூடிய நிலையில் உள்ள இரண்டு கட்டடங்களில் பழுதடைந்துள்ள கதவு, ஜன்னல்களில் வலைகள் அடித்து, மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விதைகள், இதர பொருட்களுக்குச் சேதாரம் ஏற்படாத வகையில் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் நடப்பாண்டில் கட்டடப் பராமரிப்புக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில் கீராந்தி அரசு விதைப் பண்ணையில் உள்ள கிடங்குகளில் மராமத்துப் பணிக்காக இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும்

திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை வட்டம், இருங்கூரில் ஒரு விதைப் பண்ணை சுமார் 250 ஏக்கரில் இயங்கி வந்தது. அதற்காக பல கட்டடங்களும் கட்டப்பட்டிருந்தன. அந்தப் பண்ணை இயங்காமல் சில காலமாக முடக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை மீண்டும் விதைப் பண்ணைக்காகவோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ அரசு உபயோகப்படுத்திக்கொள்ளுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 41 அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. அதாவது, 34 அரசு விதைப் பண்ணைகள், 6 மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகள், ஒரு பயறு விதைப் பண்ணை ஆகியவை சான்றிடல் மற்றும் ஆதார விதை உற்பத்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் 16 விதைப் பண்ணைகளில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள புதிய கிடங்குகள் தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இது போதுமானதாக இருக்கிறது. இருந்தாலுங்கூட, நம்முடைய உறுப்பினர் சொல்கின்ற இடத்தைப் பார்த்து, பரிசீலித்து, தேவைக்கேற்ப அந்த இடம் உபயோகப்படுத்திக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.





**14—**

## நவீனமயமாக்குதல்

***4455— திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகளை நவீனமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி கூட்டுறவு வங்கிகளை நவீனப்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு விரிவான வங்கிச் சேவையை ஆற்றிட ஏதுவாக அனைத்துக் கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்குதல், மைய வங்கியியல் முறைக்கு மாறுதல் மற்றும் மின்னணு வங்கியியல் போன்ற பணிகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றுக்கு கூட்டுறவு வங்கிகள் விரைவாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு எல்லாமுமாய் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களின் பாதம் பணிந்து, எனது வினாவைக் கேட்கிறேன். கூட்டுறவு வங்கிகளிலே மற்ற வங்கிகளைப்போல Core Banking, முழுவதுமாக கணணிமயமாக்கப்பட்ட சேவை அல்லது இணையதள சேவை, ஏ.டி.எம். வசதி எதுவுமே இல்லை. எனவே, இது எந்தக் கால அளவிற்குள் செய்து முடிக்கப்படும்? இதற்கான கால அளவு என்ன? தனியார் வங்கிகளிலே, அரசு வங்கிகளிலே இருக்கின்ற சேவை கூட்டுறவு வங்கிகளில் இல்லாத காரணத்தினால்

[2012 பிப்ரவரி 1

வாடிக்கையாளர்கள் குறைந்து கொண்டே போகிறார்கள். எனவே, இது எந்தக் கால அளவிற்குள் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்திருக்கிற வினாவிற்கு எனது பதில்; தற்சமயம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கூட்டுறவு வங்கிகள் ஒவ்வொன்றாக நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனுடைய விரிவாக்கத்தை நான் கூற விரும்புகிறேன். கூட்டுறவு வங்கிகள் வணிக வங்கிகளுடன் போட்டியிடும் வகையில் அவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாடிக்கையாளர்களுக்கு விரைவான வங்கியியல் சேவை வழங்கிடவும் கணினிமயமாக்குதல், மைய வங்கியியல் முறைக்கு மாறுதல், மின்னணு வங்கியியல் போன்றவற்றை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றுக்கு கூட்டுறவு வங்கிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுறவு வங்கிகளை நவீனப்படுத்துவதில் முதற்கட்டமாக, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் முறையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, முடிவுறும் நிலையில் உள்ளது. மின்னணு வங்கியியல் முறையை அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி நிகழ்நேர மொத்தத் தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவு வங்கிகளில் மின்னணு வங்கியியல் முறையைப் பொறுத்தமட்டில் மாநிலத்திலுள்ள 4,534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 4,496 சங்கங்கள் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியுடன் கணக்குகளைத் தொடங்கி, தற்சமயம் பணியாளர்களுக்கான பயிற்சியும் நடைபெற்று வருகின்றது.

தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் மின்னணு வங்கியியல் முறை செயல்படுத்தப்பட்டு, நடைமுறையில் உள்ளது. விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் அது விரிவாக்கப்படும்.



2012 பிப்ரவரி 1]

மேலும், மாநிலம் முழுவதும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கடன் சங்கங்கள் விரைவில் பணப் பரிமாற்றம் செய்யத்தக்க வகையில் மின்னணு வங்கியியல் முறையில் செயல்படுத்த தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்துவதற்கு மேற்கொண்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது. மாவட்ட மைய வங்கிகளைப் பொறுத்தமட்டில் 23 மாவட்டங்களில் மத்திய கூட்டுறவு வங்கிகளில் 737 கிளைகளில், 736 கிளைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்துக் கிளைகளும் மைய வங்கியியல் முறைக்கு மாற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–25

தமிழ்நாட்டிலுள்ள 120 நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும் கணினிமயமாக்கப்படும் பணி தொடங்கப்பட்டு, தற்போது முதற்கட்டமாக 1,559 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கணினிமயமாக்கப்படும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேற்கூறிய நடவடிக்கைகளால் கூட்டுறவு வங்கிகள் நவீனமயமாக்கப்படும் பணி கணிசமான அளவில் முன்னேற்றத்தினை எட்டியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இதற்குமேல் நீங்கள் என்ன கேள்வி கேட்கப் போகிறீர்கள்? Please sit down. போதும். (குறுக்கீடு) இதற்கு மேல் கேள்வி இருக்கிறதா? அமைச்சர் modernisation பற்றி எல்லாவற்றையும் கூறிவிட்டார். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இருந்தாலும் PACCS என்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலே கட்டட வசதி, பெட்டக வசதிகள் இல்லை. அவற்றையெல்லாம் செய்து தருவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா? அவற்றை அரசு செய்து தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில், அனைத்து PACCS– களிலும் இப்போது பாதுகாப்பு பெட்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்றுமுள்ள எல்லா இடங்களிலும் ஏறத்தாழ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெட்டக வசதி எல்லா இடங்களிலும் இருக்கிறது என்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் பெட்டக வசதி இல்லை என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். எந்த இடத்தில் இல்லையோ, அந்த இடத்தை specific– ஆக mention செய்யும்போது அந்த இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். எந்த இடம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். நீங்கள் general– ஆக சொல்லக்கூடாது. குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட இடையாறு போன்ற பகுதிகளிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பெட்டக வசதி இல்லை. அதுமட்டுமல்ல, கிடங்கும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமும் ஒரே இடத்தில் இருக்கின்றன. அதனுடைய குடோன், வங்கி அனைத்தும் ஒரே இடத்தில் இருக்கிறது. அதாவது, இடையாறு, முகையூர், கண்டாச்சிபுரம் போன்ற பகுதிகளிலே கிடங்கு கட்டுவதற்காக இப்போது, நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மற்ற இடங்களுக்கு அதுபோல் இல்லை. அதனால்தான கட்டட வசதி இல்லை. பெட்டகமும் அவரவர்கள் வசதிக்கு ஏற்பாடு செய்துகொள்கிறார்களேயொழிய, துறை மூலமாக இதுவரை பெட்டகம் வரவில்லை என்பதை என்னால் சொல்ல முடியும். வேண்டுமானால், தங்களிடத்திலே பட்டியலைக்கூட நான் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்டக வசதி அனைத்து இடங்களிலும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் அந்த ஊரில் இல்லாவிட்டால் உடனடியாக அது அமைக்கப்படும். அதுமட்டுமல்ல, அனைத்து இடங்களிலும் அந்தந்த வங்கிகளின் சுய நிதியில் அல்லாமல் நபார்டு வங்கி மூலமாக வாங்கப்பட்ட நிதி மூலமாக இவை அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் போதுமா? வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

**சாலை வசதி**

***1566—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம்–நெட்டூர் ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆலங்குளம்–நெட்டூர் ஒருவழித் தடச் சாலையில் 0/0 முதல் 0/4 வரை 4 கிலோ மீட்டர் நீளம் வரை இடைவழித் தடச் சாலையாக ரூ.70 இலட்சத்தில் அகலப்படுத்த நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், அலைகடல் ஓய்ந்து போனாலும், தமிழக மக்களுக்காக இரவும் பகலும், கண்துஞ்சாது தினமும் ஒரு திட்டத்தை அள்ளித் தந்துகொண்டிருக்கும் காவியத் தாயை வணங்குகிறேன். ஆலங்குளம்–நெட்டூர் சாலை சுமார் 10 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இதில் தினமும் 300–க்கும் மேற்பட்ட வாகனங்கள் செல்கின்றன. நல்லூரில் மேல்நிலைப் பள்ளி, கல்லூரி அமைந்துள்ளன. இதன் அருகில் 15–க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து சுமார் 1,000 மாணவ, மாணவிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த இலவச மிதிவண்டிமூலம் வந்து செல்கிறார்கள். மேலும், இது விவசாயம் மிகுந்த பகுதியாதலால், அக்டோபர் மாதம் நெல் நடவுக் காலம். அப்போது டிராக்டர்களில் gauge wheel பொருத்தி அந்தச் சாலையில் செல்கிறார்கள். ஒரு வருடம்கூட அந்தத் தார்ச் சாலைகள் அந்தப் பகுதியில் பழுதடையாமல் இருப்பதில்லை. 10 கிலோ மீட்டர் தூரமும் தார்ச் சாலை பழுதடைந்துவிடுகிறது. ஆகவே, இந்த ஒருவழிச் சாலையை இருவழி சிமெண்ட் சாலையாக மாற்றியமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 3 ஆண்டுகளில் 2,400 கோடி ரூபாய் செலவில் 963 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகளை இருவழிச் சாலைகளாகவும், 3,700 கிலோ மீட்டர் மாவட்டச் சாலைகளை இடைவழிச் சாலைகளாகவும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், போக்குவரத்து செறிவின் அடிப்படையில் மாவட்ட இதர சாலைகளை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*முற்பகல் 10–30*

திருநெல்வேலி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த ஆலங்குளம்–நெட்டூர் சாலை ஒரு மாவட்ட இதரச் சாலையாகும். இது கிலோ மீட்டர் 0/0 முதல் 0/10 வரை, 10 கிலோ மீட்டர் நீளம் உள்ள ஒருவழித் தடச் சாலையாகும். 2011–2012 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 0/0 முதல் 0/4 வரை 4 கிலோ மீட்டர் நீளம் உள்ள ஆலங்குளம்–நெட்டூர் ஒருவழிச் சாலையை இடைவழிச் சாலையாக ரூபாய் 70 இலட்சத்தில் அகலப்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி தொடங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் உள்ள 6 கிலோ மீட்டர் சாலையை இருவழிச் சாலையாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நடப்பாண்டிலே அதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதியில், 7.6 கிலோ மீட்டர் நீளமுள்ள பாப்பாக்கோயில்–இலுப்பூர் சாலை நீண்ட நாட்களாக சீர் செய்யப்படாமல் உள்ளது. இதை உடனடியாகச் சீர்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் பழுதடைந்துள்ளனவோ அந்தச் சாலைகளைச் சீர் செய்யவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதி ஒரு சுற்றுலாத் தலம் ஆகும். மேலும், அது அதிகப்படியான தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. மேட்டூர்–மேச்சேரி சாலை அதிகப்படியான லாரிகள் வந்து

செல்கின்ற ஒரு பகுதியாக இருப்பதாலும், ஒருவழிச் சாலையாக இருப்பதாலும் அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துகள் தினந்தோறும் ஏற்படுகின்றன. இந்த விபத்தைத் தடுக்க மேச்சேரி முதல் மேட்டூர் வரை இருவழிச் சாலையாக மாற்றியமைக்க எங்களுடைய சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியிலிருந்து திண்டிவனம் வரையிலே செல்லக்கூடிய சாலை மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற சாலையாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக மத்திய அரசை அணுகி, என்னுடைய கேள்விக்குப் பதில் அளிப்பார் என்ற நம்பிக்கையில் கேட்கின்றேன். அந்தச் சாலை மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற சாலை. அந்தச் சாலைப் பணிக்கு டெண்டர் விடப்பட்டு இன்னும் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. அந்தச் சாலையில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பேருந்துகள், புதுச்சேரி, திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற பகுதிகளுக்குப் போய் வருகின்றன. அந்தச் சாலையில் எப்போது பணி தொடங்கும் என்பதை மத்திய அரசோடு தொடர்புகொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலை சீர் செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பணி இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசிலே அவர்களது தி.மு.க. அமைச்சர்கள் தொடர்ந்து இடம்பெற்றுள்ள நிலையிலும் தமிழகத்தில் இருக்கின்ற அந்தச் சாலை எந்த நிலையில் இருக்கின்றது என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் உணர வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசில் இடம் பெற்றிருக்கின்ற அமைச்சர்கள் மூலமாக அதை வலியுறுத்தி உடனடியாக அந்தச் சாலையைப் போடுவதற்கான ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி மலைக்கோயிலுக்குச் செல்லும் மற்றும் சோளிங்கர், அரக்கோணம் செல்கின்ற நெடுஞ்சாலையிலே நந்தியாறு குறுக்கே பாலம் கட்டப்பட்டு, நான்கு ஆண்டுகளாக முடிக்கப்படாமல் இருக்கிறது. அது அதிகமான போக்குவரத்து நெரிசல் உள்ள இடம் என்பது நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அந்தப் பாலம் மீண்டும் கட்டப்பட பணிகள் ஆரம்பிக்கப்படாமலே உள்ளன. எப்போது அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும், ஆரம்பித்தால் எப்போது முடிக்கப்படும் என்பதையும் இந்த அவையின் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய வினாவிற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் தனியாக வினா எழுப்பினால் அதற்கான பதில் அளிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

முற்பகல் 10–35

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே National Highway–ஆக இருந்தாலும், சென்னையிலிருந்து பணகுடி வரையிலும் மட்டுமே நான்கு வழிச்சாலை செல்கிறது. குமரி மாவட்டத்திற்கு இது ஒரு அவமானமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். பணகுடியிலிருந்து குமரி மாவட்ட எல்கையான களியக்காவிளை வரை நான்கு வழிச்சாலைப் பணியை ஆரம்பிக்கவில்லை. அதைத் துரிதப்படுத்த வேண்டும். மத்தியில் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவனாக நான் இருந்தாலும், நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் மூலமாக மத்திய அரசிடம் சொல்லி, இந்தப் பணியை ஆரம்பிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே காங்கிரஸ் கட்சி ஆளுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதே இயக்கத்தைச் சார்ந்தவர். இந்தத் தேசிய நெடுஞ்சாலை மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் வருகின்ற சாலையாகும். ஆகவே, மத்தியிலே இதை எடுத்துச்சொல்லி, தேவையான நிதியைப் பெற்று உடனடியாக இந்தச் சாலை அமைக்கின்ற பணியைச் செய்ய வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கிராமப்புறங்களில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் மிகவும் பழுதுபட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். மழையின் காரணமாகவும், மற்ற பல காரணங்களினாலும் தொடர்ந்து கிராமப்புறச் சாலைகள் மிக மோசமாகிக்கொண்டே இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தினுடைய கிராமங்களுக்குச் செல்லக்கூடிய ஒட்டுமொத்த சாலைகளையும் சரிசெய்வதற்கு நமது





துறையினுடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை துறையைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொடர் மழையின் காரணமாக பாதிக்கப்பட்டவற்றையெல்லாம் சீர்செய்வதற்காக, நிதி ஒதுக்கீடு செய்து, அந்தச் சாலைகள் எல்லாம் சீர்செய்யப்பட்டு வருகின்றன. தற்போது புயலால் பாதிக்கப்பட்ட சாலைகளுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். பணியைத் துவக்குவதற்காக இப்போது டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளெல்லாம் விரைவாகச் செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். கிராமச் சாலைகளைப் பொறுத்தவரைக்கும் உள்ளாட்சி அமைப்பின்கீழ் வருகின்ற அச்சாலைகள், நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

**திரு. எஸ். செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட திருச்சி–தஞ்சை இடையிலான NH– 67 தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பால் பண்ணை முதல் துவாக்குடி வரையிலான சர்வீஸ் சாலை அமைக்க ஏற்கெனவே 29–8–2011 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு, இன்றுவரை சர்வீஸ் சாலை அமைக்கும் பணி துவக்கப்படாமல் உள்ளது. அதனால் விபத்துகள் அதிகரித்து, உயிரிழப்பு ஏற்படுகிறது. எனவே, சர்வீஸ் சாலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 16,* மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

**தூர் வாருதல்**

***271—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை அணையினைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் பேச்சிப்பாறை அணையினைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வி எழுப்பியுள்ளார். அரசு ஆவன செய்யும்.

(ஆ) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசில், உலக வங்கி நிதியுதவியுடன் 2011–2012 ஆம் ஆண்டில் அணைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல் திட்டத்தின்கீழ், பகுதி–II–ல், ரூ.33.25 கோடிக்கு சுருக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 5.00 கோடிக்கு பேச்சிப்பாறை அணையினைத் தூர் வாருவதற்கென வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதலும், நிதியுதவியும் கிடைக்கப் பெற்ற பின் பேச்சிப்பாறை அணையினைத் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பொதுப் பணித் துறை மற்றும் ஊராட்சி, நகராட்சிக்குத் தேவையான கட்டுமான வேலைகளுக்கும், பொதுமக்கள் வீடுகள் கட்டுவதற்கும் தூத்துக்குடியிலிருந்து மணல் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆகவே, பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவதன்மூலம் கிடைக்கும் மணலை அரசு விலை நிர்ணயம் செய்து, அது விநியோகம் செய்யப்பட வேண்டுமென்றும், அரசுக்கு அதனால் வருமானம் கிடைக்கும் என்றும், குமரி மாவட்ட மக்களும் அதிக அளவில் பயன்பெறுவார்கள் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அணையைத் தூர் வார மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறையிலிருந்து சுமார் 17 கிலோ மீட்டர் நீளத்தில் செல்லும் அந்தக் கால்வாயைத் தூர் வாரி, பழுதுபார்த்து, புனரமைக்கும் பணியைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்க்கால்களைத் தூர் வாருவது பற்றிப்

[2012 பிப்ரவரி 1

பரிசீலிக்கப்பட்டு அப்பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டுகளுக்கு முன்பாக முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய இங்கிலாந்து பொறியாளர் கர்னல் பென்னி குயிக் அவர்களுக்கு தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் உருவச் சிலையுடன் கூடிய புதிய மணி மண்டபத்தைக் கட்டுவேன் என்று கூறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ஐந்து மாவட்ட விவசாயிகளின் சார்பாக முதற்கண் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அணையைக் கட்டிய பென்னி குயிக் அவர்கள் அமைத்த அந்த நீர்வரத்து வாய்க்கால் வழியாகத்தான் தென் மாவட்டங்களுக்கு நீர் சென்றிருந்தது. 50 ஆண்டுகளுக்கு முன்பாக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வைகை அணையில் ஒரு அணையைக் கட்டினார்கள். அந்த அணையின் மூலமாகத்தான் தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்ட விவசாயிகளுக்கு நீராதாரமும், குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்க. தமிழ்ச்செல்வன், அன்பு கூர்ந்து கேள்விக்கு வாருங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** கேள்விதான் கேட்கிறேன். அப்பொழுது அந்த அணையினுடைய கொள்ளளவு 71 அடி. இப்பொழுது அந்த அணையினுடைய கொள்ளளவு 50 அடிக்குக் குறைவாகக் குறைந்திருக்கிறது. காரணம் மணலும், மண்ணும் சேர்ந்து 22 அடி தண்ணீர் தேக்க முடியாத ஒரு சூழ்நிலை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேனி மாவட்டம் வருகின்றபொழுது ஆயிரக்கணக்கான விவசாயிகள் அந்த அணையைத் தூர் வார வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு அந்த அணையைத் தூர் வாருவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. விரைவிலே அது முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் 11 கால்வாய்கள் தூர் வார வேண்டும் என்ற மக்களுடைய நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றுவதோடு, அதன் மூலமாக கொசுத் தொல்லையை ஒழித்து, மதுரை மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுத் தொல்லை எல்லாம் பொதுப் பணித் துறையிலே வராது. அது உள்ளாட்சித் துறையின்கீழ் வருகின்ற கேள்வி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

### சுற்றுலாத் தலம்

*__4340—திருமதி ம. சக்தி:__

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, நாங்கூரில் உள்ள எழு திருப்பதி பகுதியை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண்ணினத்தின் காவல் தெய்வமாக இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்திற்குள்ளாகவே எப்படி ஓய்வு அறையை மிக நவீன வசதியோடு அளித்து எங்களைப் பெருமைப்படுத்தினார்களோ, அதைப்போலவே இன்று பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திற்குள்ளாக உடற்பயிற்சிக் கூடம் அமைத்துள்ளார்கள். பெண்களுடைய நலனிலே மிகுந்த அக்கறை கொண்ட, வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவியாக இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய பணிவான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**விடை—**

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி அருகேயுள்ள திருநாங்கூரைச் சுற்றி 108 திவ்விய தேசங்களில் அருள்மிகு திருநாராயண பெருமாள், வைகுண்டநாத பெருமாள், வன புருஷோத்தம பெருமாள், குடமாடும் கூத்தப்பெருமாள், பார்த்தசாரதி பெருமாள், செம்பொன் அரங்கர் மற்றும் அருள்மிகு அன்னம்பெருமாள் என ஏழு வைணவத் திருத்தலங்களை புனித சுற்றுலாத் தலங்களாகக் கருதி ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், 2005–2006 ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி, விளக்கு வசதி மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கழிப்பறை வசதி போன்ற வசதிகளை மேற்கொள்வதற்காக 22.28 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன என்பதை இம்மாமன்றத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.



2012 பிப்ரவரி 1]

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இன்று சட்டமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பு வளாகத்தில் பெண்களுக்கென்று பிரத்தியேக உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்திருக்கும் பெண்ணினத்தின் பெருமையாம், எங்கள் அன்னை, ஸ்ரீரங்கத்து நாயகி, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது கோடானுகோடி நன்றி மலர்களை அம்மா அவர்களது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கூரில் உள்ள ஏழு திவ்விய தேசங்களான எழு திருப்பதி என்று அழைக்கப்படுகின்ற அந்தத் திருத்தலங்களில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் அனைத்துப் பணிகளும் சிறப்பாக இருந்தன. கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அப்படிப்பட்ட திருத்தலங்களெல்லாம் எந்தவொரு பராமரிப்புமின்றிக் கேட்பாரற்று கிடந்ததனால் (குறுக்கீடுகள்) நிச்சயமாக புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய மூன்றாவது முறையான ஆட்சியில் அனைத்துத் திருத்தலங்களும் சிறப்பாகச் செயல்படும் என்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு இதய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கும் எங்களுடைய கோடானுகோடி நன்றியினை சீர்காழி தொகுதி மக்களின் சார்பாக சமர்ப்பித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திற்குப் புதியவர். அவர் குறிப்பிட்டுச் சொல்கிறபோது மைனாரிட்டி அரசு என்று சொன்னார். தி.மு.க.–வினர் மைனாரிட்டியாகத்தான் அந்த ஆட்சியை நடத்தினார்கள் என்பதை நாடு அறியும். ஆகவே அது தவறு அல்ல. (குறுக்கீடுகள்)

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சட்டமன்றத்திற்குப் புதியவர் என்றாலும் அவர் குறிப்பிட்டதில் தவறில்லை. அந்தப் பேச்சை விட்டுவிடுங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மூன்றாவது ஆட்சி மிக மெஜாரிட்டியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி மைனாரிட்டி ஆட்சி என்பது தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, இந்திய மக்களுக்கு மட்டுமல்ல, உலகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மைனாரிட்டி ஆட்சி என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். இதில் பெரும்பான்மை என்பது என்ன, சிறுபான்மை என்பது என்ன என்பதை நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு பெரும்பான்மையான அரசுக்கு எத்தனை உறுப்பினர்கள் தேவை? (குறுக்கீடுகள்) That is different. It lasted for five years என்பது வேறு. நான் அதற்குள்ளே போகவில்லை. பெரும்பான்மைக்கும், சிறுபான்மைக்கும் differentiate பண்ணுங்கள். நான் உங்கள் argument–ஐக் கேட்கிறேன். What is the difference between majority and minority? (குறுக்கீடுகள்) அதைச் சொல்லுங்கள். பெரும்பான்மைக்கு எத்தனை உறுப்பினர்கள் தேவை? எத்தனை பேர் இருந்தால் சிறுபான்மை? நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அப்போது கொண்டு வந்தோமே நம்பிக்கையில்லாத் தீர்மானம்? அன்றைக்கே அது கொண்டு வரப்பட்டதே? இதே அவையிலே Speaker மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோமே அன்றைக்கு! அன்றைக்கு Speaker மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோமே! மைனாரிட்டி என்பதனால்தானே அதைக் கொண்டு வந்தோம்? Please sit down. இதில் கோபப்படுவதற்கு ஒன்றுமில்லை. It is not an unparliamentary word. மெஜாரிட்டி என்பது அதிகபட்சமான



2012 பிப்ரவரி 1]

உறுப்பினர்களைக் கொண்டது. மைனாரிட்டி என்பது மெஜாரிட்டியில் இல்லாதது. அதைத்தான் அவர்கள் சொன்னார்கள். அதை இத்தோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

முற்பகல் 10–50

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது மைனாரிட்டி ஆட்சி என்று சொல்லி, அது ஒரு சர்ச்சையாக எழும்பி, அது ஒன்றும் unparliamentary word அல்ல என்று நம்முடைய சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு தந்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆக, என்னைப் பொறுத்தவரையில் நான் குறிப்பிட விரும்புவது, மைனாரிட்டியாக இருந்தாலும் ஐந்தாண்டு காலம் ஆட்சி நடத்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கலைஞருடைய ஆட்சி என்பதிலே எங்களுக்குப் பெருமைதான். எனவே, அதைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று தி.மு.க. உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு இந்தப் பிரச்சினை முடிந்தது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மெஜாரிட்டி அரசாக இருக்கின்றது. உள்ளாட்சித் தேர்தலிலும் மாபெரும் வெற்றியைப் பெற்று அதிலும் மெஜாரிட்டியாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 32 மாவட்டங்களிலும் District Chairmen–ஆக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே இருக்கின்றார்கள். 10 மேயர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சகோதரி திருமதி சக்தி அவர்கள் கேட்ட இந்த வினாவிற்குக் கூடுதல் தகவலாகச்

[2012 பிப்ரவரி 1

சொல்கிறேன். திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் போன்ற பகுதிகளிலே உள்ள சோழநாட்டு திருப்பதிகளில் 40 கோயில்கள் உள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அத்துணைக் கோயில்களுக்கும் அரசு 9 கோடியே 92 இலட்சம் ரூபாய் அளவில் சுற்றுலாப் பயணிகளுக்கு சாலை வசதிகள் செய்து கொடுப்பதற்கான ஆயத்தப் பணிகள் தயாராக இருக்கின்றன என்பதை இந்தத் தருணத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## சமுதாயக் கூடம்

***564—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, நவலை கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் குடியிருப்பில் இல்லத் திருமணங்கள், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஆதி திராவிட நலத் துறையின்கீழ் ஆண்டுதோறும் 10 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலம் பெண்ணாகரம் வட்டம், குழிப்பட்டி கிராமத்தில் ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. அரூர் வட்டம், நவலை கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஏதுவாக அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏதுமில்லை. மேலும், தனியார் பட்டா நிலங்களைத் தானமாக வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை. எனவே, அரூர் வட்டம், நவலை கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட போதுமான இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் மேற்கண்ட கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட நவலை கிராமத்தில் 1,200 குடியிருப்புகளில் ஆதி திராவிட மக்கள் வாழ்கிறார்கள். அதைச் சுற்றி இருக்கக்கூடிய ஏறக்குறைய 8 பஞ்சாயத்துகளில் ஒலையம்பள்ளி பக்கத்தில் சாமுண்டஹள்ளி, ஏலவடை, மொரப்பூர் போன்ற எந்தப் பஞ்சாயத்திலுமே, சமுதாயக் கூடம் இல்லை. 10,000/– ரூபாய் அல்லது 20,000/–ரூபாயில் ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்ற, திருமண நிகழ்ச்சிகளையோ அல்லது பல்வேறுபட்ட காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளையோ நடத்த முடியாமல் இருக்கக்கூடியவர்களாக இந்தப் பகுதி ஏழை ஆதி திராவிட மக்கள் உள்ளனர். அதற்காகவே இந்த சமுதாயக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கு சர்வே எண் 29/1–ல் 45 சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற ஆட்சிக் காலத்தில் இதற்கான ஆய்வுகளெல்லாம் செய்யப்பட்டன. எனது பக்கத்துத் தொகுதியாக இருந்தாலும் நானே அந்தப் பகுதிக்குச் சென்று தாட்கோ அதிகாரிகளுடன் ஆய்வில் ஈடுபட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, கதைக்கெல்லாம் போக வேண்டாம். கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருப்பதற்கு பதில் இதுதான். சர்வே எண் உள்பட நான் சொல்லியிருக்கிறேன். சர்வே எண் 29/1–ல் 45 சென்ட் நிலம் என்பது அங்கு சமுதாயக்

கூடம் கட்டுவதற்கு ஏதுவாக உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுடன், இந்த வருடமே நவலை கிராமத்தைச் சுற்றியிருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாக, ஒரு சமுதாயக் கூடம் கட்டித் தர முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் 96,599 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இதில் நவலை கிராமத்தைப் பொறுத்தமட்டில் 1,500 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் 5,035 ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஆதி திராவிட குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் இல்லத் திருமணங்கள், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அரூர் வட்டம், நவலை கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஏதுவாக, அரசுப் புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சர்வே நம்பரைக் குறிப்பிட்டு, அங்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, வரும் நிதியாண்டில் நிறைவேற்ற ஏற்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. டில்லி பாபு, மகிழ்ச்சிதானே? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் அம்பேத்கர் நகரத்திற்கு இதேபோன்று சமுதாயக் கூடம் கட்ட வேண்டுமென்று கோரியபோது நிதி இல்லாதபட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் 20 இலட்சம் ரூபாயை ஒதுக்கியும், இரண்டு ஆண்டுக் காலமாக கட்டப்படாமல் பேரூராட்சி நிருவாகமும், மாவட்ட நிருவாகமும் அதை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டன. இப்படி, நிதி இல்லாதபட்சத்தில், நிதியை சட்டமன்ற உறுப்பினர் அளிக்கின்றபட்சத்தில் கட்டுவதற்குக்கூட முன்வராமல், அப்படியே கிடப்பில் போடப்பட்டு வருகிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, அமைச்சர்தான் கட்டித் தருவதாகச் சொல்லிவிட்டாரே! அதன் பின்னரும் அதையே பேசிக்கொண்டிருந்தால் எப்படி?

**திரு. ப. டில்லி பாபு:** தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ஓர் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 சமுதாயக் கூடங்கள் என்றோ, நபார்டு திட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு திட்டங்களின் மூலமாகவோ கட்ட வேண்டுமென்று ஒரு வரைமுறை இருக்க வேண்டும். இத்தனை ஆயிரம் ஆதி திராவிட இன மக்கள் வாழக்கூடிய பகுதிக்கு சமுதாயக் கூடம் அமைக்கப்படும், இந்த வருடத்தில் இத்தனை கோடி ஒதுக்கப்படும் என்று ஒரு வரைமுறை இருக்க வேண்டும். எதிர்காலத்தில் எத்தனை சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு அரசின் செயற்குறிப்பில் உள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் என்பதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். உங்கள் தொகுதிக்கு நீங்கள் கேளுங்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதெல்லாம் கடந்த ஆட்சியில். ஏனென்றால், கடந்த ஆட்சியில் 5 வருடங்களாக எந்த விடுதிகளும் கட்டப்படவில்லை. எந்தக் கட்டடமும் கட்டாமல் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வந்தவுடன் ஆதி திராவிட மக்கள் கேட்கிற கோரிக்கைகளையெல்லாம் ஏற்று செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, வரும் ஆண்டில் இந்தப் பணியைச் செய்து தருவோம் என்று சொல்லிவிட்டேன். எந்தக் கட்டடமும் அதுமாதிரி இருந்தால் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அதை அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக வரும் நிதியாண்டில் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, specific ஆக mention செய்து அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

[2012 பிப்ரவரி 1

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் உள்ளடங்கிய கும்பகோணம் ஒன்றியம், மானம்பாடி ஊராட்சியில் 600–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் வாழ்கிறார்கள். அந்த ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். மேலும், வெறும் கட்டடமாக இல்லாமல், திருமண வைபவங்களுக்குத் தேவைப்படக்கூடிய சமையல் பாத்திரங்கள் மற்றும் நாற்காலிகள் உள்ளிட்ட பொருட்களும் அரசின் சார்பில் ஆதி திராவிட மக்களுக்குக்காகக் கட்டப்படுகிற சமுதாயக் கூடங்களுக்கு வழங்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்டுவதற்குத்தான் இதுவரையிலும் வழிவகை உள்ளது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாத்திரம் மற்றும் உபகரணங்களுடன் சமுதாயக் கூடம் கட்ட இயலுமா என்று கேட்டுள்ளார். இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தொகுதிக்கு உட்பட்ட, ஈஞ்சம்பாக்கம் கிராமத்திலும், அதனைச் சுற்றிலும் அதிகமான ஆதி திராவிட மக்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே ஓர் ஆதி திராவிட மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே ஈஞ்சம்பாக்கம் கிராமத்திலே ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு ஆவன செய்யுமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகரில் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட ஆதி திராவிட விடுதி உள்ளது. அதற்கு 'காந்தி ஆஸ்டல்' என்று பெயர். அது பராமரிப்பு இன்றி, இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கிறது.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பி.வி. கதிரவன்:** புதிதாகக் கட்டடம் கட்டித் தர அரசிடம் கருத்துரு இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் அதற்குப் பதில் அளிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் அச்சாரமாய், ஆதாரமாய், ஆதார சுருதியாய், ஆராதனைக்குரிய தெய்வமாய் விளங்கும் எங்கள் தமிழ் அன்னையை வணங்குகிறேன். பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்ற தனித் தொகுதிக்கு உட்பட்ட

[2012 பிப்ரவரி 1

பெரம்பலூர் நகரில் ஆதி திராவிட மக்கள் பெருமளவில் வசிக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய வீட்டு சுப காரியங்களை நடத்திக் கொள்வதற்கு சமுதாயக் கூடம் ஒன்று தேவைப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்கு அள்ளி, அள்ளித் தருகின்ற அம்மாவின் அட்சய பாத்திர அரசு, அங்கு சமுதாயக் கூடம் அமைக்க முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## பேருந்து வசதி

***1756—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வந்தவாசி–மருதாடு, வழூர், சாத்தனூர், கீழ்நர்மா வழியாக உத்திரமேரூருக்குப் புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வந்தவாசியை மையமாகக் கொண்டு புதிய நகர வழித்தடங்களில் பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று வந்தவாசி, மருதாடு, வழூர், சாத்தனூர், கீழ்நர்மா வழியாக உத்திரமேரூருக்குப் புதிய நகரப் பேருந்து இயக்க முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், என்னுடைய வந்தவாசி தொகுதியிலே மருதாடு, வழூர், சாத்தனூர், கீழ்நர்மா வழியாக உத்திரமேரூருக்குப் புதிய பேருந்து இயக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு என்னுடைய தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

## இட ஒதுக்கீடு

***7129—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இஸ்லாமியப் பெருமக்கள் புனிதப் பயணமான ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு மத்திய அரசிடம் கூடுதல் இட ஒதுக்கீடு பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தக் கேள்விக்குரிய பதில் சொல்லும் நேரத்தில், இதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள்

நெஞ்சங்களில் நிறைந்து நீங்காத இடம் பெற்றுள்ள இத்தரணி போற்றும் தங்கத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்தப் பதிலை அளிக்க விழைகிறேன்.

**விடை—**

இஸ்லாமிய மக்கள்தொகை அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிற்கான ஹஜ் பயணம் செல்வதற்கான ஒதுக்கீட்டை சவுதி அரேபிய அரசு நிர்ணயிக்கிறது. அதன்படி, இந்தியாவிற்கான இவ்வொதுக்கீட்டிலிருந்து *2001* ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அந்தந்த மாநில இஸ்லாமிய மக்கள்தொகைக்கேற்றவாறு மாநிலங்களுக்கு ஹஜ் பயணத்திற்கான ஒதுக்கீடு பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

எனவே, சவுதி அரேபிய அரசு, இந்தியாவிற்கான ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீட்டைக் கூடுதலாக அளிக்கும்பட்சத்தில், சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சியால் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு அதிக ஒதுக்கீடு பெற்று, தமிழ்நாட்டிலிருந்து அதிக எண்ணிக்கையில் ஹஜ் பயணிகள் ஹஜ் பயணத்தை மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த *2011* ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டிற்கு *2,612* இருக்கைகள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டன. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர், சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *4-7-2011* அன்று தமிழ்நாட்டிலிருக்கும் இஸ்லாமியப் பெருமக்கள் அதிக அளவில் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள ஏதுவாக கூடுதல் இருக்கைகளைத் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யுமாறு பாரதப் பிரதமர் அவர்களுக்கு வலியுறுத்தி கடிதம் எழுதினார்கள். இதன் பலனாக *1,472* இருக்கைகள் கூடுதலாக தமிழ்நாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, *4,084* ஹஜ் பயணிகளும், *6* குழந்தைகளும் தமிழ்நாட்டிலிருந்து புனித ஹஜ் பயணம் மேற்கொண்டனர். இத்தகைய மாபெரும்





உதவி புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஹாஜிக்களின் சார்பாக இந்த நல்ல தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், சிறுபான்மை மக்களுடைய காவல் தெய்வமாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்குக் கோடானுகோடி நன்றி மலர்களை முதலில் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் தெரிவித்ததுபோல சென்ற வருடம் புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்ட இஸ்லாமியப் பெருமக்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிக இடம் பெற்றுத் தந்ததற்கு சிறுபான்மை மக்களுடைய காவல் தெய்வமாக விளங்குகின்ற அம்மா அவர்களுடைய பாதங்களுக்கு மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் இஸ்லாமியப் பெருமக்கள் அதிகம் வசிக்கின்றார்கள். அவர்கள் வருடா வருடம் புனித ஹஜ் பயணம் செல்லும்பொழுது விண்ணப்பித்தவர்களில் பாதிப் பேருக்கு மேல் பயணம் செய்வதற்கு இடம் கிடைப்பதில்லை. எனினும், சென்ற வருடம் இடம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வருடம் அதிக எண்ணிக்கையில் இஸ்லாமியப் பெண்களும், ஆண்களும் ஹஜ் பயணம் செல்லவிருப்பதால், இஸ்லாமியப் பெருமக்களுடைய நலன் கருதி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறுபான்மை மக்களுக்கு மீண்டும் அதிக இடம் பெற்றுத் தருவதற்கு, அம்மா அவர்களுடைய மலர்ப் பாதம் வணங்கி, தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு முயற்சி எடுத்து அதிக இடம் வாங்கிக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயண ஒதுக்கீட்டில் அளிக்கப்படுகிற கூடுதல் இட ஒதுக்கீட்டில் செல்கிற இஸ்லாமியப் பெருமக்களில் சிலர் பொருளாதார வசதி இல்லாமல் இருக்கிறார்கள். இந்த அரசு அவர்களுக்கு இலவசமாக ஹஜ் பயணம் செய்ய வழிவகை செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய ஒரு திட்டம் எந்த அரசிடமும் கிடையாது. ஆனால் ஹஜ் பயணிகளுக்கு அரசு மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. அதை அனைவரும் அறிவர். இது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஹஜ் பயணிகளுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக தமிழக முதலமைச்சர் மேற்கொண்ட முயற்சிக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மஹாராஷ்டிராவில், கேரளாவில் மற்றும் வேறு சில மாநிலங்களில் ஹஜ் செல்லும் பயணிகள் புறப்படுவதற்கு முன்பாக தங்குவதற்காக Haj House அரசாங்கத்தின் சார்பாக கட்டப்பட்டிருக்கின்றது. சென்னையிலே தனியாருடைய இடத்தில்தான் தங்கவேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. இந்த ஆட்சியிலே தமிழகத்தில் சென்னையில் அரசாங்கத்தின் சார்பாக Haj House கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிச்சயமாக இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். இன்று 10 உறுப்பினர்கள் விவாதத்தில் பேச உள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது உரையினை சுருக்கமாக முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.

*__திரு. பி.ஜி நாராயணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடந்துகொண்டிருக்கும் இவ்விவாதத்தில் பங்குகொண்டு பேச எனக்கு வாய்ப்பு அளித்த தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் உரையைத் துவக்குகிறேன். இருபதாம் நூற்றாண்டின் மக்கள் செல்வாக்குமிக்க தலைவர்களில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் இடம் பெற்றிருந்தாலும், அந்த வரிசையில் இடம் பெறத் தகுதியும், திறமையும், மக்கள் செல்வாக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை அவர் ஏழையெளிய மக்களின் நலனிலும், வளர்ச்சியிலும் அக்கறை எடுத்துக்கொண்டு வேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் சிறப்புத் திட்டங்களை வைத்து கணக்கிடமுடியும் என்பதைத்

[திரு. பி.ஜி. நாராயணன்] [2012 பிப்ரவரி 1

தெளிவுபட வலியுறுத்த விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் சுமையை முந்தைய ஆட்சியாளர்கள் விட்டுச்சென்ற நிலையிலும், சமூகப் பொருளாதார மேம்பாட்டில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை அம்மா அவர்கள் அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–10

இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டும் வகையில் விலையில்லா அரிசி திட்டத்தை அறிவித்து, மனிதனின் மூன்று அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து, இதன்மூலம் தமிழகத்தில் இனிமேல் எங்கும் பசி, பட்டினி இல்லாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்தே தீரவேண்டுமென்பதில் உறுதியாக இருந்து, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பொங்கி எழுந்து, கட்சியிலும், ஆட்சியிலும் மண்டிக் கிடந்த தேவையற்ற களைகளையெல்லாம் நீக்கி, தூய்மையை நிலைநாட்டியதற்காக இந்தியத் துணைக் கண்டமே அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.க. என்ற கட்சியே இருக்காது என்று வாய்ச், சவடால் விட்ட பசுந்தோல் போர்த்திய புலிகள் இன்று இருக்கிற இடம் தெரியாமல் பதுங்கி, அரசியலிலிருந்து ஒதுங்கி, நடுங்கிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழக அரசால் செயல்படுத்தப்படும் தொட்டில் குழந்தைத் திட்டம் உலகத்தின் கவனத்தை தமிழகத்தின்பால் ஈர்த்துள்ளது. அண்மையில் சென்னைக்கு வருகைபுரிந்த, அமெரிக்க வெளியுறவுச் செயலர் திருமதி ஹிலாரி கிளிண்டன் அரசின் தொட்டில் குழந்தைத் திட்டத்தைப் பற்றிய விவரங்களை அம்மா அவர்களிடம் கேட்டறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றவும், நில ஆக்கிரமிப்புகளையெல்லாம் தடுத்து நிறுத்தி, சுமார் 625 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை மீட்டு, பாதிக்கப்பட்டவர்களிடம்



2012 பிப்ரவரி 1] [திரு. பி.ஜி. நாராயணன்]

ஒப்படைக்கவும் காரணமாக இருந்தவரான மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், அரசியல் வரலாற்றில் சக்தி வாய்ந்த பெண்மணி என்றால் அது மிகையல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவு ஞானமும், அரசியல் ஞானமும் ஒருங்கே கொண்டு, கனிவான இதயத்தைப் பெற்று, மனிதாபிமானத்தின் மகுடமாக, காலத்தை வென்று, காவியம் படைத்துக் கொண்டிருக்கும் வெற்றித் திருமகள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்க உறுதிபூண்டு, விவசாயத்திற்கு முன்னுரிமைக் கொடுத்து, உணவு உற்பத்தியைப் பல மடங்கு உயர்த்தத் திட்டம் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கருவிலிருந்து கல்லறை வரையில் பயன்தரக்கூடிய உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம், சேமிப்புக் கிடங்கு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தவணை தவறாமல் கடனைத் திருப்பிக் கட்டும் விவசாயிகளுக்கு, வட்டியில்லா கடன் திட்டம் போன்ற நடவடிக்கைகள்மூலம் வேளாண் துறை புத்துயிர் பெற்றுள்ளது. இதன்மூலம், விவசாயிகளுடைய வருமானம் மூன்று மடங்கு உயரும் வாய்ப்பிருக்கிறது.

“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவப்படி விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், பண வசதியில்லாத, 10 ஆம் வகுப்பு படித்த திருமணம் ஆகாத ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 25 ஆயிரமும், தாலிக்குத் தங்கமும், பட்டப் படிப்பு முடித்த பெண்களுக்கு 50,000 ரூபாய் மற்றும் தாலிக்குத் தங்கமும் வழங்கும் திட்டம், ஏழைகளுக்குப் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் போன்ற இந்த அரசினுடைய சிறப்புத் திட்டங்கள் கிராம ஏழையெளிய மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் ஆழ்ந்த கவலையளிப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தலையிட்டு, தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைப் பாதுகாக்கவும், இழந்த உரிமையை மீண்டும் பெறவும், கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதுதான் ஒரே வழி என்ற தமிழக அரசினுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, தக்க நடவடிக்கையைத் துரிதமாக மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

கல்வி பெறும் உரிமைச் சட்டத்தைச் செயல்படுத்த உறுதிபூண்டுள்ள இந்த அரசு, உலகத் தரம் வாய்ந்த கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க, 33 ஆயிரத்து 681 ஆசிரியர் பணியிடங்கள், 16 ஆயிரத்து 549 பகுதிநேர ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 5 ஆயிரம் ஆசிரியர் அல்லாத பணியிடங்களையெல்லாம் நிரப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தவும், மனித வளத்தின் தரத்தை மேலும் மேம்படுத்தவும் விலையில்லா மடிக் கணினி வழங்கும் மாபெரும் திட்டத்தை அறிவித்து மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களுடைய பாராட்டுகளையும் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால், அவர் அந்தத் திட்டத்திற்கு அவரது பெயரைச் சூட்டிக்கொள்ளவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொட்டில் குழந்தைத் திட்டம் மற்றும் ஏராளமான சிறப்புத் திட்டங்களையெல்லாம் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டங்களுக்கு அம்மா அவர்கள் தன் பெயரைச் சூட்டிக்கொள்ளவில்லை. ஆனால் கடந்த ஆட்சியிலே அன்றைய முதல்வர் தன் பெயரை மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்குச் சூட்டிக் கொண்டார். இதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள வித்தியாசம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களை வாழவைக்க திட்டங்களைத் தீட்டுகிறது. தி.மு.க. தங்கள் சுயநல விளம்பரத்திற்காக அரசுத் திட்டங்களைப் பயன்படுத்துகிறது. கோவையில் செம்மொழி மாநாடும் அவர்களுடைய சுயவிளம்பரத்திற்காகத்தான் நடத்தப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் உரையாற்றும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். “இனிமேல் தமிழக மக்கள் எதற்காகவும், யாரிடமும் கையேந்தாத நிலையை உருவாக்கியே தீருவேன், இந்த இலட்சியத்தை என் வாழ்நாளுக்குள் அடைந்தே தீருவேன்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த எட்டு மாத காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை எளிய மக்கள் நலன் கருதி ஏராளமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். தமிழக மக்கள் இதைப் பார்த்து, இனிமேல் வாழ்நாள் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே தமிழக முதலமைச்சராக நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த மக்கள், நிருவாகத் திறமையும் மக்கள் செல்வாக்கும் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய பிரதமராகப் பொறுப்பேற்க வேண்டும், அப்பொழுதுதான் தீவிரவாதம் உட்பட மக்களுடைய முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)





பவானி தொகுதியிலே இதுவரையிலும் எந்த அரசுக் கல்லூரியும் நிறுவப்படவில்லை. பவானி தொகுதிக்குட்பட்ட குருப்பநாயக்கன்பாளையத்தில் 62 ஏக்கர் பரப்பளவில் ஒரு அரசு விதைப் பண்ணை உள்ளது. அந்த இடம் விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு ஏற்ற இடமாக உள்ளது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லாத் தகுதிகளும் உள்ள இந்த விதைப் பண்ணையில் விவசாயக் கல்லூரி ஒன்று உருவாக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருந்தாலும்கூட எனக்கு ஆளுநர் உரையிலே இரண்டாம் முறையாக பேச வாய்ப்பு அளித்திருக்கின்ற எங்கள் கழகத்தினுடைய தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் பொறுங்கள்.

## 3. அறிவிப்புகள்

### (அ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் திறப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்றப் பெண் உறுப்பினர்களின் வசதிக்காக சென்னை அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு 'சி' பிளாக்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சட்டமன்றப் பெண் உறுப்பினர்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சிக் கூடத்தை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தங்கள் திருக்கரங்களால் திறந்து வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.*

## 4. பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் இறுதிக் காலம்வரை இளமையோடு இருக்கவும், உடல் ஆரோக்கியத்தோடு இருக்கவும், சுறுசுறுப்பாக மக்கள் பணியாற்றுவதற்கும், கேட்காமலேயே எதையும் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் தமிழ்நாட்டு பெண் பெரியார், எங்களின் தமிழ்நாட்டு பெண் பேரறிஞர், வாழும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழ்நாடு பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நவீன உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்ததற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெண் இனத்தின் காவலராக இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை இந்தத் தமிழகம் கண்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில்தான் பெண் கமாண்டோபடையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறுவியதை இந்தத் தமிழகம் கண்டது. தேர்தல் நேரத்திலே என்னென்ன வாக்குறுதிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்களோ—கடந்த ஆட்சியிலே தாளிக்க வெங்காயம் இல்லாத சூழ்நிலை இருந்தது—இன்று தாலிக்குத் தங்கம் கொடுத்து பெண் இனத்தின் காவலராக இருக்கக்கூடியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தீயணைப்புத் துறையிலே ஒரு பெண் அதிகாரி மீட்புப் பணிக்காக செல்லும்போது காயம் அடைந்துவிட்டார் என்ற உடனே, தாயுள்ளத்தோடு மருத்துவமனைக்குச் சென்று பெண் இனத்திற்காக தான் இருக்கின்றேன் என்று நிரூபித்துக் காட்டியவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இங்கே சட்டமன்ற வளாகத்திற்குள்ளாகவே பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வு அறையை நவீன வசதியோடு அமைத்துத் தந்தார்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். தமிழகச் சட்டமன்ற வளாகத்திற்குள்ளாகவே ஓய்வு அறையை எப்படி அமைத்துத் தந்தார்களோ, அதைப்போலவே இன்றையதினம் பெண் உறுப்பினர்கள் உடல் ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காகத் தானே முன்வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்து, பெண் சட்டமன்ற உறுப்பினர்களை, பெண் இனத்தைப் பெருமைப்படுத்திய எங்கள் குலதெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அனைவர் சார்பாக என்னுடைய நன்றி மலர்களை அவர்களுடைய பொற்பாதங்களில் தங்கள் வாயிலாகக் காணிக்கையாக்குகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நவீன உடற்பயிற்சிக் கூடம் நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காலையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு, உடல் ஆரோக்கியத்தோடு இருப்பதற்கு ஒரு நல்ல முன்மாதிரியான நிகழ்வாக இது அமைந்திருக்கிறது. அந்த வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எல்லா மாவட்டங்களிலும் இதுபோன்ற ஒரு உடற்பயிற்சிக் கூடத்தை பெண்களுக்கு என்று எதிர்காலத்திலே நீங்கள் ஏற்படுத்த சிந்திப்பது இன்னும் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் எதிர்க்கட்சி என்றால் ஒரு கோரிக்கையாவது வைக்கவேண்டும். (சிரிப்பு) அந்த முறையிலே அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பித்து நன்றி கூறி, பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம் அரசினர் தோட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான ஒரு உடற்பயிற்சி மையத்தைத் திறந்து வைத்தார்கள். அவர்கள் வந்து திறந்துவிட்டு போகும்போது traffic அதிகம் இருந்ததால் நான் வருவதற்கு ஐந்து நிமிடம் காலதாமதம் ஆகிவிட்டது. இல்லையென்றால், நானும் அந்த நிகழ்ச்சியில் இருந்திருப்பேன். அது, அவர்கள்கூட இருக்க ஒரு பெரிய வாய்ப்பாக இருந்திருக்கும். அந்த உடற்பயிற்சி மையத்திலே எல்லா நல்ல அம்சங்களும் உள்ளன. அதிலே ஒரு EFX machine இருக்கிறது; இன்று ஒரு EFX machine என்ன விலை? எல்லோராலும் அதை வாங்க முடியாது. அதுமட்டுமல்ல, இரண்டு Tread Mills, Electrical Body Massager machine, நவீன முறையில் உள்ள ஒரு Cycling machine, Massage Chair போன்ற நிறைய உபகரணங்கள் அங்கே உள்ளன. Manual machines ஆக இல்லாமல், இன்றைய



காலகட்டத்திற்கேற்ப fully Digital–ஆக உள்ளன. அந்த அடிப்படையில் இவ்வளவு நல்ல உபகரணங்களை, சாதனங்களை பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாசத்துடன் கொடுத்திருக்கிறார்கள். அதை நாம் முழுமையாகப் பயன்படுத்துவதற்கு பெரிய வாய்ப்பாக இருக்கும். நானும் போய்ப் பார்த்தேன்; அதிலே நடந்துகூட பார்த்தேன்; மிகவும் நன்றாக இருந்தது. அந்த வகையில் என்னுடைய பாராட்டுதல்களை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவிப்பதோடு, இந்த எட்டு மாதங்களுக்குள்ளாகவே எவ்வளவோ நல்ல திட்டங்களை பெண்களுக்கு, குழந்தைகளுக்கு, பச்சிளம் குழந்தைகளுக்குக் கொண்டுவந்து இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையில்கூட ஒருசில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் என்னுடைய பாராட்டுமட்டுமல்ல, மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்து, மேலும் மேலும் பெண்களுக்கு, குழந்தைகளுக்கு அவர் நன்மைகள் செய்வார்கள் என்று எதிர்நோக்கி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆடியோ மியூசிக்கை நீங்கள் விட்டுவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

*முற்பகல் 11–25*

***DR. NANCY ANN CYNTHIA FRANCIS:** Hon. Speaker and beloved Amma, 'Health is wealth' and even though we do not think of it our beloved Amma has taken care to think of it, and has today inaugurated this Fitness Centre for us so that we keep good health. Some of us may go for a walk and exercise at home and during this time when we are away from home, when we are in Assembly Session , Amma has so generously done this for the lady ministers and M.L.A.s (Thumping of desks) for which we are ever grateful and we will prove that we make use of those machines and take care of our health and serve the country and the State in a better, healthy way. We thank you Amma and God bless you, Amma.

[2012 பிப்ரவரி 1

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையிலே, எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களுடைய தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே, எங்களுடைய கருத்துகளை எங்கள் தலைவர் கேப்டன் அவர்களின் வழிகாட்டுதல்படி இந்த இடத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கின்ற திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளைப் பார்க்கும்போது, கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்ட கருத்துகளைப் பிரதிபலிக்கும் வகையிலும், அதனுடைய தொடர்ச்சியைப் போலவும் இருக்கிறது. கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் சொல்லப்பட்டதைப்போலவே, இந்த ஆண்டு ஆளுநர் உரையை, அடுத்த ஆண்டு சொல்லாத வகையில் அரசினுடைய திட்டங்கள் தமிழக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகும். பண வீக்கம் நாளுக்கு நாள் அதிகமாகிறது. ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. நாளுக்கு நாள் வட்டி விகிதம் உயர்ந்து வருகிறது. இதனால் மாநிலப் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. அதனால் கடும் நிதி நெருக்கடியிலே எல்லாத் திட்டங்களையும் அரசு செயல்படுத்துகிறது. மத்திய அரசு தொடர்ந்து தமிழகத்தைப் புறக்கணித்தாலும், அதையும் மீறி அரசு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறது என்றெல்லாம் இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அரசு கொடுக்காத வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றியுள்ளதே இதைப்பற்றி எந்த இடத்திலும் சொல்லவில்லை என்பதுதான் எங்கள் தே.மு.தி.க.–வின் கேள்வி.

கடந்த ஆட்சிக் காலத்தில் விலைவாசி உயர்வை எதிர்த்தும், L.S.S. P.P., Express போன்ற பெயர்களில் கலர், கலராக paint அடித்து, மறைமுகமாக பஸ் கட்டணத்தை உயர்த்தியதை எதிர்த்தும், பால் விலையை உயர்த்தக் கூடாது என்ற கோரிக்கை வைத்தும், கரும்புக்கு நியாயமான விலையான டன் ஒன்றுக்கு ரூ.2,500/–அளிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தும், சீரான



2012 பிப்ரவரி 1] [திரு. வி.சி. சந்திரகுமார்]

மின் விநியோகமும், மின்வெட்டு இல்லாத மின்சாரம் வேண்டுமெனவும், பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வைக் குறைக்க வேண்டுமென்றும், இலங்கைத் தமிழர் பிரச்சினை மத்திய, மாநில அரசுகளின் இரட்டை வேடத்தைக் கண்டித்தும், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதாரம், சாலை வசதிகள் போன்றவற்றைச் செய்து தரக் கோரியும் பல்வேறு வகையான போராட்டங்கள், பல கட்டங்களாக மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்ட கடந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்ற நோக்கத்தில் தே.மு.தி.க. சார்பில் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டன. அதே காலகட்டத்தில், இதே நோக்கத்திற்காக இன்றைய ஆளும் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சிகளும் பல்வேறு போராட்டங்களை நடத்தின. கடந்த ஆட்சியை எதிர்த்து மக்கள் நலனுக்காகப் போராடிய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து போராட வேண்டுமென்று தமிழக மக்களும், அரசியல் பார்வையாளர்களும், பத்திரிகையாளர்களும் மற்றும் அனைத்துக் கட்சிகளின் நலம் விரும்பிகளும் எதிர்பார்த்தார்கள். அதன் விளைவாக அனைவரும் ஒன்றிணைந்து தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நடைபெறுகின்ற ஆட்சி, தமிழக மக்களின் துயர் துடைக்கும் பொற்கால ஆட்சியாக இருக்குமென மக்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களோடு சேர்ந்து தே.மு.தி.க–வும் எதிர்பார்த்தது. ஆனால், நடந்தது என்ன? ஒரு பழமொழி சொல்வார்கள், ‘படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்’ என்று. அதேபோல, எந்தப் பிரச்சினைக்காக கடந்த ஆட்சியிலே எதிர்க்கட்சியாக இருந்து போராட்டம் நடத்தப்பட்டதோ, ஆட்சிக்கு வந்து ‘ஆளும் கட்சி’ ஆனவுடன் அதை மறந்துவிட்டு, மறைமுகமாகத்தானே கடந்த ஆட்சி பஸ் கட்டணத்தை உயர்த்தியது, இப்போது இந்த ஆட்சி நேரடியாக பஸ் கட்டணத்தை உயர்த்துகிறது என்று சொல்லி, சுமார் 75 சதவிகிதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற 8 அரசுப் போக்குவரத்துக் கழகங்களினுடைய மொத்தக் கடன் சுமை என்பது கடந்த கால தி.மு.க. ஆட்சியில் ரூ.6,150 கோடியாகும். தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை போக்குவரத்துக் கழகங்களினுடைய

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2012 பிப்ரவரி 1

இடங்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 131 இடங்கள் ரூ.1,216 கோடி அளவிற்கு வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டிருக்கின்றன. ரூ.2,369 கோடி அளவிற்கு டீசல், விபத்து நஷ்ட ஈடு போன்றவற்றிற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகைகள் உள்ளன. இப்படி அத்தனைப் போக்குவரத்துக் கழகங்களும் திவாலாகக்கூடிய நிலைமை இருந்தது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், நிதி நிறுவனங்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று அறிவிக்கின்ற அளவிற்கு, கடந்த கால தி.மு.க. ஆட்சியில், போக்குவரத்துக் கழகங்களுடைய நிதி நிலைமை சீரழிக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்கள் திவாலாகிவிட்ட நிலைமை இருந்தது.

முற்பகல் 11–30

அந்தச் சூழ்நிலையில், மாதம் ஒவ்வொன்றிற்கும் 60 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்து, போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு நிதியைக் கொடுத்து, போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளர்களையும், போக்குவரத்துக் கழகங்களையும் காப்பாற்றியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, கடந்த காலங்களில் L.S.S., Ordinary, 'M' service, Express, S.L.F என இப்படிப் பல்வேறு வகையான பேருந்துகள் இயக்கப்பட்டன. இந்த நிலையில், போக்குவரத்துத் துறையை நவீனப்படுத்தி, சீர்படுத்தி, ஏழையெளிய மக்களுக்குச் சிறப்பான வசதிகளை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், மொத்தம் இயக்கப்படுகின்ற 19,184 பேருந்துகளில், 9,389 பேருந்துகளை— கிட்டத்தட்ட 49 சதவிகிதம் பேருந்துகளை—சாதாரணப் பேருந்துகளாக ஏழையெளிய மக்களுக்காக இயக்க வேண்டுமென்று உத்தரவிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைவிடக் குறைவாக, தமிழகத்தில்தான் ஒரு கிலோ மீட்டருக்கு 42 பைசா என்ற கட்டண வீதத்தில், சாதாரணப் பேருந்துகளை இயக்கக்கூடியவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



2012 பிப்ரவரி 1] [திரு. வி. செந்தில்பாலாஜி]

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். கடந்த ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, பஸ் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்றுதான் நாமெல்லாம் போராடினோம். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடனே 75 சதவிகிதம் அளவிற்கு பஸ் கட்டணத்தை உயர்த்தியது நியாயமா என்பதைத்தான் நாங்கள் இந்த அவையிலே கேட்டுக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை 18 ரூபாய் 26 பைசா என்று இருந்தபோது பேருந்துக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. அதற்குப்பிறகு 47 முறை மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தியிருக்கிறது. இப்போது டீசலுடைய விலை 43 ரூபாய் 40 பைசா. உதிரிப் பாகங்களுடைய விலையைப் பார்க்கின்றபோது, 136 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. சம்பளத்தினுடைய விகிதங்கள் 180 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்திருக்கின்றன. இப்படி அனைத்து செலவினமும் உயர்ந்துவிட்ட சூழ்நிலையில், டீசல் விலையை 47 முறை மத்திய அரசு உயர்த்திய நிலையில், திவாலாகக்கூடிய போக்குவரத்துக் கழகங்களைக் காப்பாற்றி மக்களுக்குச் சிறப்பான சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு. நீங்கள் அதையே பேசிக்கொண்டிருந்தால், நேரம் ஆகிவிடும். (குறுக்கீடு) அவரை நான் பேசத்தான் சொல்கிறேன். வேறு ஒன்றும் சொல்லவில்லையே!

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *அதேபோல், பால் கொள்முதல் செய்வதற்கு, விவசாயிகளுக்கு ஒரு லிட்டருக்கு 2 ரூபாயை அதிகப்படுத்திக் கொடுத்துவிட்டு, இன்றைக்குத் தமிழக மக்களுடைய தலையிலே பாரத்தைச் சுமத்தும் வகையில், ஒரு லிட்டருக்கு 6 ரூபாய் என்ற அளவிற்கு விற்பனை விலையை உயர்த்தியிருப்பது எந்த வகையிலே நியாயம் என்பதைத்தான் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வி.சி. சந்திரகுமார், நேற்று நீங்கள் இருக்கையில் உட்கார்ந்திருந்தீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வளவு தெளிவாகப் பதில் சொல்லியிருந்தார்கள். திரும்பவும் நீங்கள் அதையே கேட்கிறீர்கள். நேற்று நீங்கள் இல்லையா? நீங்கள் இருக்கையில் உட்கார்ந்து, அதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) திரும்பவும் அமைச்சர் அதே பதிலைச் சொல்ல வேண்டுமா? (குறுக்கீடுகள்) நேற்று அமைச்சர் கொடுத்த விளக்கம் தெளிவாக இல்லையென்றால் பரவாயில்லை. நேற்று விளக்கத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) திரும்பவும் அதே பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறீர்களே?*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *கடந்த கவர்னர் உரையிலே, 1 இலட்சத்து 158..*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்று வந்துவிட்டால் குறை சொல்வதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, தன்னை நம்பி வந்தவர்களுக்காக, தன்னை நம்பியிருக்கின்ற மக்களுக்காக, இன்றைக்கு அழகாக, முறைப்படுத்தப்பட்ட, வளர்ச்சியான ஆட்சியை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தமிழகத்தின் முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்தின் மக்களுக்காக மட்டும்தான் ஆட்சி நடத்துகின்றார்கள். அதுதவிர, கடந்த முறை சட்டமன்றத் தேர்தலின்போது, நம்பி வந்த கூட்டணிக் கட்சிக்காரர்களுக்குக்கூட, தன்னுடைய கஷ்டம் பாராமல், அவர்கள் நிற்கக்கூடிய தொகுதிகளுக்குக்கூட நன்மை செய்ய வேண்டுமென்பதற்காகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அவர்களை வெற்றி பெற வைத்தார்கள் என்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Silence please. (Interruptions) *உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Silence please. (Interruptions) *அமைதியாக இருங்கள்.*

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதைக் கடந்த உள்ளாட்சித் தேர்தலிலே மக்கள் நிரூபித்துக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலிலே வெற்றிபெற்று உள்ளே வருவதற்கு முடியாத சூழ்நிலையில் இருந்தவர்களைக்கூட உடன் அழைத்து வந்து இங்கே உட்கார வைத்து இருக்கின்றார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனைப் பற்றி மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொன்னர்கள். நீங்கள் அதற்குக் கோபப்பட்டீர்கள். உள்ளாட்சித் தேர்தலில் என்ன நடந்தது? (குறுக்கீடு) உள்ளாட்சித் தேர்தலில் என்ன நடந்தது? (குறுக்கீடு) நீங்கள் எங்களுடன் இருந்தீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கின்ற கேள்வி, நீங்கள் கூட இருந்தீர்களா? சட்டமன்றத் தேர்தலில் பெற்ற வாக்கு வித்தியாசங்களைக் காட்டிலும்*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 பிப்ரவரி 1

அதிகமான சதவிகிதங்களை, இதுவரை தமிழக அரசியல் வரலாற்றிலேயே, எந்தத் தேர்தலிலும் பெறாத மகத்தான வெற்றியை (மேசையைத் தட்டும் ஒலி) தன்னந்தனியாக உள்ளாட்சித் தேர்தலைச் சந்தித்து, மகத்தான வெற்றியைப் பெற்றவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து என்ன தெரிகிறது? கடந்த சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பித்தான் வாக்களித்தார்கள் தமிழக மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது நடைபெற்று முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நிரூபணமாகி இருக்கின்றது என்பதை மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தே.மு.தி.க. நண்பர்கள் உணர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் பேருந்துக் கட்டணத்தையும், பால் விலையையும் உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பு உயர்த்தியிருந்தால் என்ன நிலை என்பது தெரிந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல (குறுக்கீடு) ஒரு நிமிடம் நான் பேசிவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சரைப் பார்த்துப் பேசக்கூடாது. என்னைப் பார்த்துப் பேசுங்கள். அமைச்சர் எழுந்திருக்கும்போது நான் அவருக்குத்தான் முன்னுரிமை கொடுப்பேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சந்திரகுமார், அவை மரபை மீறக்கூடாது; மறக்கக்கூடாது; நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் இடைத்தேர்தல் வரும். அப்போது நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எத்தகைய செல்வாக்கு இருக்கிறது என்பதை நீங்கள் களத்திலே தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், உட்காருங்கள். This is not the procedure. அமைச்சர் அவர்கள் எழுந்து



2012 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

நிற்கும்போது முதலில் அவருக்குத்தான் நான் வாய்ப்புக் கொடுக்கமுடியும். அதற்குப் பிறகுதான் உங்களுக்கு வாய்ப்புத் தர முடியும். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியினுடைய தவறான கொள்கை காரணமாக அவர்கள் பால் விற்பனை விலையைக் கூட்டாமல், தேர்தல் வருகின்ற சமயத்தில் மட்டும் அந்தக் கொள்முதல் விலையை உயர்த்தினார்கள். ஆதலால், Aavin Federation–க்கு மாதத்திற்கு 16½ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. அப்படி நஷ்டம் ஏற்பட்டதனால், ஆவின் நிறுவனம் நாளுக்குநாள் நலிகின்ற, மூடப்படக்கூடிய ஒரு நிறுவனமாக இருந்த சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த ஆவின் நிறுவனம் நலிந்துவிடக்கூடாது; அந்த ஆவின் நிறுவனத்தை நம்பி கிராமப்புறங்களில் இருக்கின்ற பால் உற்பத்தியாளர்கள், கிட்டத்தட்ட இருபது இலட்சம் பேருக்கு மேற்பட்டவர்களின் குடும்பம் பாதிக்கப்படக்கூடாது, அந்தப் பாலைக் கொள்முதல் செய்கின்ற இருபத்துநான்காயிரம் தொழிலாளிகள் பாதிக்கப்படக்கூடாது; அதுமட்டுமல்லாமல், ஒன்றியத்தில் இருக்கின்ற தொழிலாளிகளும், இணையத்திலே இருக்கின்ற தொழிலாளிகளும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக–ஆவின் பால் தரமான பால். இன்று தமிழகத்தில் விற்கப்படுகின்ற தனியார் பால் அத்தனையுமே தரமற்ற பால்–ஆதலால், தரமான பால் கிடைக்க வேண்டும். ஆவின் நிறுவனம் நலிவடையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் மாதத்திற்கு 16.55 கோடி ரூபாயை ஆவின் நிறுவனத்திற்குத் தந்தார்கள். அப்படி, ஆவின் நிறுவனத்தை மீட்டெடுத்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். இதைப் புரிந்துகொள்ளாமல் எதிர்க்கட்சிக்காரர்கள் இன்று விலையேற்றம் செய்துவிட்டார்கள், விலையேற்றம் செய்துவிட்டார்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றைச் சிந்திக்க வேண்டும். அதாவது, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வரும்போது, பால் விலை ஒரு லிட்டர் பதினேழு ரூபாய் எழுபத்தைந்து காசு. ஆனால், பால் கொள்முதல் செய்யப்படுகின்ற விலை 18 ரூபாய். அங்கே 18 ரூபாய்க்கு கொள்முதல் செய்து, இங்கே Federation–க்கு வரும்போது அதற்காக ரூ.6.08 கூடுதலாகச் செலவினம் செய்யப்படுகிறது. அந்த ரூ.6.08 செலவினத்தாலே நஷ்டத்தைக் கண்டிருக்கிற ஆவின் நிறுவனத்தைத்

[திரு. வி. மூர்த்தி] [2012 பிப்ரவரி 1

தூக்கி நிறுத்தவும், அங்கே கொள்முதல் செய்கின்ற அந்த விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யாமல் இருப்பதையும் அந்த ஆறு ரூபாய் எட்டு காசு கூடுதல் செலவினத்தால் ஆவின் நிறுவனம் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற நிலையையும் மாற்றி, ஆவின் நிறுவனத்தை இலாபத்தில் இயக்கவும், அங்கு கொள்முதல் செய்கின்ற விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருப்பதைத் தடுத்து, அவர்களுக்குப் பணத்தைக் கொடுக்கவும்தான், இந்தப் பால் விலை உயர்த்தப்பட்டது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

*முற்பகல் 11–40*

மேலும், நாம் ஒரு லிட்டர் பாலை ரூ.24–க்கு விற்கிறோம். ஆனால் தனியார் நிறுவனங்களும் பால் விலையை உயர்த்தி விற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது ஆரோக்யா பால் ஒரு லிட்டர் தற்போது 30 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோன்று ஹெரிட்டேஜ் பால் தற்போது 28 ரூபாய்க்கு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மேலும், திருமலா பால் 28 ரூபாய்க்கும், டோட்லா 28 ரூபாய்க்கும், ஜெர்ஸி 28 ரூபாய்க்கும் விற்கின்றார்கள்.

மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால், தமிழகத்தில் ரூ.24– க்கு விற்கப்படுகின்ற பாலை, ஆந்திராவில் 27 ரூபாய்க்கும், கேரளத்தில் ரூ.28–க்கும் விற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். எப்படி என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆவின் நிறுவனம் அழிந்து போக வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? கொள்முதல் செய்கின்ற ஊழியர்கள், அந்நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் தொழிலாளிகள் பாதிப்படைந்து வேலையிழந்து போக வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? இதையெல்லாம் நீங்கள் சற்று சிந்திக்க வேண்டும் என்று கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 158 இலட்சம் லிட்டர் பால் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. (குறுக்கீடுகள்)



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் விலை உயர்வைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அத்தனை ஐயப்பாடுகளுக்கும், சந்தேகங்களுக்கும் இடம் அளிக்காத வகையில் திருப்தியான ஒரு பதிலை, யாருமே பால் விலை உயர்வைப் பற்றி பேசக்கூடாத நிலை உருவாக வேண்டும் என்பதற்காக மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் சரியாக அளித்த பிறகும் பால், பால் என்று சொல்கிறீர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள், நேற்றே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். திரும்பவும் இன்று பதிலைச் சொல்லிவிட்டார். அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போய் விடுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 158 இலட்சம் லிட்டர் பால் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதில் 20 இலட்சம் லிட்டர் பால்தான் ஆவின் நிறுவனத்தினால் கையாளப்படுகிறது. மீதம் உள்ள 138 இலட்சம் லிட்டர் பாலையும் தனியார்தான் கையாண்டு கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, தனியார்களுக்காகத்தான் இந்தப் பால் விலை உயர்த்தப்பட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத்தான் நான் இந்த இடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நாங்கள் கேட்கின்ற கேள்வியை விட்டு விட்டு வேறு பதில்களைச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த முறை இந்தச் சட்டமன்றத்தில் இல்லை என்று நான் நினைக்கிறேன். இறுதிக் கட்டத்தில்தான் விவசாயிகளுக்கு 2 ரூபாயை உயர்த்தித் தந்தார்கள். அப்போது, விவசாயிகள் பெரிய போராட்டத்தை நடத்தியபோது, “நான் இரத்தத்தையே பார்த்தவன், பால் ஊற்றுகிற போராட்டத்தைப் பற்றியா நான்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2012 பிப்ரவரி 1

கவலைப்படுகிறேன்?" என்றெல்லாம் அன்றைய முதலமைச்சர் பேசியது உங்களுக்குத் தெரியாது. ஆனால் 2 ரூபாய், இப்போது 4 ரூபாயாக உயர்ந்துவிடுகிறது. இன்றைக்குக் கறவை மாடுகள் வைத்து விவசாயம் செய்கின்ற விவசாயிகள் கறவை மாடுகளை விற்றுக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. நீங்கள் இப்படிப் பேசிக் கொண்டேயிருந்தால், போர்வெல் போட்டுத்தான் பால் எடுக்க வேண்டும். பால் கறவை மாட்டிலிருந்து வராது. நீங்கள் பேசுகிற பேச்சைப் பார்த்தால்—நீங்கள் மாடே வைக்காதவர்கள். ஆகவே, நீங்கள் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள். மாடு வைத்துக் கொண்டிருக்கிற எங்களுக்குத்தான் தெரியும், உங்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். உங்களிடத்தில் மாடு கிடையாது. கறவை மாடுகளை வைத்துக்கொண்டிருக்கிற எங்களைப் போன்ற விவசாயிகளுக்குத்தான் அதைப் பற்றித் தெரியும். ஏதோ பத்திரிகையில் வருகிறது, பேச வேண்டும் என்று பேசிக்கொண்டிருப்பது சரியானதாக இருக்காது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பால் விலை உயர்வுபற்றிச் சொல்லும்போது தனியார் நிறுவனங்கள் அதிகமாக உற்பத்தி செய்வதால், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதா என்ற ஒரு ஐயப்பாட்டை இங்கே தெரிவித்தார்கள். பால் உற்பத்தியைப் பெருக்காமல்விட்டது கடந்த கால ஆட்சியில் ஏற்பட்டுவிட்ட குறை. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டுத்தான் இலவசமாக கறவை பசு மாடுகளை வழங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திட்டத்தை இங்கே ஆரம்பித்து வைத்திருக்கின்றார்கள். பொறுத்திருங்கள், ஐந்தாண்டுகளுக்குள்ளாக இங்கே அதிகப்படியான பால் ஆவின் மூலமாக விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள். அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதீர்கள். இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். இருபது நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.



2012 பிப்ரவரி 1]

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லை. இரண்டு நிமிடத்தில் பேச வேண்டும் என்றால் எப்படி? பேசாமல் வேண்டுமென்றால் நான் பேசாமல் உட்கார்ந்து கொள்கிறேன். சீக்கிரம் முடியுங்கள் என்றால் நான் எதற்குப் பேச வேண்டும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று விளக்கம் அளித்த சப்ஜெட்டுக்குள் போயிருக்கக் கூடாது. Time is precious.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவில் அமைச்சர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். நான் இன்னும் பேசவே இல்லை. மாட்டைப் பற்றி எனக்குத் தெரியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் கிராமத்தில் பிறந்து, வளர்ந்து பால் வியாபாரம் செய்து விட்டுதான் இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். நான் ஒன்றும் மிட்டா மிராசு அல்ல. அடிப்படையில் நானும் ஒரு தொழிலாளியாக இருந்தவன்தான்.

அதேபோல் இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் மின் கட்டணம் உயர்வுக்குக் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தக் கருத்துக் கேட்புக் கூட்டமே ஒரு formality ஆக நடைபெறுகிறது என்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், நிச்சயமாக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், மின் கட்டணம் உயர்த்தப்படும் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் இந்த அவையிலே பேசினால், எங்களை எல்லோரும் சாடுகிறீர்கள்.

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரத்தின் அடிப்படையே தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மின் கட்டணத்தை உயர்த்துவது மாநில அரசு அல்ல. Tamil Nadu Electricity Regulatory Commission என்ற ஒன்று இருக்கிறது. அதற்கு மின் கட்டணங்களைச் சீரமைப்பது குறித்து மின்சார வாரியம் தங்களது விண்ணப்பத்தை அளிக்கும். அதன் பின்னர், Tamil Nadu Electricity Regulatory Commission என்னும்

இந்த ஆணையம் மாநிலம் முழுவதும் கருத்து தெரிந்துகொள்வதற்காக, மக்கள் கருத்தை அறிய பல கூட்டங்களை நடத்தும். இது விதிகளில் உள்ள ஒரு நடைமுறை, procedure. ஏதோ தான்தோன்றித்தனமாக இந்தக் கருத்துக் கணிப்பு நடைபெறவில்லை. அப்படி நடத்தியாக வேண்டும் என்பது விதிமுறை. அதன்படி இந்த Tamil Nadu Electricity Regulatory Commission கருத்துக் கணிப்பை நடத்திவிட்டு, மக்களுடைய கருத்தை அறிந்து அதன் பின்னர் அந்த Regulatory Commission தான் மின் கட்டணங்களை நிர்ணயிக்கும். ஆகவே, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் மாநில அரசு மின் கட்டணங்களை உயர்த்திவிடும் என்று சொல்வது மாண்புமிகு உறுப்பினரின் அறியாமையைத்தான் காட்டுகிறது.

மேலும், இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, பேருந்துக் கட்டணங்களை உயர்த்தியது பற்றியும், பால் விலையை உயர்த்தியது பற்றியும் இங்கே குறிப்பிட்டு, அண்மையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் கழகம் தனித்து நின்று வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுவிட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தத் தரப்பில் இருந்து, ஆளும் தரப்பில் இருந்து சொன்னதற்கு, நீங்கள் உள்ளாட்சித் தேர்தலை முடித்துவிட்டு, அதன் பின்னர் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினீர்கள்; அதன் பின்னர் பால் விலையை உயர்த்தினீர்கள்; முன்னதாகச் செய்திருந்தால் தெரிந்திருக்கும் என்று சவால் விடும் தொனியில் பேசினார். பேருந்துக் கட்டணங்களை எதற்காக உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, பால் விலை எதனால் உயர்த்தப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர்கள் விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். நானும், இந்தக் கட்டணங்களை அறிவித்தபோது, மிகுந்த வருத்தத்துடன் மாநில அரசு வேறு வழியின்றி இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை மக்களுக்கு விளக்கிச் சொன்னேன். நானே, தொலைக்காட்சியில் தோன்றிப் பேசினேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் ஒரு சவால் விட்டிருக்கிறார். அவருக்குப் பதில் சவால் நான் விடுகிறேன். சங்கரன்கோவிலில் நாங்கள் தனித்து வேட்பாளரை நிறுத்தப் போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் கட்சிக்குத் திராணி இருந்தால் தனித்து வேட்பாளரை நிறுத்துங்கள். பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய பிறகு, பால் விலையை உயர்த்திய பிறகு சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தனித்து நின்று மகத்தான வெற்றியை நாங்கள் அடைவோம். (மேசையைத்





தட்டும் ஒலி) அதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். உங்களால் முடியுமா என்பதை யோசித்துவிட்டுப் பேசுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன முறை, 2006–லிருந்து 2011 வரைக்கும் இடைத் தேர்தல்கள் எவ்வளவோ வந்தன. அந்த இடைத் தேர்தல்களில் ஒரு தேர்தலில்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயிக்கவில்லை. இன்றைக்கு வந்து நான் சங்கரன்கோவிலில் ஜெயிப்பேன், ஜெயிப்பேன் என்று சவால் விடுவது, ஆளுங்கட்சியாக இருந்தால்—கலைஞரே சொன்னார், போன தடவை எப்படி ஜெயித்தார் என்று அவர்களுக்கும் தெரியும், இப்போது நீங்கள் எப்படி ஜெயிக்கப் போகிறீர்கள், அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி ஜெயிக்கப் போகிறது என்பதும் தெரியும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, பேசி முடித்த பிறகு பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. விஜயகாந்த்:** நாங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. கேட்டதற்கு மட்டும்தான் பதில். பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்ன கேட்டோமோ, அதற்கு மட்டும்தான் பதில் தேவையே தவிர--சங்கரன்கோவிலில் வெற்றிபெறுவோம் என்று சொன்னால், பெண்ணாகரத்தில் ஏன் தோற்றீர்கள் என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பெண்ணாகரத்தில் இதற்கு முன்பு, உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பு டெபாசிட் காலி ஆயிற்றே, அப்போது என்ன ஆனது? டெபாசிட் காலி. சும்மா... (குறுக்கீடுகள்)

[திரு. விஜயகாந்த்] [2012 பிப்ரவரி 1

யாரும், வராதவர்கள் வீட்டிற்கு வந்தால்...(குறுக்கீடுகள்) எதற்காக வீட்டிற்கு வந்தோம்? (குறுக்கீடுகள்) நிதி அமைச்சர் பேசுகிறார் என்பதற்காக நான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த தி.மு.க. ஆட்சியில் சட்டமன்ற இடைத் தேர்தல்களில் நீங்கள் வெற்றி பெறவில்லை, தி.மு.க. வெற்றி பெற்றது, அவர்கள் எம்மாதிரியான வெற்றியைப் பெற்றார்கள்" என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கே சொன்னார். நீங்களும் அதைத்தான் செய்யப் போகிறீர்கள் என்ற ஒரு கருத்தை இங்கே பதிய வைத்தார். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் நடந்தது உள்ளாட்சி மன்றத் தேர்தல். கடந்த தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் எப்படி நடைபெற்றது? சென்னை மாநகராட்சித் தேர்தல் எப்படி நடைபெற்றது? மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் முறையாக நடைபெறவில்லையென்று உயர் நீதிமன்றம் சென்று, உயர் நீதிமன்றம், நடைபெற்றது தேர்தலே அல்ல என்று சொல்லி, 99 இடங்களுக்கு மறு தேர்தல் நடத்த உத்தரவிட்டது. இந்திய அரசியல் வரலாற்றிலேயே தேர்தல் நடைபெற்ற 155 இடங்களில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் தேர்தல் செல்லாது என்று சொன்ன தேர்தல் தீர்ப்பு அதுதான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையேற்று, சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில், எந்த அரசியல் குறுக்கீடும் இருந்ததா? அதிகார துஷ்பிரயோகம் இருந்ததா? வன்முறை இருந்ததா? அப்படி இல்லாமல் நியாயமான தேர்தலை நடத்தி (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை நாங்கள் அடைந்திருக்கின்றோம். இதுதான் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவினுடைய சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் சொல்கின்றபோது உள்ளாட்சித் தேர்தலில் இதுவரைக்கும் ஏதாவது வன்முறை நடந்ததா, இல்லை துஷ்பிரயோகம் ஏதாவது நடந்ததா என்றால், பத்திரிகையில் போடவில்லை என்றால்—நான் எனது தொகுதிக்கு போகும்போது என்னையும் என்னைச் சார்ந்தவர்களும், மற்றவர்களும் எப்படி அடக்கப்பட்டார்கள் என்பது—போன ஆட்சியில் எப்படி நடந்தது, இப்போது அதிகாரிகளை வைத்து எப்படி நடத்தினார்கள் என்பதும் தெரியும். இதுதான் உண்மை. இதற்குக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்றால் ஏதும் சொல்ல முடியாது. திருட்டுத்தனமாக ஓட்டுப் போட்டது—நீங்களும்தான் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்து விடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். Electronic voting Machine-ல் தவறு என்று எல்லோரும்தான் நீதிமன்றத்திற்குப் போனோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அது மரபல்ல. மாண்புமிகு அமைச்சர் எழுந்து நிற்கும்போது அவருக்கு வாய்ப்புக் கொடுத்து விடுகிறேன். பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். Please sit down. (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்களை எச்சரிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கையை உயர்த்திப் பேசுவது தவறு. (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தே.மு.தி.க. வைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால் அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

(தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

## 5. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவையில் நடந்து கொண்ட விதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மரபிற்கும், வரலாற்றுக்கும் மாறாக சட்டமன்றத்தையே களங்கப்படுத்துகின்ற வகையிலே ஏதோ இங்கே ஒரு சினிமா படப்பிடிப்பில் வசனம் பேசுவதைப்போல இங்கே தரக் குறைவாக—அதிலும் கௌரவமாகவும் நடந்துகொள்ளவில்லை—கண்ணியக் குறைவாக, தரக் குறைவாக, அவமானகரமாக நடந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவருடைய நடவடிக்கையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11– 55*

## 3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவரது கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவைநடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலும், பிற வகைகளிலும் செயல்பட்ட காரணத்தினால் பேரவை விதி 226–ன்கீழ் உரிமை மீறல் குழுவிற்கு இதை அனுப்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



## 5. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவையில் நடந்து கொண்ட விதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் பேசுகிறபோது அவர்கள் சொன்ன கருத்து, அதற்கு மாற்றுக் கருத்து என்று ஒரு பெரிய விவாதம் இங்கே நடைபெற்றது. இதுபோன்ற நேர்வுகளில் ஒவ்வொன்றிற்கும் நாம் உரிமை மீறல் குழுவிற்கு அனுப்புவது என்று ஆரம்பித்தால் அது சரியாக இருக்காது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கருதுகிறேன். அதுதான் என்னுடைய கருத்து. அதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்,* Privileges Committee*–ல் உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்கூட உறுப்பினர்களாக உள்ளனர். அது* one party Committee *இல்லை. அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும்* Privileges Committee*–ல் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்கள் அவையில் நடந்துகொண்ட விதம் பற்றி* Privileges Committee *விசாரிக்கும். ஆகையால் இதுபோல் முறையற்ற செயலை அனுமதிக்க முடியாது. இங்கே தெருச் சண்டை போல் இருந்தால் அது எப்படிச் சரியாக வரும்? ஏற்றுக் கொள்ளமுடியும்?* I won’t allow this. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட விதம், அவர் பேசிய அருவருக்கத்தக்க கீழ்த்தரமான பேச்சுகள் இவற்றையெல்லாம் இங்கேயே அமர்ந்து நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அனைவரும் பார்த்தார்கள்; அனைவரும் கவனித்தார்கள். இன்று எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட விதத்திற்கும், அவருடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதத்திற்கும் தண்டனை அளிக்க வேண்டும் என்றால், அவர்களை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்திருக்க வேண்டும். ஆனால் அதைத் தவிர்த்து, மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்கள் மிகவும் குறைந்தபட்ச நடவடிக்கையாக இந்தப் பிரச்சினையை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்புவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தனது முடிவை அறிவித்த பிறகு வேறு எந்த உறுப்பினரும் அதைப்பற்றி கேள்வி கேட்க விதிகளில் இடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தகுதியில்லாதவர்களுக்குப் பெரிய பதவி திடீரென்று வாய்த்துவிட்டால் *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று எதிர்க்கட்சித் தலைவரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லுகிறேன். கடந்த ஆட்சியில் நடந்த தவறுகளின் காரணமாக, நிருவாகச் சீர்கேட்டின் காரணமாக, எங்கும் மலிந்திருந்த ஊழலின் காரணமாக, மக்கள் ஒரு ஆட்சி மாற்றத்தை விரும்பினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கடந்த சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி இருந்தாலும், கூட்டணி இல்லாவிட்டாலும் இதே முடிவைத்தான் நாங்கள் பெற்றிருப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவது என்று தமிழக மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள். அதன்படிதான் கடந்த சட்டமன்றத் தேர்தலில் முடிவுகள் அமைந்துவிட்டன. தே.மு.தி.க.–வின் அதிர்ஷ்டம் எங்களுடன் அவர்கள் கூட்டணி சேர்ந்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு 41 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதனால்தான் இத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று இந்த அவையில் வந்து தே.மு.தி.க.–வின் சார்பில் அமர்ந்திருக்கிறார்கள்.

நண்பகல் *12–00*

இந்தக் கூட்டணியில் எனக்கு சிறிதும் விருப்பமில்லை என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். என்னுடைய கட்சிக்காரர்களைத் திருப்தி செய்வதற்காகத்தான் இந்தக் கூட்டணிக்கு நான் சம்மதித்தேன். இந்தக் கூட்டணி அமையாவிட்டாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டிருக்காது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தே.மு.தி.க. சேராவிட்டாலும், கூட்டணியில் இணையாவிட்டாலும், என்ன முடிவைப் பெற்றோமோ, என்ன முடிவுகளை சாதித்துக் காட்டினோமோ



அதைவிட அதிகமாக கூடுதல் இடங்கள் கிடைத்திருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* தே.மு.தி.க.–விற்கு விட்டுக்கொடுத்த தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெற்றிருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நிதர்சனமான உண்மையை இந்த நேரத்தில் அவர்களுக்கும் புரிய வைக்கிறேன். அனைவருக்கும் புரிய வைக்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி சேர்ந்ததால்தான் தே.மு.தி.க.–விற்கு இத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் கிடைத்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தும் கிடைத்தது. பிரதான எதிர்க்கட்சி என்கின்ற அந்தஸ்தும், தகுதியும் கிடைத்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி சேராவிட்டால் தே.மு.தி.க.-விற்குக் கடந்த தேர்தலில் ஒரு இடம்கூட கிடைத்திருக்காது என்பதுதான் உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தகுதியற்றவர்களுக்கு ஒரு பெரிய பதவி கிடைத்தால் அதில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதுகூடப் புரியாமல் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது, இவர்களுடன் கூட்டணி சேர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலைச் சந்தித்ததே என்று நினைக்கும்போது, நான் வருத்தப்படுகிறேன். உள்ளபடியே அதற்காக வருத்தப்படுகிறேன்; வெட்கப்படுகிறேன்.

இன்று எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது, அவருடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது, ஒன்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அவர்களுக்கு வரவேண்டிய ஏற்றம், வரக்கூடிய ஏற்றம் எங்களால் அவர்களுக்கு வந்து முடிந்துவிட்டது. முடிந்துவிட்டது. இனிமேல் அவர்களுக்கு இறங்குமுகம்தான். அதை சரித்திரம் சொல்லும் என்பதைச் சுட்டிக்காட்டி நான் அமைய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை. உட்காருங்கள். Please sit down. *(குறுக்கீடுகள்)* அனுமதி இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் அளித்துவிட்டார்கள். மேலும் விளக்கம் தேவையில்லை. Please sit down. *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* அவர் பேசிவிட்டார்.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனக் கவிதை ஒன்று உண்டு. "ஒரு நாள் காலை குடையிடம் கேட்டேன், 'நீ விரும்புவது மழையில் நனைவதையா? வெயிலில் காய்வதையா?' குடை புன்னகைத்தது. பின்னர் சொன்னது, 'என் கவலை இதைப் பற்றியல்ல. என் கவலையெல்லாம் எப்படிப்பட்ட மழையானாலும், என் மக்களை நனையவிடக்கூடாது, எப்படிப்பட்ட வெயிலானாலும் என் மக்களைக் காய விடக்கூடாது". அதுபோல வெற்றி, தோல்வி எதுவரினும் மக்கள் நலனே என் வாழ்நாள் முழுவதும் என்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற எட்டு கோடி தமிழர்களுடைய இதய வேந்தராகவும், எங்களுடைய கழகத் தலைவராகவும் விளங்குகின்ற அருமை அண்ணன் தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால தமிழ்ச் சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக, கொளத்தூரைக் கோட்டை கொத்தளமாக ஆக்கிக்கொண்டிருக்கின்ற இளைஞர்களுடைய எழுஞாயிறு, என்னுடைய வழிகாட்டி அண்ணன் தளபதி அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியினுடைய துணைத் தலைவர் அண்ணன் துரைமுருகன் அவர்களே, திருவண்ணாமலை சட்டமன்றப் பேரவை தொகுதிக்கு உட்பட்டிருக்கின்ற, நான் வெற்றி பெறுவதற்காக வாக்களித்த வாக்காளப் பெருமக்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, பொதுக் கூட்டத்தில் பேசுவதுபோன்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எ.வ. வேலு:** *உங்கள் அனைவருக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'அவர்களே' 'இவர்களே' என்று காலத்தை ஓட்டிவிடாதீர்கள். பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அரை மணி நேரத்திலே என்னுடைய உரையை நிறைவு செய்வேன் என்பதை மாண்புமிகு*



*பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். வள்ளுவப் பெருந்தகையார் சொல்கின்றார்;*

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.'

*பொதுவாக யார் ஆட்சிக்கு வந்தாலும், யார் ஆட்சி நடத்தினாலும், செய்யக்கூடாததைச் செய்தால் கேடு ஏற்படும். செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்டுவிட்டால், விரைந்து செய்யாமல் விட்டுவிட்டால் அதனாலும் கேடு ஏற்படும் என்று அய்யன் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதனால், செய்யவேண்டியதை விரைந்து செய்யவேண்டும்.*

*பிற்பகல் 12–05*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலிலே நின்றபோது, பிளஸ் 1 மாணவர்களுக்கு, பிளஸ் 2 மாணவர்களுக்கு, கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் இலவசமாக மடிக் கணினி வழங்குவோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். தொடர்ந்து இந்த ஆண்டு ஆளுநர் உரை அறிக்கையிலேகூட, பக்கம் 4–லே மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குவது போன்ற திட்டங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி சென்ற முறையும், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தங்களுடைய நிதிநிலை அறிக்கையை வாசிக்கிறபொழுது, பக்கம் 54–லே, இந்த ஆண்டு 9 இலட்சம் மடிக் கணினிகளை வாங்கி இலவசமாக வழங்கவிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே பணம் ஒதுக்கியதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள், சென்னையிலே அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்ததாக பத்திரிகையிலே நான் செய்தி படித்தேன். ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பிளஸ் 1, பிளஸ் 2, கல்லூரி மாணவர்களுக்கு மடிக் கணினி போய்ச் சேர்ந்ததா என்று சொன்னால், இல்லை. நான் சார்ந்திருக்கிற திருவண்ணாமலை மாவட்டத்திலே கணக்கெடுக்கச் சொன்னேன். அங்கே அரசின் சார்பாக நடத்தப்படுகிற கிட்டத்தட்ட 110 மேல்நிலைப் பள்ளிகளில் (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையைத் தொடருங்கள்.*

[2012 பிப்ரவரி 1

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் எதிர்க்கட்சியில் இருக்கிறபொழுது, குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கான மடிக் கணினி வழங்கும் திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். முதற்கட்டமாக 5,225 மடிக் கணினிகள் வாங்கி விநியோகிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 3 இலட்சம் கணினிகளுக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. உலக அளவில் சுமார் 80 சதவீத hard discs தாய்லாந்தில் தயாரிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு தாய்லாந்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் திட்டமிட்டபடி மடிக் கணினி வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும், தற்போது அங்கு உற்பத்தி தொடங்கிவிட்டதால், முடிவு செய்தபடி விரைவாக மடிக் கணினி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பிளஸ் 1, பிளஸ் 2, கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கெல்லாம் மடிக் கணினி இலவசமாக வழங்கப்படும் என்றுதான் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது; ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு பிளஸ் 2 பரீட்சை என்பது மார்ச் மாதம் வந்துவிடும். அதே நேரத்திலே, பிளஸ் 2 மாணவர்களிடமிருந்து மட்டும்தான் மனுக்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், பிளஸ் 1 மாணவர்களிடமிருந்து இதுவரைக்கும் மனுக்களே பெறவில்லை. எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் திருவண்ணாமலையிலே ஒரு கலைக் கல்லூரி, செய்யாரிலே ஒரு கலைக் கல்லூரி, வந்தவாசியிலே ஒரு கலைக் கல்லூரி, அதேபோன்று 110 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆக ஒட்டுமொத்தமாக, இந்தப் பள்ளிகளில் இதுவரைக்கும் மனுக்களே பெறவில்லை.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரியான விளக்கத்தை, தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைப் பற்றிச் சொல்லி, இதற்கு முடிவு சொல்லிவிட்டார்கள். ஏதோ இவர்கள் ஆட்சியில் சொன்ன முழுவதையும் செய்ததைப்போல—இரண்டு ஏக்கர் இடம் தருவதாகச் சொன்னார்கள்; ஐந்து வருடம் ஆன பிறகும்கூட கொடுக்கவில்லை. நாங்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். தாய்லாந்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால், அங்கே hard disc உற்பத்தியில் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதனால் உற்பத்தி இல்லாமல் இருந்திருக்கிறது. இப்போது உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. அங்கே கம்பெனிகள் முழுவதும் செயல்பட ஆரம்பித்துவிட்டன. இந்த ஆண்டிலிருந்து வழங்கப்போகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொன்னவாறு முழுவதையும் கொடுத்துவிடுவார்கள். திரு. வேலு அவர்கள் வேகப்பட வேண்டாம். கட்டாயம் கொடுத்து விடுவோம். நீங்கள் சொன்னதில் எதைக் கொடுத்திருக்கிறீர்கள்? ஒன்றுமே கொடுக்கவில்லையே? இரண்டு ஏக்கர் இடம் நீங்கள் எங்கே கொடுத்தீர்கள்? பேசாமல் உட்காருங்கள். அம்மா அவர்கள் எல்லாவற்றையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுகிற சர்க்காருக்கு பாராட்டுவதற்கு அசுர பலமாக இன்றைக்குப் பல சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இருப்பதாக முதலமைச்சர் அவர்களே பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியாக இருக்கிற நாங்கள், சில இடங்களிலே இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால்தான், அரசு நடத்துபவர்கள் நீங்கள், அதைத் திறம்பட, நிறைவுபட நடத்துவதற்கும் உங்களுக்கு நாங்கள் உதவியாக இருக்க முடியும். அந்த அடிப்படையிலேதான் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதனால், இந்த ஆண்டு பிளஸ் 2 மாணவர்கள், கல்லூரி மாணவர்களெல்லாம் ஏமாற்றப்பட்டுவிடுவார்களோ

என்கிற ஏக்கம் கல்லூரி மாணவர்களுக்கும், பிளஸ் 2, பிளஸ் 1 மாணவர்களுக்கும் இருக்கிறது. எனவே, அதையும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகின்றேன்.

பக்கம் 11–லே, முந்தைய ஆளுநர் உரையிலே தெரிவித்தவாறே, திருக்குறள், பாரதியார் மற்றும் பாரதிதாசன் படைப்புகள் தெரிவு செய்யப்பட்டு சீன மற்றும் அரேபிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் மற்றும் புகழ்பெற்ற தமிழ் நூல்கள் ஆகியவற்றை சீன, அரேபிய மற்றும் உலகளவில் பேசப்படும் ஏனைய மொழிகளில், நமது தமிழ் மொழியின் பெருமை உலகெங்கும் பரவ வேண்டும் என்கிற வகையிலே, மொழிபெயர்ப்பு செய்யப்படும் என்று சென்ற ஆளுநர் உரையிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆளுநர் உரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளை தமிழ் மொழியிலே மொழிபெயர்ப்பு செய்து வெளிநாட்டிற்கு நாங்கள் அனுப்பவிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது எல்லாம், பாவேந்தர் பாரதிதாசனுடைய பெயரிலே ஒரு தமிழ் ஆய்வு மையம் தொடங்கப்பட்டது; ஆனால், இந்த ஆட்சி வந்தவுடனே அது எங்கு இருக்கிறது என்று எங்களுக்கே தெரியவில்லை. ஆக, பாவேந்தர் பாரதிதாசனுடைய புகழை உலக அளவிலே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்கிற நீங்கள்—தமிழ்நாட்டிலே பாவேந்தர் தமிழ்ச் செம்மொழி ஆய்வகம் என்று ஒன்று இருந்ததே அது எங்கு போனது என்று தெரியவில்லை.

பிற்பகல் 12–10

அதேநேரத்திலே நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம், சூரியநாராயண சாஸ்திரி என்கிற பரிதிமாற்கலைஞர் அவர்களது காலத்திலிருந்து 150 ஆண்டு காலம் போராடிப் போராடிப் நம் தாய்மொழியாம் தமிழுக்குச் செம்மொழி என்ற அந்தஸ்தை மத்திய அரசாங்கம் வழங்கியது. 'தானே' புயலைப் பற்றி நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது 500 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் உதவியிருக்கிறது. 5,000 கோடி ரூபாய்க்குமேல் நாங்கள் கேட்டிருக்கிறோம், உதவவேண்டும் என்று கருதுகிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆக, எது எதற்கெல்லாமோ மத்திய





அரசாங்கத்தை நாம் கேட்கிறோம். அதே மத்திய அரசாங்கம் 150 ஆண்டு கால போராட்டத்திற்குப் பின்னால் தமிழ் மொழிக்குச் செம்மொழி என்கிற ஒரு அந்தஸ்தை தந்ததே அந்தச் செம்மொழியின் பெயரிலே டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையிலே ஒரு பூங்கா அமைக்கப்பட்டது. ஆனால், இன்றைக்குச் 'செம்மொழி' என்கிற அந்தப் பெயர்ப் பலகை இருக்கிறதா என்று சொன்னால், இல்லை. ஏன் அந்தச் செம்மொழிமேல் உங்களுக்கு என்னதான் வருத்தம்? அந்தச் செம்மொழி வருவதற்குக் கடைசியாக எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் காரணமாக இருந்தார் என்பதைத் தவிர வேறு என்ன? ஆக, பாரதிதாசனுடைய புகழை நீங்கள் உலகத்திற்குச் சொல்லுகிறீர்களோ, இல்லையோ, ஆனால் இங்கு இந்தப் புகழ்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது திருக்குறள் மற்றும் பாரதியார், பாரதிதாசனுடைய படைப்புளை உலக மொழிகளிலே மொழிபெயர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்களே, என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததுபோல 3 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து அதற்கான பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று பாரதிதாசனுடைய ஆய்வு மையம் இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைச் சொல்லுவதற்கு உங்களுக்கு அருகதையே இல்லை. ஏனென்றால், நீங்கள் ஆட்சியில் இருக்கின்றபோது டெல்லியில் இருக்கின்ற பல்கலைக்கழகத்திலே பேரறிஞர் அண்ணாவின் பெயரிலே ஒரு ஆய்வு மையம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக 50 இலட்சம் ரூபாயை உங்களைக் கேட்டபோது அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி அவர்கள் அதற்கு நிதி ஒதுக்கவில்லை. ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே அந்த ஆய்வு மையத்திற்கு 50 இலட்சம் ரூபாயை ஒரே தவணையாகக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** முதலமைச்சர் பேசுகிறார்கள், அமைச்சர் பேசுகிறார்கள். எங்களைப் பேச அனுமதித்ததால்தான் நாங்கள் சொல்கிறோம். நாங்கள் அரசைப் பற்றி தனிப்பட்ட முறையில் சொல்கிறோமா? ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருப்பதை நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம்.

நான் பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்கு என்ன விலை என்கிற அடிப்படையில்தான் இங்கே நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதில் இருந்தது. நான் கேட்பது பாரதிதாசனுடைய புகழை உலகம் முழுவதும் சொல்லப் போகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே அந்தப் பாரதிதாசனுடைய நூல் ஆய்வகத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதைத்தான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற சக்தியும், திறனும் உள்ள தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு ஊரை ஏமாற்றுகின்ற இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒலிவாங்கியை சற்று தள்ளிவைத்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே எந்தத் துறையிலே எந்த அமைச்சர் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசவேண்டும். இப்போது நான் எந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கிறேன் என்பதுகூடத் தெரியவில்லை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், அடுத்த விஷயத்திற்குப் போங்கள்.



**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றுமில்லை. முன்பு அவர் கல்வித் துறை அமைச்சராக இருந்தார். அதனால்தான் கல்வித் துறை அமைச்சர் என்று சொன்னேன், வேறு ஒன்றுமில்லை.

பக்கம் 32–ல் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு 60 ஆயிரம் பசுமை வீடுகள் என 5 ஆண்டுகளுக்கு 3 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்ல வசதியான வீடுதான். நாங்கள்கூட ஒரு இலட்சம் வீடுகள்தான் கட்டுகிறோம் என்று சொன்னோம். தேர்தல் காலங்களிலே சொன்னார்கள், இது போதாது 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்குக் கட்டப் போகிறோம் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதிக்கு அப்படியெல்லாம் வந்தால் அது பாராட்டப்பட வேண்டியதுதான். எனக்கு அதிலே ஒன்றும் வருத்தம் இல்லை. ஏழையெளிய மக்கள் யாரென்று தமிழ்நாட்டிலே அடையாளம் காணப்பட்டது. இந்த ஆட்சியில் அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நாங்களும் அமைச்சர்களாக ஒரு காலத்தில் இருந்தோம். ஆக, யார் அமைச்சர்களாக இருந்தாலும், அரசு அலுவலர்களை வைத்துத்தான் நாம் பணிகளை நிறைவேற்றுகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம்தான் கணக்குகளைச் சொல்லுகிறோம். துறையினுடைய செயலாளர்கள்தான் அதனடிப்படையில் திட்டங்களைத் தீட்டித் தருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் நாங்கள் ஆட்சியில் இருக்கிறபொழுது . . .

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது கான்கிரீட் வீடுகள் கட்டுகிறோம் என்று சொல்லி, ஆட்சி முடிகின்ற நேரத்தில் 7 ஆண்டுகளுக்கு அட்டைகள் கொடுத்தார்கள். இதுமாதிரி யாருமே வாழ்க்கையில் ஏமாற்ற முடியாது. 7 ஆண்டுகளுக்கு அட்டை கொடுத்தது யார் ஆட்சியில்? இதுமாதிரி உலகத்தில் வேறெங்காவது நடந்தது உண்டா? நான் கேட்கிறேன். அதுமட்டுமல்ல, நீங்கள் கொடுத்திருக்கிற தொகை 75,000 ரூபாய். வங்கியின் மூலமாக

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2012 பிப்ரவரி 1

*25,000 ரூபாய். பயனாளி கடன் வாங்கியது 50,000 ரூபாய். கடனிலேயே அவர் மூழ்கிப் போய்விட்டார். நீங்கள் வீடு கட்ட முடிந்ததா? ஆகவே, இப்படிப்பட்ட திட்டத்தைப் போட்டுவிட்டு எங்களைப் பற்றிக் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை முழுமையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டும். நான், ஆரம்பத்திலேயே சொன்னேன். 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறீர்கள். அதை என்னுடைய தொகுதிக்குக் கொடுத்தாலும் பாராட்டுக்குரியது என்றுதான் சொன்னேன். ஆனால், அதே நேரத்திலே அன்றைக்கு இருந்த பொருளாதாரத்திற்கு 1 இலட்சம் ரூபாயிலே வீடுகள் கட்டப்படுமென்று முடிவு செய்து, அன்று இருந்த துறையினுடைய செயலாளர்களை, இயக்குநர்களை எல்லாம் அழைத்து 32 மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அதுபற்றி சொல்லப்பட்டு, தமிழ்நாட்டில் எங்கெல்லாம் குடிசைகள் இருக்கின்றன என்று கண்டறியப்பட்டு அரசின் சார்பாக அதை நாங்கள் சொன்னோம். 21 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு, குடிசைவாழ் மக்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னோம். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அரசுக்கு வந்த கணக்கு, கிட்டத்தட்ட சுமார் 18 இலட்சத்து 85 ஆயிரம் குடிசை வீடுகள் தமிழ்நாட்டிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதில்தான் 3 இலட்சம், 3 இலட்சம் என்று இரண்டு கட்டமாக நாங்கள் ஆட்சியில் இருந்தபோது பணத்தை ஒதுக்கினோம். ஆனால் விரைந்து செயல்பட முடியவில்லை. செங்கல் அந்த விலை விற்றது. மழை பெய்துவிட்ட நிலை. இப்படி இயற்கையின் காரணத்தினால் அதில் காலதாமதம் ஏற்பட்டது. ஆனாலும்கூட கடைசியாக எங்கள் ஆட்சியிலே 3 இலட்சத்து 5 ஆயிரத்து 395 வீடுகள் கட்டப்பட்டு அதற்குப் பணம் எல்லாம் ஒதுக்கப்பட்டு முடிவு பெற்றது. அதற்குப் பின்னால் நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றீர்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால் அவர் சொன்னதைப்போல நாங்கள் அட்டைகூட கொடுத்தோம். நான் இல்லையென்று சொல்லவில்லை. அதை தனிப்பட்ட முறையில் நாங்கள் கொடுக்கவில்லை. ஒரு ஆட்சி இருக்கிறது என்று சொன்னால், திட்டம் போடுகிறோம் என்று சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர், துறையினுடைய செயலாளர்தான் அதனுடைய அட்டைகளைக் கொடுக்கிறார்கள். எந்த மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும்கூட, அவர்தான் கையெழுத்து போட்டுக் கொடுத்திருப்பார். ஆக, குடிசை வீடு என்பதற்காக அந்த அட்டை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், குடிசை வீடுகள் என்பதைக் கண்டறிந்தது மாவட்ட நிருவாகம். அப்படி நாங்கள் அட்டையைக் கொடுத்திருக்கிறோம். நான் என்ன உங்களிடம் கேட்கிறேன் என்று சொன்னால், 3 இலட்சம் வீடுகள் போன பிறகு, சுமாராக எடுத்துக்கொண்டாலும் மீதம் இருக்கிற 12 இலட்சத்து 79 ஆயிரத்து 605 வீடுகள் இன்றைக்கு குடிசைகளாக இருக்கிறதே! நீங்கள் அப்படியே கணக்கெடுத்துக்கொண்டாலும்கூட 3 இலட்சம் வீடுகள் இந்த 5 ஆண்டு காலத்தில் கட்டினால், மீதம் இருக்கிற குடிசைகளை . . .*



2012 பிப்ரவரி 1] [திரு. எ.வ. வேலு]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ நம்முடைய உறுப்பினர் அவர்கள், ‘அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன், அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்’ என்று அவர் செய்த தவறைப் பூசி மறைத்துக் கொண்டிருக்கிறார். 18 இலட்சம் குடிசைகள் இருக்கின்றன என்று அவர்களுடைய ஆட்சி காலத்திலே அன்றைய ஆட்சியாளர்கள் சொன்னார்கள் என்று சொல்கிறார். அப்படி 18 இலட்சம் வீடுகள் குடிசைகளாக இருக்கின்றன என்பதால்தான், இந்த ஒரு நிதியாண்டில் 60,000 வீடுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பசுமை வீடுகள் திட்டத்தின் சார்பாக 1,080 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினால்தான், அந்த 60,000 வீடுகள் கட்ட முடியும். 7 ஆண்டு காலத்திற்கு இவர்கள் கார்டைக் கொடுத்துவிட்டால் நிதி எங்கிருந்து வருவது? அப்படி நிதியே இல்லாமல் நாங்கள் வீடுகள் கட்டிக் கொடுத்தோம், வீடுகள் கட்டிக் கொடுத்தோம் என்று இப்பொழுது, சொல்கிறார். ஏற்கெனவே மழை வந்துவிட்டது என்று சொன்னார். அது உண்மையல்ல. 75,000 ரூபாய் கொடுத்தீர்கள். 200 சதுர அடியில் வீடுகள் கட்டினோம் என்று சொன்னீர்கள். அன்று ஒரு செங்கல்லின் விலை 4 ரூபாய். செங்கல் கிடைத்தது.*

[திரு. கே.பி. முனுசாமி] [2012 பிப்ரவரி 1

நீங்கள் கொடுத்த நிதியாதாரம் அந்த வீடு கட்டுவதற்குப் போதுமானதாக இல்லாத காரணத்தினால், அன்று கொடுக்கப்பட்ட அந்தத் தொகை பயன்படாமல், ஏழை மேலும் ஏழையாக மாறுவதற்குத்தான் உங்கள் திட்டங்கள் பயன்பட்டன. அவன் பெரிய கடனாளியாக ஆகிவிட்டான். கட்டாமல் இன்னும் நிறைய வீடுகள் இருக்கின்றன.

இதுபோன்ற நிலை தமிழகத்தினுடைய ஏழை மக்களுக்கு வரக்கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய சிந்தனையில்—என்ஜினியர் அல்லது வேறு யாரும் இந்த ஐடியா கொடுக்கவில்லை—எந்த அரசியல் தலைவருக்குமே இந்த சிந்தனை வராமல் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பாதுகாப்பான, வசதியான வீடு கிடைக்க வேண்டுமென்று சொன்னால் குறைந்தது 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயாவது தேவைப்படும் என்கின்ற அடிப்படையில்தான் முதலமைச்சர் ஆவதற்கு முன்பாகவே இந்தத் திட்டத்தை அறிவித்து முதலமைச்சர் ஆனவுடனேயே இந்தத் திட்டத்தை முதன்மையாக எடுத்துக்கொண்டு இப்பொழுது 60,000 வீடுகள் மிக அழகாக, நேர்த்தியாகக் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன்—60,000 வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள், அழகாக இருக்கிறது. அதை இல்லையென்று நான் மறுக்கவில்லையே! ஆனால், நான் கேட்க விரும்புவது, அந்த 3 இலட்சம் பேருக்குத்தான் தமிழ்நாட்டில் இந்த 5 ஆண்டுக் காலத்திலே கட்ட முடியும். ஏற்கெனவே அரசின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் கணக்கு எடுத்தார்கள். நாங்கள் கணக்கு எடுக்கவில்லை. நீங்கள் யாரைப் பயன்படுத்தினீர்களோ அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்ற மீதி 12 இலட்சம் குடிசைகள் என்னாவது?



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 இலட்சம் வீடுகள் என்று முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிதான் சொன்னார். எந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் இவ்வளவு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லவில்லை. அது அரசியல் சார்பாக நீங்கள் கொடுக்கின்ற கணக்கு. அந்தக் கணக்கை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு எவ்வளவு ஏழை, எளியவர்கள் இருக்கின்றார்கள் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் இப்போது வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பசுமை வீடுகள் திட்டத்தைப் பற்றி இங்கே சில வினாக்களை, சில ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய விளக்கத்தினை இங்கே தந்திருக்கின்றார்கள். இலட்சக் கணக்கில் குடிசைகள் இருக்கின்றனவே; 60,000 வீடுகள்தானே கட்டிக் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார். ஆனால் சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது—வருடத்திற்கு 60,000 வீடுகள் வீதம் 5 ஆண்டுகளில் 3 இலட்சம் வீடுகள் என்றுதான் அறிவிக்கப்பட்டிருந்தது. அதுதான் உண்மை. அதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நேற்றே சில விளக்கங்கள் சட்டமன்றத்தில் சொல்லப்பட்டன. I.A.Y. என்கின்ற மத்திய அரசினுடைய இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒரு வீட்டினுடைய unit cost 45,000/– ரூபாய்தான். அதில் 33,500/–ரூபாய் மத்திய அரசும், மாநில அரசின் பங்காக 11,500/– ரூபாயும் சேர்த்து, 45,000/– ரூபாய்க்கு ஒரு ஏழைக்கு குடிசைக்குப் பதிலாக வீடு கட்ட வேண்டும் என்று சொல்லி,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 பிப்ரவரி 1

மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பி இருக்கிறது. தமிழ்நாட்டிற்கும் அனுப்பி இருக்கிறது. 45,000/– ரூபாய் unit cost–ஐ வைத்துக் கொண்டு ஒரு வீடு கட்ட முடியுமா? கட்ட முடியாது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தாயன்போடு, இருக்கின்ற சூழ்நிலையில், தமிழகத்தில் கட்டப்படுகின்ற வீடுகள் உறுதியாகவும், தரமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசு கொடுக்கின்ற 33,500/– ரூபாய் பணத்தோடு 66,500/– ரூபாய் சேர்த்து 1 இலட்சம் ரூபாய் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) 200 சதுர அடியில் கட்டுவதற்கு வீடுகள் இங்கே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை அப்படியே நான் ஒத்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், ஒட்டுமொத்தமாக 1,80,000 ரூபாய் வீதம் 3 இலட்சம் பசுமை வீடுகள் ஏழை மக்களுக்காகக் கட்டித் தரப்படும் என்று இந்த அரசு அறிவித்து, கட்டப்பட்டு வருகின்றன. இது அல்லாமல், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் அறிவித்திருக்கிறோம். அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.



2012 பிப்ரவரி 1]

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடலூர், விழுப்புரம் பகுதிகளிலே ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தருவதாகச் சொல்கிறார்கள். நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், அமைச்சர்களாக இருப்பவர்கள் அவரவர் வீடுகளில் இருந்துகொண்டு எந்தக் கணக்கையும் எடுத்துவிட முடியாது. ஆட்சியில் இருக்கக்கூடிய அதிகாரிகளை வைத்துத்தான் கணக்கு எடுக்க முடியும். “நீங்கள் ஏதோ உங்கள் இஷ்டத்திற்கு எழுதிக் கொண்டீர்கள்” என்றார். அப்படியல்ல. எத்தனை குடிசை வீடுகள் என்று உங்களுடைய அலுவலகத்திலோ, இயக்குநரகத்திலோ, செயலரிடத்திலோ கேட்டால் சொல்வார்கள். ஆனால், நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கணக்கெடுப்பிற்குப் பின்பு, நீங்கள் தவறான கணக்கை மக்களுக்கு உங்கள் ஆட்சியின் வாயிலாகக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதற்காகத்தான், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கணக்கெடுத்தபொழுது, 18 இலட்சம் வீடுகள் அல்ல, 12 இலட்சம் வீடுகள்தான் இருக்கின்றன என்பதை நாங்கள் ஆதாரபூர்வமாக எடுத்துவைத்தோம் நீங்கள் தவறான கணக்கைக் கொடுத்தீர்கள் என்பதை இப்பொழுது மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு இலட்சம் வீடுகள் விழுப்புரம், கடலூர் பகுதிகளிலே கட்ட இருக்கிறார்களே, அதைப்போல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீடு கட்டும் திட்டம் பற்றியே பேசிக்கொண்டிருக்காதீர்கள். வேறு சப்ஜெக்டுக்குப் போங்கள்.

**திரு. எ.வ. வேலு:** ஒரே ஒரு செய்தியை உங்களுக்குச் சொல்கிறேன். மீதியிருக்கின்ற 12 இலட்சம் குடிசை வீடுகளுக்கும் ஒரு இலட்ச ரூபாயில் வீடு கட்டித் தந்தால் ஏழைகளுக்கு மகிழ்ச்சிதான். நான் சொல்வது 1,80,000/– ரூபாய்கூடத் தேவையில்லை. எஞ்சியிருக்கின்ற குடிசைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு வீடு கட்டித் தந்தால்கூட ஏழைகளுக்கு, குடிசைவாசிகளுக்கு மகிழ்ச்சிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 இலட்சம் பசுமை வீடுகள் ஏழை மக்களுக்காகக் கட்டித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறோமென்று சொன்னால், தமிழ்நாட்டில் 3 இலட்சம் குடிசைகள்தான் இருக்கின்றன, 3 இலட்சம் ஏழை மக்கள்தான் இருக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஒரு இலட்சம் வீடுகள் ஏழை மக்களுக்காகக் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கும்போது ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் அத்தனை பேர்தான் ஏழை மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. இன்னும் பல இலட்சம் பேர் இருக்கிறார்கள். குடிசை வீடுகளில் வாழ்கிறார்கள். அத்தனை பேருக்கும் கான்கிரீட் வீடுகள், பசுமை வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் இலட்சியம், ஆசை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இருக்கின்ற நிதி நிலைக்கு ஏற்பத்தான் நாங்கள் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முடியும். ஆகவே, படிப்படியாகத்தான், எங்கள் நிதியாதாரங்களை வைத்துத்தான் நாங்கள் இதை நடைமுறைப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள். (குறுக்கீடு) திரு. வேலு, உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. எ.வ. வேலு**: ஒட்டுமொத்தமாக நான் பேசியது 7 நிமிடங்கள்தான். அமைச்சர் பெருமக்கள், முதலமைச்சர் எல்லாம் குறுக்கிட்டுப் பேசுகிறபொழுது நான் பதில் சொல்லியாக





வேண்டும். நீங்கள்தான் உட்காரச் சொல்கிறீர்கள். அந்த ஆணையை நீங்கள்தான் போடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில், பக்கம் 23–லே—நேற்றையதினம்கூட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் மின்சாரத் தடை ஏற்பட்டிருக்கிறது. நான்கூட விவசாயிதான். கிராமப் பகுதிகளிலே பார்த்தால் கிட்டத்தட்ட 7 மணி நேரம், 8 மணி நேரம் மின்சாரம் இல்லை. நகரப் பகுதிகளை எடுத்துக்கொண்டால் 5 மணி நேரம், 6 மணி நேரம் மின்சாரம் இல்லை. இடத்திற்குத் தகுந்த மாதிரி இந்தப் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், ஏற்கெனவே ஆட்சியில் இருந்த நாங்கள்தான், அதற்கு எந்தவிதச் செயல்பாடும் செய்யவில்லை, பணத்தையும் ஒதுக்கவில்லை என்றெல்லாம்கூட நேற்றையதினம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன பதிலுடன் இணைத்து மேலும் விளக்கமாகக் கூற விரும்புகிறேன். 5 வருடங்களில் I.A.Y. திட்டத்தின்கீழ் 5 இலட்சம் வீடுகள், பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 3 இலட்சம் வீடுகள், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஒரு இலட்சம் வீடுகள் என 9 இலட்சம் வீடுகள் கிராமப்புறங்களில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்தான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், ஏற்கெனவே 5 ஆண்டுக்காலம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதற்கு நன்றி சொல்லுங்கள்.

[2012 பிப்ரவரி 1

**திரு. எ.வ. வேலு:** *எதற்கு நன்றி சொல்ல வேண்டும்? என் சார்பாக நீங்களே சொல்லிவிட்டீர்களே! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நேற்றையதினம் குறிப்பிட்டார்கள். 5 ஆண்டுக்காலம் நாங்கள் ஆட்சியிலே இருந்தபொழுது அதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், ஏற்கெனவே, 2001–2006–லே அப்போது மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார்கள். நிதி அமைச்சர் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தீர்கள். அந்தக் காலகட்டங்களிலே, 5 ஆண்டுக் காலத்திலே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் துறைக்காக நிதி ஒதுக்கியதாகக் கூறுகிறார்கள். இவர்கள் போதுமான நிதி ஒதுக்கியதால்தான் இன்றைக்கு மின் வாரியம் 53 ஆயிரம் கோடி ரூபாய் கடனைச் சந்தித்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு.*

**திரு. எ.வ. வேலு**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் என்ன குறிப்பிட்டார்களென்று சொன்னால், நாங்கள் மின் உற்பத்திக்காக எந்தவித செயல்பாடுமே செய்யவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அமைச்சரைப் பேசச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுதே சொன்னார்,*

*“செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்”*



2012 பிப்ரவரி 1] *[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]*

*என்று சொன்னார். இந்தக் குறள் யாருக்குப் பொருந்துகிறதோ, பொருந்தவில்லையோ, 100 சதவிகிதம் கடந்த தி.மு.க. ஆட்சிக்குப் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்யக்கூடாததையெல்லாம் செய்தீர்கள். செய்ய வேண்டியதையெல்லாம் செய்யவில்லை. அதனால்தான் இந்த நிலைமை என்பதை முதலிலே உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன் கடந்த ஆட்சிக் காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, மின்சார உற்பத்திக்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 5 ஆண்டுகால ஆட்சியிலே, உங்களுடைய ஒட்டுமொத்த 5 ஆண்டுகால ஆட்சியிலே, நீங்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கிய அளவு வெறும் 200 மெகா வாட்தான். ஆனால், அதற்கு முந்தைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 2,047 மெகா வாட் மின் உற்பத்திக்கான திட்டம் அங்கே தொடங்கப்பட்டது. ஆனால், கடந்த 5 ஆண்டுக்காலம் நீங்கள் செய்யத் தவறியதால், நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யாததால் ஏற்பட்ட விளைவுதான் இது.*

*அதேபோல, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு, தேர்தலுக்கு முன்பு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை அவர் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. மாறாக அதை நிறைவேற்றுவதற்காக, இன்றைக்குப் பல்வேறு திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி அதற்காகப் பல முறை ஆய்வுக் கூட்டங்களை நடத்தி திட்டங்களைத் தீட்டியதோடு மட்டுமல்லாமல், அதற்கு வேண்டிய நிதியாதாரங்களையும் ஒதுக்கிக் கொடுத்து இன்றைக்கு இந்த மின்சார வாரியத்தைச் சீரமைக்கின்ற பணியைச் செய்கின்ற அதே வேளையில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி, நிச்சயமாக 2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகம் மின் உற்பத்தியிலே மிகை மாநிலம் என்ற நிலையை அம்மா அவர்களுடைய ஆட்சி எய்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வேண்டிய திட்டங்களைச் சொல்வதோடு நின்றுவிடாமல் சொன்னதைச் செய்வதற்காக அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே பார்த்தால் உற்பத்தித் திட்டங்களை விரைவுபடுத்துவது, மிக தொலைநோக்குப் பார்வையோடு புதிய உற்பத்திக்கான திட்டங்களைச் செயல்படுத்துவது, அதிலே பல நிர்வாகச் சீரமைப்பு நடவடிக்கைகளை எடுப்பது போன்ற பல்வேறு நிலை*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 பிப்ரவரி 1

நடவடிக்கைகளை எடுத்து, இன்றைக்குத் தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதன் விளைவாக நிச்சயமாக இந்த மின்வெட்டுப் பிரச்சினை படிப்படியாக, நான் ஏற்கெனவே சொன்னதுபோல வருகின்ற ஜூன் மாதத்திலிருந்து படிப் படியாக—மார்ச் மாதத்தில் உற்பத்தி வரும். மார்ச் மாதத்திற்கு பின்னால், ஜூன் மாதத்திற்கு பின்னால், ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னால், செப்டம்பர் மாதத்திற்குப் பின்னால், ஆக படிப் படியாக இந்த மின்வெட்டு குறைக்கப்பட்டு, 2013 ஆம் ஆண்டிலே முழுமையாக மின்வெட்டு நீக்கப்படும் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

மற்றொன்று, நாங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. மந்திரத்தில் மாங்காய் காய்க்க வைக்க முடியாது. உடனே மாம்பழம் வேண்டுமென்று நினைத்து, இன்று செடி நட்டு நாளைக்குப் பழம் கொடுக்கும் என்று சொல்ல முடியாது. அதற்கு வேண்டிய கால அவகாசமும் வேண்டும். ஆகவே, அம்மா அவர்கள் கால அவகாசத்தைக் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, ஒன்றரை ஆண்டு காலத்தில் அனைத்தையும் நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல மின்சார வாரியத்தைப் பொறுத்தளவிலும், ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலத்திலே, அல்லது இரண்டு ஆண்டு காலத்திற்குள் மக்களுக்குக் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் அம்மா அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். உங்களைப் போல வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு ஏமாற்ற மாட்டார்கள் என்பதை உங்களுக்கு உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களே சொன்னார்கள், மந்திரத்திலே மாங்காய் காய்க்க வைக்க முடியாது என்று. அதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், அதேநேரத்திலே ஏற்கெனவே கடந்த 5 ஆண்டு காலத்திலே வட சென்னை, மேட்டூர், வள்ளூர், தூத்துக்குடி ஆக இந்த இடங்களிலே புதிதாக மின் உற்பத்திக்காகக்



2012 பிப்ரவரி 1] [திரு. எ.வ. வேலு]

கிட்டத்தட்ட 11 ஆயிரத்து 28 கோடி ரூபாயை நாங்கள் ஒதுக்கி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்ததன் விளைவாகத்தான்—சென்ற முறை நீங்கள் படிக்கிறபோதும், இப்பொழுதும் நீங்கள் சொல்கிறீர்களே, உடனே அடுத்த ஆண்டே நிறைவு செய்வோம் என்று, அப்படிச் சொல்கிற அந்தத் தைரியம் எப்படி வருகிறது என்று சொன்னால் நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினால்தான் மிக தைரியமாக இந்தச் சட்டமன்றத்திலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நேற்றையதினமே சொன்னார், MoU போட்டது மட்டும்தான் உங்கள் வேலை, வேறு ஒரு வேலையும் செய்யவில்லை என்று. அதையே திரும்பக் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) நேரத்தை வீணடிக்காதீர்கள்.

**மாண்புமிகு திரு நத்தம் ஆர். விசுவநாதன்:** பல திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டும் போட்டுவிட்டு அதை அப்படியே கண்டுகொள்ளாமல் விட்டுவிட்ட ஆட்சிதான் உங்களுடைய ஆட்சி. அதற்கு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் உடன்குடி மின் உற்பத்தித் திட்டத்தைச் சொல்லலாம். அதைப் போல வள்ளூரைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். வள்ளூரிலேகூட அது மாநில அரசினுடைய திட்டம் அல்ல. தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு தேசிய அனல் மின் கழகமும் இணைந்து கூட்டாகச் செய்கின்ற அந்தப் பணிகளை தேசிய அனல் மின் கழகம் செய்து வருகிறது. அதிலும் நீங்கள் உரிய நடவடிக்கைகளை கௌரவமான அளவிற்கு அந்தத் திட்டத்தைச் சரியாக நீங்கள் செயல்படுத்தியிருந்தால் உங்களுடைய; சென்ற ஆட்சிக் காலத்திலே அங்கு உற்பத்தியைத் தொடங்கியிருக்க முடியும். ஆனால், நீங்கள் அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்ட காரணத்தினால், சரியாக அதிலே கவனம் செலுத்தாததன் காரணமாகவும், அதிலே சில எதிர்பார்ப்புகளுக்காகவும், இன்னும் பல காரணங்களுக்காகவும் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கிய அந்தத் திட்டத்தைச் சரியாக செய்யாததால் அது நடைபெறவில்லை. செய்திருந்தால் உங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே உற்பத்தி தொடங்கியிருக்கும். ஆனால் வரவில்லை. காரணம் உங்களுடைய நிர்வாக திறமைக் குறைவு. அதற்கு பின்புதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிர முயற்சி

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 பிப்ரவரி 1

எடுத்ததன் காரணமாக அந்தப் பணிகளை விரைவில் முடிப்பதற்கு நிதி உதவியும் அளித்து இன்றைக்கு அதற்கு வேண்டிய சிறப்பு முயற்சிகளையும் எடுத்து அங்கு உற்பத்தி மிக விரைவிலே தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.கே. செல்வம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. வேலு, மேலும் வாய்ப்புத் தர முடியாது.

*__திரு. எஸ்.கே. செல்வம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் தாயாகவும், ஏழரை கோடித் தமிழர்களின் விடிவெள்ளியாகவும், 125 கோடி இந்திய மக்களின் நாளைய எதிர்பார்ப்பாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற தங்கத் தாரகை தமிழகத்தினுடைய முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு 3 முறை வீரபாண்டி சட்டமன்றப் பேரவைத் தொகுதியினுடைய உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுகின்ற வாய்ப்பினை நல்கி, இரண்டு முறை இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற வாய்ப்பை வழங்கியிருக்கின்ற அன்னைக்கு எனது கோடானுகோடி பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழகத்திலே ஒன்றிய இளைஞர் அணிச் செயலாளராகவும், கழக ஒன்றியத்தினுடைய செயலாளராகவும், மாவட்டக் கழகத்தினுடைய இணைச் செயலாளராகவும், மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராகவும், கழக எம்.ஜி.ஆர். இளைஞர் அணியினுடைய இணைச் செயலாளராகவும், உள்ளாட்சி அமைப்பில் வீரபாண்டி ஒன்றியக் குழுத் தலைவராகவும் பணியாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், தாயே!

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)



2012 பிப்ரவரி 1] [திரு. எஸ்.கே. செல்வம்]

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியின் சிறப்பான அம்சங்களையும், தமிழக மக்களுக்குக் குறுகிய காலத்தில் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற பல்வேறு நலத் திட்டங்களைப் பற்றியும், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், கடனாக விட்டுச் சென்ற பின்னரும் தன்னுடைய தொலைநோக்குப் பார்வையில் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையுடன், மனோதிடத்துடன் அம்மா அவர்களால் எடுக்கப்படும் நடவடிக்கையைப் பற்றியும், மேலும் இவற்றையெல்லாம் மிஞ்சுகின்ற வகையில் அம்மா அவர்கள் குறுகிய காலத்தில் தமிழக மக்களுக்காக உருவாக்கிய திட்டங்களின் பலன்தான் அவர்களுக்குக் கிடைத்த உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி எனவும் ஆணித்தரமாக கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்தமைக்கு நான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை யார் ஆளவேண்டும், யார் தப்பித் தவறி மீண்டும் ஆள வந்துவிடக்கூடாது என்பதைத் தீர்மானிக்கின்ற தேர்தலாகத்தான் நடந்து முடிந்த நம்முடைய சட்டமன்றத் தேர்தல் இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு பக்கம் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி, தன்னுடைய அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு, பண பலம், படை பலம், ஆட்சியையும், அனைத்தையும் வைத்துக்கொண்டு, அதிகார துஷ்பிரயோகம் செய்து, சிறைச்சாலைகளில் இருக்கும் குண்டர்களை வெளியில் விட்டு, மக்களை மிரட்டி தேர்தலைச் சந்தித்தது. மறுபக்கம் மாண்புமிகு அம்மா அவர்களோ, மக்களை நம்பி தேர்தல் களத்திலே இறங்கினார்கள். தன்னந்தனியாக சூறாவளிச் சுற்றுப் பயணமாக தமிழகம் முழுவதும் அம்மா அவர்கள் சென்றபோது, சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் வெள்ளமாகத் திரண்டார்கள். அம்மா அவர்களின் பேச்சைக் கேட்க அலை கடலென ஆர்ப்பரித்து எழுந்தார்கள். அம்மா அவர்களால்தான் தமிழகத்தைக் காப்பாற்ற முடியும் என மக்கள் தீர்மானித்து அம்மாவை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னை மட்டும் நம்பி வாக்களித்த மக்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்த அதே தினத்தில் பல்வேறு நலத் திட்டங்களுக்குக் கோப்பிலே கையெழுத்திட்டு பெருமை சேர்த்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தான் வழங்குகின்ற திட்டம் மக்களுக்கு நேரடியாகச் சென்றடைகிறதா என்பதை முழுமையாகக் கண்காணிப்பதற்காகவே ஒரு தனித் துறையை அமைத்து பெருமை சேர்த்த முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் என்பதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மிகக் குறுகிய காலத்திலே மக்களுக்கு ஆற்றிய பணிகளும், தேர்தலில் தன்னை மட்டும் நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்மா அவர்கள் அளித்த பல்வேறு திட்டங்களும், நலத் திட்ட உதவிகளும் மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்ததன் பலனாகத்தான், தன்னந்தனியாக யாருடைய கூட்டணியும் இல்லாமல், உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றியை மக்கள் நம்முடைய தானைத் தலைவிக்கு, தங்கத் தலைவிக்கு கொடுத்தார்கள் என்பதை நாம் மறந்திருக்கமுடியாது. அந்த வெற்றி தொடர்ந்து அனைத்து தேர்தல்களிலும் பிரதிபலிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழக அரசியல் வரலாற்றிலே சட்டமன்றத் தேர்தலிலும், உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் மிகப் பெரும்பான்மையான வெற்றி பெற்ற ஒரு ஆட்சி என்ற பெருமையும், வெற்றி பெற்ற தலைவர் என்ற பெருமையும் இந்த ஆட்சி மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அன்றைக்கு உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் கண்டனத்தைத் தெரிவித்த அந்த



உள்ளாட்சி மன்றத் தேர்தல் எங்கே? நமது தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வைத்துக்கொண்டு எந்த சிறு அசம்பாவிதமும் இல்லாமல் உள்ளாட்சித் தேர்தலை வெற்றிகரமாக ஜனநாயக முறைப்படி நடத்திக்காட்டிய நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எங்கே? இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். அம்மா அவர்களுடைய தாயுள்ளத்தைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும். அம்மா அவர்களுடைய போர்க் குணத்தைப் பற்றியும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். காலையில் அம்மா அவர்கள் நம்முடைய மகளிர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்து தாயுள்ளத்தைக் காட்டினார்கள்.

பிற்பகல் 12–40

அம்மாவினுடைய போர்க் குணம் என்பதை, கடந்த சில நாட்களுக்கு முன்பு முல்லைப் பெரியாறு விஷயத்திலே நீங்கள் கவனித்திருப்பீர்கள். அம்மாவைப் பொறுத்தவரை, முல்லைப் பெரியாறு விஷயத்தை அவர் கையாண்ட விதம், அவருடைய தொலைநோக்குப் பார்வையே தனி, அம்மாவைத் தவிர இந்த இடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும், இன்றைக்குத் தமிழகம் இரத்தக் களரியாக இருந்திருக்கும். ஆனால், அம்மா அவர்கள் தன்னுடைய மதிநுட்பத்தால், தன்னுடைய சாதுர்யத்தால் இன்றைக்குத் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய ஜீவாதார உரிமை, அது முல்லைப் பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும் சரி, காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, பாலாறு பிரச்சினையாக இருந்தாலும் சரி, இன்றைக்கு அத்தனைத் திட்டங்களுக்கும் தன் உடலை வருத்திக்கொண்டு, தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் காப்பாற்றி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போது என்னுடைய சேலம் மாவட்டத்திற்கு வருகை புரிந்தபோது, ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்கள். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் இருந்தபோது, நில அபகரிப்பு மூலம்

*தமிழகத்தைச் சுரண்டிக் கொண்டிருந்த நிகழ்வுகளையெல்லாம் அம்மா அவர்கள் அன்றைக்கு அம்பலப்படுத்தினார்கள். நாங்கள்கூட அந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் முதன்முதலாக அம்மா அவர்கள் கூறிய கருத்தால்தான் நில அபகரிப்பு என்ற பேச்சையே கேள்விப்பட்டோம். அதற்குப் பிறகு, இன்றைக்குத் தமிழக வரலாற்றிலே இதுவரை இல்லாத அளவுக்கு, ஏன் இந்திய வரலாற்றிலே நில அபகரிப்பு என்றால் அது தமிழகத்தில்தான் அதிகம் நடைபெற்றது என்று வெட்கித் தலைகுனிகின்ற நிலையை உருவாக்கிக் கொடுத்தவர்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினர்தான். அதுமட்டுமல்ல, அந்த நில அபகரிப்பிலே முதலிடத்தைப் பெற்றிருக்கிறது எங்களுடைய சேலம் மாவட்டம் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, நாங்கள் வெட்கித் தலை குனிகின்றோம். அப்பேர்ப்பட்ட அளவுக்கு நில அபகரிப்பு நடந்துள்ளது. மைனாரிட்டி தி.மு.க.–வை வசைபாட வேண்டும், அவர்களை சின்னாபின்னமாக்க வேண்டும், அந்த இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டு இந்த நில அபகரிப்பு வழக்கைத் தொடுத்திருக்கிறார்கள் என்று இன்றைக்குக் கூக்குரல் இடுகிறார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் சுற்றுப்பயணம் சென்றுகொண்டிருந்தபொழுது தங்களுடைய நிலத்தை அபகரித்துவிட்டார்கள் என்று கூறி பல்வேறு தாய்மார்கள், தங்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டார்கள். அன்றைக்கு மைனாரிட்டி அரசிடமே புகார் கொடுத்தும் நிவாரணம் பெற முடியாத அந்த அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக, தாய் உள்ளத்தோடு அம்மா அவர்கள் இன்றைக்கு சட்டம்– ஒழுங்கை முழுமையாகப் பராமரித்து, அந்த நில உரிமையாளர்களுக்கு நிலங்களை மீட்டுக் கொடுத்துள்ளார்கள். நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் குறிப்பிட்டு சொன்னதைப்போல, 2 மாதங்களுக்கு முன்பு கொடுத்த புள்ளிவிவரங்களின்படி அந்நிலங்களின் மதிப்பு கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய். இன்றைக்கு எடுத்துக்கொண்டால், 2,000 கோடி ரூபாயைத் தாண்டுகிற அளவுக்கு மைனாரிட்டி தி.மு.க.வினரும் மற்றும் பல்வேறு விஷமிகளும் நில அபகரிப்பு செய்திருக்கிறார்கள்.*

*நில மீட்பு போன்ற நல்ல திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்து இன்றைக்கு நம்முடைய தமிழக மக்களுடைய வயிற்றிலே பாலை வார்த்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, எனக்கு ஒரு பாடல் நினைவுக்கு வருகின்றது. புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். "ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று. அப்பேர்ப்பட்ட வரிகளுக்கும், வார்த்தைகளுக்கும் எடுத்துக்காட்டாக, அவர் வழிவந்த புரட்சித் தலைவரின் ஒரே அரசியல் வாரிசான நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கின்ற பணிகளைப் பார்த்து நாம் பெருமைப்படுகிறோம்.*



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது புரட்சித் தலைவருடைய மறைவிற்குப் பிறகு ஒரு இராணுவ எஃகுக் கோட்டை போன்ற தலைமையை ஏற்றிருக்கின்ற இயக்கம். இந்த இயக்கத்தினுடைய ஒரே தலைவி, நேற்றும் சரி, இன்றைக்கும் சரி, நாளைக்கும் சரி, நம்முடைய ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஆகவே, அம்மா அவர்கள் தலைமையேற்றிருக்கின்ற இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு புயல் நிவாரண நடவடிக்கைகளைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அம்மா அவர்கள் இந்த இயக்கத்தை 1989 ஆம் ஆண்டு தலைமையேற்று நடத்தியது முதல் ஆளுங்கட்சியாக இருந்த பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்திருக்கின்ற துரதிருஷ்டவசமான சூழ்நிலையிலும் சரி, அவர் போர்க்கால அடிப்படையில் எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளை பல்வேறு மாமன்ற உறுப்பினர்கள் பார்த்திருப்பீர்கள். போர்க்கால நடவடிக்கையாக, இராணுவத்திலே தளபதிகளை வைத்துக்கொண்டு எப்படி இராணுவத்தை வெற்றிபெற வழிநடத்திக் கொடுப்பார்களோ அதேபோல் அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், அரசு உயர் அதிகாரிகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளையும் (மணியடிக்கப்பெற்றது) மற்றும்*

[திரு. எஸ்.கே. செல்வம்] [2012 பிப்ரவரி 1

அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாவட்ட ஆட்சியர்களையும் மற்றும் பல்வேறு உயரதிகாரிகளையும் வைத்துக்கொண்டு, அம்மா அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கிய காட்சியை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நான்கு மாதங்களிலே முடிக்க வேண்டிய நிவாரணப் பணிகளை அம்மா அவர்கள் ஒரே மாதத்தில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இன்றைக்கு விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், ஒரு பெரிய மறுமலர்ச்சி, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருடத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் அளவுக்கு நிவாரணம் கிடைக்கின்ற திட்டம், இப்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–45

இன்றைக்கு, தமிழ்நாட்டில் எத்தனையோ துறைகள் இருக்கலாம். ஆனால், அத்தனைத் துறைகளுக்கும் ஒரு தாய்த் துறையாக, அனைத்துப் பணிகளையும் செய்து முடிக்கின்ற துறையாக, நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இருக்கின்றது. இன்றைக்கு 12,524 ஊராட்சிப் பகுதிகளிலும், 529 பேரூராட்சிப் பகுதிகளிலும், 125 நகராட்சிப் பகுதிகளிலும், 10 மாநகராட்சிப் பகுதிகளிலும் நடைபெறுகின்ற பல்வேறு திட்டங்களுக்கு, அது பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும் சரி, கான்கிரீட் சாலை போடுவதாக இருந்தாலும் சரி, அல்லது சாக்கடை வசதி செய்து கொடுப்பதாக இருந்தாலும் சரி, கூட்டுக் குடிநீர் திட்டமாக இருந்தாலும் சரி, எந்தத் திட்டமாக இருந்தாலும், அத்தனைத் திட்டங்களுக்கும் முத்தாக பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்ததோடு, நிதியும் வழங்கி சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அம்மா அவர்களுடைய இந்த ஆட்சியிலே, உள்ளாட்சித் துறையிலே, நம்முடைய ஊராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனைத்துத் திட்டங்களும் சென்றடைய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் ‘தாய்’ என்னும் சிறப்பான திட்டத்தை அம்மா அவர்கள் உருவாக்கி, அனைத்து குக்கிராமப் பகுதிகளுக்கும் திட்டங்கள் சென்றடைய வழி வகுத்திருக்கின்றார்கள்.



2012 பிப்ரவரி 1] [திரு. எஸ்.கே. செல்வம்]

இப்படிப்பட்ட நல்லாட்சி நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற அம்மா அவர்களின் பார்வைக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்து, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் ஒருசில கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து எங்கள் கட்சியின் சார்பில் மேலும் சில கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விவாதத்தின் இடையில், தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற கூட்டணி சம்பந்தமான விவாதங்களும் அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், கூட்டணி நிலைமைகள் குறித்து எங்களுடைய கட்சியினுடைய கருத்துகளையும் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்தகால தி.மு.க. ஆட்சி ஒரு மிக மோசமான நிலைமையை தமிழகத்திலே ஏற்படுத்தி, தமிழகம் காப்பாற்றப்படுமா, தமிழ்நாட்டு மக்கள் காப்பாற்றப்படுவார்களா என்கிற கவலை தோய்ந்து இருந்த நேரத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டணி அமைக்கப்பட்டு, அந்தக் கூட்டணியின் சார்பிலே ஒரு மகத்தான வெற்றியை இங்கே பெற்றிருக்கிறோம். முதன்மைக் கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த மகத்தான வெற்றியைப் பெற்றதிலே பெரும் பங்கு இருக்கிறது என்கிற அதேநேரத்தில், அந்தக் கூட்டணியிலே

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2012 பிப்ரவரி 1

அமைந்திருக்கிற அனைத்துக் கட்சிகளுக்கும் உரிய அளவு பங்கு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் முதன்மைத் துறையாக இருக்கிற விவசாயத் துறையைப்பற்றி பல்வேறு விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நிலைமை என்னவென்று சொன்னால், கடந்த காலத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி என்பது இல்லாமல், அது மரணப் படுக்கையிலே இருந்தது. அதற்கு முக்கியமான காரணம், விவசாயம் இலாபகரமான தொழிலாக இல்லாததுதான். இடுபொருட்களினுடைய விலை உயர்ந்துகொண்டே இருக்கிறது; டீசல் விலை அடிக்கடி ஏறிக்கொண்டிருக்கிறது; இப்பொழுதுகூட மத்திய அரசு உரத்தினுடைய விலையை உயர்த்தியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விவசாய விளைபொருளுக்குக் கட்டுப்படியான விலை என்பது கிடைப்பதில்லை. விவசாயத்தை நம்பியிருக்கிற கோடானுகோடி மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இது இருக்கிறது. மஞ்சள் விலை வீழ்ச்சி, மரவள்ளியினுடைய விலை வீழ்ச்சி, நெல்லுக்குப் போதுமான விலை இல்லை என்கிற இப்படிப்பட்ட நிலைமை தொடர் கதையாகிக் கொண்டே இருக்கின்றது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவராக இந்த அவையிலே இருந்தபோது, விழுப்புரத்திலே பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைத் திரட்டி, கரும்புக்கு உடனடியாக ஒரு டன்னுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.2,500 அறிவிக்க வேண்டுமென்று போராட்டம் நடத்தினார்கள். இப்போதுகூட, கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.2,200 ஆவது கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசின் C.A.C.P. ஆணையத்திடம் தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால், இவைகளுக்கெல்லாம் மாறாக, இப்போது டன் ஒன்றுக்கு வெறும் ரூ.2,100 என்று மட்டும் அறிவித்திருப்பது கரும்பு விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. எனவே மஞ்சள், மரவெள்ளி, நெல். . .

பிற்பகல் 12—50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 பிப்ரவரி 1]

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, கரும்புக்கு ஆதார விலை உயர்த்தப்படுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, முதற்கட்டமாக இந்த ஆண்டு கரும்புக்கு ஆதார விலையை போக்குவரத்து செலவு ரூ.100 உட்பட, ரூ.2,100 ஆக மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தி ஆணையிட்டு இருக்கிறார்கள். கரும்பு விவசாயிகள் கூடுதல் உற்பத்தி செய்து பொருளாதாரப் பயனடையவும், சர்க்கரை ஆலைகள் போதிய வருவாய் ஈட்டி அதன்மூலம் கரும்பு விவசாயிகளுக்கு அதிக விலை கொடுப்பதற்கு ஏதுவாகவும், எத்தனால் உற்பத்தியைத் துவங்க புரட்சித் தலைவி அம்மாவினுடைய தலைமையிலான அரசு 2002–ல் கொள்கையளவிலே முடிவு எடுத்தது. இதனடிப்படையிலே, தனியார் எரி சாராய வடிப்பு ஆலைகளும், இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் அமைந்துள்ள எரி சாராய வடிப்பு ஆலைகளும் எத்தனால் உற்பத்தியைத் தொடங்கின. இதன்மூலம் அவை 185 இலட்சம் லிட்டர் எத்தனால் தயாரித்து எண்ணெய் நிறுவனங்களுக்கு அளித்தன. எனினும், 2006 ஆம் ஆண்டிலே எத்தனால் உற்பத்தியை முந்தைய தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. இதனால் எத்தனால் உற்பத்தி செய்த சர்க்கரை ஆலைகள் இன்னலுக்கு உள்ளாயின. எத்தனால் மூலம் இலாபம் ஈட்ட முடியும் என்பதால் கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலை வழங்குவது சர்க்கரை ஆலைகளுக்கு எளிதாக இருக்கும். எனவேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே எத்தனால் உற்பத்தி ஊக்குவிக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதை நிறைவேற்றுகிற வகையிலே கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்தியைத் தொடங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதன்மூலம் கரும்பு விவசாயிகள் கூடுதல் விலை பெறவும், சர்க்கரை ஆலைகள் கூடுதல் வருவாய் ஈட்டவும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதற்கட்டமாகத்தான் ரூ.100 உயர்த்தி இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக ரூ.2,100 என்று அறிவித்திருந்தாலும், இன்றைய தேவையை ஈடுகொடுப்பதாக அது அமையவில்லை என்பதால் அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். குறைந்தபட்சம் ரூ.3,000 விலை கொடுத்தால்கூட விவசாயத்தில் கரும்பு சாகுபடி செய்யமுடியாது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்து, கடந்த ஆண்டு ஏற்பட்ட இழப்புக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை இதுவரையிலே வழங்கப்படவில்லை. மாநில அரசு செலுத்தவேண்டிய ரூ.73 கோடி பாக்கி இருக்கிற காரணத்தினால் அந்தத் தொகை வழங்க முடியாமல் இருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவந்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே இருக்கிற முக்கியமான பிரச்சினை மின்வெட்டு. அநேகமாக கடந்த ஆண்டு எப்படி மின்வெட்டு தமிழகம் தழுவிய பிரச்சினையாக இருந்ததோ, அதே நிலைமைதான் இன்றைக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. வரக்கூடிய காலத்திலேயும் மின்வெட்டைப் போக்குவதற்கான எந்தத் திட்டமும் இந்த அறிக்கையில் இடம்பெறவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அனுபவம் மிக்க உறுப்பினர். அவரே, மேலெழுந்தவாரியாக, ஆளுநர் உரையை முழுமையாகப் படிக்காமல் அல்லது தெரிந்துகொண்டே எதிர்க்கட்சி என்ற கடமையைச் செய்யவேண்டுமென்ற உணர்வோடு இங்கே பேசியிருக்கிறார் என்று கருதுகிறேன். அடுத்த ஆண்டுக்குள் 4,704 மெகா வாட் அளவுக்கு மின் உற்பத்தி தொடங்கப்படும் என்று தெளிவாக நமது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதையும் தாங்கள் அருள்கூர்ந்து பார்த்திட வேண்டுகிறேன். அதுமட்டுமல்ல, ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று பொத்தாம் பொதுவாக உறுப்பினர் சொல்லியிருப்பது உண்மையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 4,704 மெகா வாட் மின் உற்பத்தியும் அறிவித்த





காலகட்டத்திற்குள்ளாக நிச்சயமாகத் தொடங்கும். ஆகவே, நான் ஏற்கெனவே பலமுறை சொன்னதைப் போல, மின்சார உற்பத்தியிலே உடனடியாக இன்றைக்கே ஒரு திட்டத்தைத் தொடங்கி இன்றைக்கே மின் உற்பத்தியைப் பெருக்கிவிட முடியாது. சென்ற ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்திக்கு நடவடிக்கை எடுத்திருந்தால் இன்றைக்குப் பிரச்சினையே இருந்திருக்காது. ஆகவேதான், சென்ற ஆட்சிக் காலத்தில் ஒன்றிரண்டு திட்டங்களைக் கொண்டுவந்து இருந்தாலுங்கூட 2010–லே உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும் என்று இப்போதுதான் சொன்னேன். ஆனால், 2010–ல் மின் உற்பத்தி தொடங்க கடந்த ஆட்சிக் காலத்தில் போதிய நிதி உதவியும், பல்வேறு முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. இப்போதுதான் நாம் விரைந்து அந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். புதிய திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி அதை உங்களுக்கு விளக்கமாகச் சொன்னால் உங்களுடைய நேரம் போய்விடும். பல்வேறு புதிய திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நடைமுறையில் உள்ள திட்டங்கள் நிச்சயமாக செயல்படுத்தப்பட்டு மின் மிகை மாநிலம் என்ற நிலையைத் தமிழகம் அடையும். அதற்கு கால அவகாசம் தேவை. அதுவரை நீங்கள் பொறுமை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த இரண்டு ஆண்டு காலத்தில் 4,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படுமென்று சொன்னாலும், நான் இங்கே கவனப்படுத்த விரும்புவது ஒன்று, வருகிற ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கடுமையான மின்வெட்டு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூடங்குளம் அணுமின் நிலையம் சம்பந்தப்பட்ட வரையில், அங்கேயுள்ள மக்களுக்கு ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அது நியாயமானது. நிபுணர் குழு அமைத்து அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும். முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்கள், அந்தப் பகுதியிலே

ரூ.200 கோடி அளவிற்கு வளர்ச்சித் திட்டங்களை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற ஏற்பாட்டையும் செய்துகொண்டு, மொத்த உற்பத்தியிலே 60 சதவிகிதத்தை தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை வற்புறுத்தி, தமிழக அரசு மத்திய அரசினை உடனடியாக அந்த அணுமின் நிலையத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவதன்மூலம் 800 மெகா வாட் அதாவது 60 சதவித மின்சாரம் நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அடுத்து, இந்த நிலையில் மின் கட்டண உயர்வு வரும் என்கிற எச்சரிக்கை நம்மை அச்சப்படுத்துகிறது. இதிலே நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், பால் விலையானாலும், பேருந்துக் கட்டணமானாலும், ஏற்கெனவே இங்கே பல விவாதங்கள் நடந்துவிட்ட சூழ்நிலையில், சம்பந்தப்பட்ட துறைகளுக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும், அந்த நிதி நெருக்கடியைக் காரணம் காட்டாமல், அதைப் போக்குவதற்கான மாற்று வழிகள் என்ன என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்க வேண்டுமே தவிர. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் கட்டணத்தை மாநில அரசாங்கமே நிர்ணயம் செய்துகொள்ள முடியாது. மத்திய அரசின் சட்டப்படி, மின்சார ஒழுங்குமுறை ஆணையம், Electricity Regulatory Commission என்று இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு Judicial power உண்டு. நீதிமன்ற அந்தஸ்து உண்டு. அதிலே, முறையிடலாம். அந்த ஆணையம்தான் சீரமைத்து மின் கட்டணத்தை நிர்ணயிக்கும். அந்த வகையிலே நாம் எவ்வளவு தூரம் மின் கட்டணம் உயர்த்த வேண்டும் என்றும், சரி செய்ய வேண்டுமென்றும் கோரினாலும், உற்பத்திக்கான செலவு, விநியோகத்திற்காகக்கூடிய செலவு, இவற்றையெல்லாம் கணக்கெடுத்து, நியாயமான கட்டணத்தை நிர்ணயிப்பது மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான். ஆகவே, ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்துவது சரியானது என்ற கருதினால்தான் அதை ஏற்றும். ஆகவே, அது அதற்குரிய தனி அந்தஸ்து. அதிலே நாம் தலையிட முடியாது.



அதுமட்டுமல்ல, மற்றொரு வகையிலே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 53,000 கோடி ரூபாய் கடன் உள்ளது. தமிழ்நாடு அரசாங்கத்திற்கே ஏறத்தாழ ரூ.1,03,000 கோடி கடன் இருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் சென்ற தி.மு.க. ஆட்சியிலே ஒட்டுமொத்தமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிட்ட கடன். ஒட்டுமொத்த அரசாங்கத்தினுடைய கடன் ரூ.1,03,000 கோடி. ஒரு பொதுத் துறை நிறுவனத்தினுடைய கடன் மட்டும் ஏறத்தாழ 53,000 கோடி ரூபாய். இதுவும் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டது. அதற்கு முன்பிருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இருந்த ஒட்டுமொத்த கடன் 9,000 கோடி ரூபாய்தான். ஆனால், இந்த ஆட்சி முடிந்ததற்குப் பின்பு அந்தக் கடன் ஏறத்தாழ தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 53,000 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதை எப்படி எல்லாம் சரி செய்ய முடியும் என்று பார்க்காவிட்டால் தமிழகம் இருண்ட சூழ்நிலையில் இருந்துவிடும். மத்திய அரசும் போதிய நிதி ஆதாரம் வழங்கவில்லை. ஆகவே, குறைகளைச் சுட்டிக்காட்டும்போது இதற்கு மாற்று வழிகளையும், அதற்குரிய ஆலோசனைகளையும் நீங்கள் சொன்னால், அது சரியான ஆலோசனையாக இருந்தால், அதையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விலை உயர்வைப் பற்றி தொலைக்காட்சியிலே அறிவிக்கிற நேரத்தில், கடந்த ஆட்சியில் நிருவாகச் சீர்கேடு, தவறான நடைமுறை காரணமாக கடன் ஏற்பட்டதாகவும், அதனால் இப்போது விலை உயர்வு என்றும் சொன்னார்கள். எனவே, விலை உயர்வு மட்டுமே இதற்குத் தீர்வாக அமையாது என்பதுதான் எங்களுடைய கருத்து. அந்த அடிப்படையில் நிருவாகத்தைச் சீர்திருத்தம் செய்து, அதற்கான நிதிகளை வேறு வழிகளில் போகாமல் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அதிலிருந்து நிதிகளைப் பெறுவதற்கான நடைமுறையை இந்த அரசு ஏதாவது மேற்கொண்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. குணசேகரன்] [2012 பிப்ரவரி 1

பிற்பகல் 1–00

அதோடு இன்னொன்று; இப்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கருத்து கேட்புக் கூட்டம் நடத்துகிற நேரத்தில், இலவச மின்சாரத்தை இரத்து செய்யப் போவதைப்போல ஒரு எண்ணம் தோன்றுகிறது. அதாவது, விவசாயிகளுக்கு மின் கட்டணம் விதிக்கப்பட வேண்டும் என்கிற ஒரு கருத்தும் அங்கே பரப்பப்படுகிறது. எனவே, அதைப் பற்றி அரசாங்கத்தினுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் இரத்து செய்யப்படும் என்பது போன்ற ஒரு ஆபத்தான, விஷமத்தனமான பிரச்சாரத்தைத் தயவு செய்து யாரும் தொடங்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; தமிழ்நாடு மின்சார வாரியம், விவசாயப் பணிகளுக்கும் கட்டணத்தை நிர்ணயம் செய்கிறது. ஆனால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கின்ற அந்தக் கட்டணத்தை, அரசாங்கமே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கட்டி விடுகிறது. இதிலே தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாயிகளுக்கான கட்டணத்தை—குதிரை சக்தி ஒன்றுக்கு தற்போது 250 ரூபாய் என்றிருக்கிறது. அந்த 250 ரூபாய் என்கிற கட்டணத்தை—மாநில அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கட்டி விடுகிறது. இதிலே ஒருவேளை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அந்த விவசாயிகளுக்கான கட்டணத்தை உயர்த்தினாலும்கூட, அந்தத் தொகை முழுவதையும் மாநில அரசே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கட்டிவிடும். ஆகவே, இந்த இலவச மின்சாரம் என்பது, அப்படியே எந்தச் சூழ்நிலையிலும் தொடரத்தான் செய்யும். ஆகவே, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை.

மற்றொன்று; சிக்கன நடவடிக்கை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, கடந்த கால ஆட்சியில் ஏற்பட்டுவிட்ட இந்தக் கடனுக்கு பல்வேறு நிருவாகச் சீர்கேடுகளும், பல்வேறு முறைகேடுகளும்தான் காரணம். அவற்றையெல்லாம் கண்டறிந்து, எந்தவகையிலே சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தக்



2012 பிப்ரவரி 1]

கடன்களையெல்லாம் குறைக்க முடியும்; நிருவாகச் சீரமைப்பைச் செய்ய முடியும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து, நிருவாகத்தைச் சீரமைக்கின்ற பணிகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, நிருவாகத்தினுடைய செலவினங்களை எப்படிக் குறைப்பது என்று கேட்டார்கள். கடந்த கால ஆட்சியின் நிருவாகச் சீர்குலைவின் காரணமாக, எப்படி விரயங்கள் ஏற்பட்டன, அதைக் குறைப்பதற்கு என்ன வழி என்று கேட்டார்கள். போக்குவரத்துத் துறையைப்பற்றி நன்கு உணர்ந்த, நமது கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் போன்றவர்கள் இங்கே இருக்கின்றார்கள். கடந்த கால ஆட்சியில் Reserve Driver, Reserve Conductor என்று ஒரு புது வழிமுறையை உருவாக்கி, அதிகப்படியான ஓட்டுநர்களை, நடத்துனர்களை நியமனம் செய்து, அதன்மூலம் சில ஆதாயங்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பணிகளை வழங்கி, போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒட்டுமொத்தமாக நிதியிழப்பை ஏற்படுத்தினார்கள்.

அதுமட்டுமல்ல; பேருந்துகளிலே விளம்பரம் செய்கின்ற பணியைத் தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்குக் கொடுத்து, அந்த விளம்பரத்தின்மூலம் வரவேண்டிய விளம்பர வருமானத்தைத் தடைப்படுத்தினார்கள். சாலையோரத்தில் இருக்கின்ற உணவகங்களை எல்லாம் தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்து, அந்த உணவகங்கள் மூலமாக வருகின்ற வருமானத்தை அவர்கள் பெற்றுக் கொண்ட நடைமுறைகள் கடந்த காலங்களில் இருந்தன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, நலிவடைந்த போக்குவரத்துக் கழகங்களைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, தரமான சேவைகளை வழங்க வேண்டுமென்று

*[திரு. வி. செந்தில்பாலாஜி]* [2012 பிப்ரவரி 1

*உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், சாலையோரங்களில் இருக்கின்ற உணவகங்களை நடத்தும் உரிமையை டெண்டர்மூலம் விட்டு, அதன்மூலம் மட்டும் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் வருமானத்தை ஏற்படுத்தியிருக்கின்ற முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, வருவாயைப் பெருக்கும் நோக்கில், பேருந்துகளில் விளம்பரம் செய்வதற்கான கட்டணத்தை இரண்டு மடங்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள்.*

*அதேபோல, கடந்த காலங்களில் அடிச் சட்டங்கள், என்ஜின்கள், நல்ல நிலையிலே இருக்கின்ற பேருந்துகள் ஏலம் விடப்பட்டு, தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், தனியார் பேருந்துகளுடைய உரிமையாளர்கள் ஏலம் எடுத்துச் சென்று, அதன்மேல் மீண்டும் கூடு கட்டி இயக்குவார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செலவினங்களைக் குறைக்க வேண்டும்; தரமான சேவைகளை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், 1,432 பேருந்துகளைக் கண்டறிந்து அவற்றைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நல்ல நிலையில் இருக்கின்ற அடிச்சட்டம், என்ஜின்கள் கொண்ட பேருந்துகளில் மீண்டும் கூடு கட்டி, பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்குவதற்காக நடவடிக்கை எடுத்து, 97 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில், 1,432 பேருந்துகளுக்கு புதிய கூடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

*2012-2013 ஆம் ஆண்டிலே 3 ஆயிரம் பேருந்துகளை வாங்கி, புதிய அடிச்சட்டங்களை வாங்கி, அதைக் கூடு கட்டி மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்குகின்றபோது, 539 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவாகிறது. 3 ஆயிரம் பேருந்துகளுக்கு 540 கோடி ரூபாய் செலவினம் ஏற்படுகிறது. ஏற்கெனவே நல்ல நிலையில் இருக்கின்ற 1,432 பேருந்துகளைப் புதுப்பித்து, மக்களுடைய பயன்பாட்டிற்காக இயக்குவதற்கு 98 கோடி ரூபாய் மட்டுமே செலவினம் ஏற்படுகிறது. இப்படிச் செலவினங்களைக் குறைத்து, வருவாயைப் பெருக்கி, போக்குவரத்துத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டும்; மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க வேண்டுமென்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த முதலமைச்சர்,*



2012 பிப்ரவரி 1] *[திரு. வி. செந்தில்பாலாஜி]*

*மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதில் என்கிற முறையில், வழக்கம் என்கிற முறையில் எல்லா நேரத்திலும் அமைச்சர்களே பேசிக் கொண்டிருந்தால், பேசாமல் அவர்களே பேசிக்கொண்டிருக்கலாம். நாங்கள் பார்வையாளர்களாக இருந்துவிடுகிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நீங்கள் கேட்கிற கேள்விக்குத்தான் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். நீங்கள் நிறைய விளக்கங்களை அவர்களிடமிருந்து கேட்டுப் பெறுகிறீர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்களே, கடைசியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க இருக்கிறபோது எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பதில் சொல்லட்டும். அமைச்சர்கள் பதில் சொல்ல எடுத்துக்கொள்கிற நேரத்தைக் கணக்கிட்டு, எங்களுக்குக் கொடுக்கிற நேரத்தைக் குறைக்காதீர்கள். எங்களுக்கு வழங்கும் நேரத்தைக் கொடுங்கள். எனவே, நிதி நெருக்கடியைச் சரி செய்ய நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களை பாதிக்கக்கூடிய அளவுக்கு இந்தக் கட்டண உயர்வுகள் இருக்கக்கூடாது. மக்கள் தலையில் சுமையை ஏற்றக் கூடாது என்பதைத்தான் நாங்கள் அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*அடுத்ததாக, 'தானே' புயல் பற்றி ஏற்கெனவே இங்கே விளக்கமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கிற முறையில், அந்தத் 'தானே' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு, அதனுடைய நேரடிக் கொடுமைகளை அனுபவித்தவன் என்கிற முறையிலே, இங்கே சில விஷயங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கடலூர், விழுப்புரம் மாவட்டங்களை 'தானே' புயல் புரட்டிப் போட்டிருக்கிறது. ஏறக்குறைய இரண்டு*

கோடி மரங்கள் அங்கே விழுந்துவிட்டன. பல்லாயிரக்கணக்கான மின் கம்பங்கள் சாய்ந்து விட்டன; மின் மாற்றிகள் எல்லாம் சாய்ந்து வரலாற்றில் இதற்கு முன்னால் எப்போதுமே இல்லாத ஒரு மிகப் பெரிய பேரிழப்பு இந்தப் புயலால் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். இப்படிப்பட்ட பேரிடர் இழப்புக்கு அந்த மாவட்டம் உள்ளாக்கப்பட்டபோது அங்கே நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, மின்சாரத் துறையை சீரமைப்பதற்கு மிகத் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிவாரணப் பணிகளைக் கண்காணித்து உதவுவதற்கு பதினைந்திற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் அங்கே தங்கி, அந்தப் பணிகளை முடுக்கிவிட்டிருப்பது போன்ற நல்ல நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேசமயத்தில், இத்தகைய தேசியப் பேரிடர் ஏற்பட்டிருக்கும்போது, இந்தப் பேரிடரிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பிலே இருக்கிற மத்திய அரசு, அதைக் கண்டுகொள்ளாமல் ஒரு பார்வையாளராக இருந்தது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவே, மத்திய அரசு வழங்கியிருக்கிற 500 கோடி ரூபாய் என்பது மட்டுமல்லாமல், தமிழக அரசு கேட்டிருக்கிற 5,248 கோடி ரூபாயையும் உடனடியாக வழங்க வேண்டும். மத்திய அரசில் இடம் பெற்றிருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அங்கே, அதை வாதாடி, போராடி பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை மத்திய அரசு இந்தப் பேரிடரால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த மாவட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கு நிதியைக் கொடுக்க மறுக்குமேயானால், மத்திய அரசையும், அதிலே அங்கம் பெற்றிருக்கிற அமைச்சர்களையும், அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சிகளையும், தமிழக மக்கள், குறிப்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட மக்கள், ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாநில அரசு இப்படிப்பட்ட பல காரியங்களைச் செய்திருந்தாலும், ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிய இழப்பு என்கிற காரணத்தினால் சில பிரச்சினைகள், சில குறைபாடுகள் இருப்பது என்பது தவிர்க்க முடியாதது என்பதை இங்கே, இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



குறிப்பாக ஆரம்பத்தில் தமிழக அரசால் நியமிக்கப்பட்ட சில உயர் அதிகாரிகள், திடீரென வந்த புயலாக இருக்கின்ற காரணத்தினால் அந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான உரிய அனுபவம் இல்லாத நிலைமையுடன் சேர்ந்து, சில குறைபாடுகள் வந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, இந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைச்சர்கள், அதிகாரிகள் எல்லோரும் அதிகமாக அங்கே இருந்து பணியாற்றினாலும் அந்தப் பணிகளை எடுத்துச் செய்வதற்கு, அங்கே ஏற்கெனவே நிருவாகத்திலே இருக்கின்ற காலிப் பணியிடங்களினால், ஊழியர்களின் எண்ணிக்கை போதவில்லை. நான்கு, ஐந்து ஊராட்சிகளுக்கு ஒரு கிராம நிருவாக அலுவலர் என்ற நிலை, வட்டாட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகங்களிலே ஊழியர்கள் இல்லாமை அனைத்தும் சேர்ந்து நிவாரணப் பணிகள் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய் கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிறகு அமைச்சர்கள் வந்த பின்னால், அது ஓரளவுக்கு சரி செய்யப்பட்டு அனுபவம் உள்ள அதிகாரிகள் மீண்டும் அங்கே பொறுப்பேற்று அந்தப் பணிகள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல எவ்வளவு வேகமாக அந்தப் பணிகள் முடிந்திருக்கின்றன என்பதை நீங்களே பாராட்டியிருக்கிறீர்கள். பத்திரிகைகளில் நான் படித்தேன். உங்களுடைய பாராட்டுதலைப் பெறுகின்ற அளவுக்கு அந்தப் பணிகள் இருந்திருக்கின்றன. இப்போதும் பாராட்டியிருக்கிறீர்கள். அதற்காக நன்றி.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஆனால் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புவது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். இருபத்தைந்து நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** நான் பத்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள்தான் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஆகவே, இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்னும்கூட சில கிராமங்களில் நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட கிராமங்களில் நிவாரணங்களையும் உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *1–10*

ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படுவது என்பது ஒரு பெரும் சுமையாக இருந்தாலும், மேதகு ஆளுநர் உரையில் அதை அறிவித்திருப்பதை இந்த நேரத்தில் நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில் அந்த மாவட்டங்களில் இருக்கின்ற குடிசை வீடுகள் அனைத்தையும் படிப்படியாக கான்கிரீட் வீடுகளாக மாற்றித் தருவதற்கான திட்டத்தில் மத்திய அரசினுடைய பங்கினையும் பெற்று நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இழப்பீடு போதுமானதாக இல்லை. எனவே, முந்திரி, பலா, தென்னை போன்ற அத்தனைக்கும் ஒரு ஏக்கருக்கு ரூ.9,000/– என்று இருந்த இழப்பீட்டுத் தொகையை ரூ.60,000/– என உயர்த்தி வழங்க வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவ மக்களுக்கு மேலும் முழு நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன் அத்தனையும் இரத்து செய்யயப்பட வேண்டும். கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள், சிறு தொழில்முனைவோர்கள், வர்த்தகர்கள், கறிக்கோழி விவசாயிகள் போன்றவர்களுக்கு ஏற்பட்ட அத்தனை இழப்புகளையும் ஈடு செய்யக்கூடிய முறையில் நிவாரண உதவிகளை வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த மூன்று மாத காலத்திற்கு தடையில்லாத மின்சாரத்தை பாதிக்கப்பட்ட இம்மாவட்ட மக்களுக்கு வழங்கினால், அவர்கள் மேலும் சாகுபடியை செய்து, இந்த நஷ்டத்தை ஓர் அளவிற்கு ஈடு செய்ய முடியும். எனவே, உடனடி கடமைகள் என்கின்ற முறையில் இவற்றைச் செய்கிற அதே நேரத்தில், நீண்ட காலக் கடமைகள் என்கிற முறையில் அந்த மாவட்டத்தை ஒரு வளமான





மாவட்டமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நில மோசடியில் ஈடுப்பட்ட பலர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது, அப்படி மீட்கப்பட்ட நிலம் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட விவரங்களைக் கொண்ட அறிக்கையினை தமிழக அரசு வெளியிட வேண்டும். இந்த நில மோசடியிலே மிகப் பெரிய மோசடி, தூத்துக்குடி மாவட்டத்தில் தெய்வசெயல்புரம் கிராமத்தில் நடந்தது. தொள்ளாயிரம் ஏக்கர் விவசாயிகளுடைய நிலத்தை வேறு சில பேர்கள் பினாமியாக கிரயம் பெற்று, பட்டாவையும் பெற்று விட்டார்கள். இந்த நில மோசடியை எதிர்த்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி போராடி வருகின்ற காரணத்தினால், எங்களுடைய கட்சியினுடைய முன்னணி உறுப்பினர்கள் தாக்கப்படுகிறார்கள். எங்கள் கட்சியினுடைய மாவட்ட செயலாளர் வீட்டின்மீது பெட்ரோல் குண்டு வீசப்படுகிறது. நிலைமை என்னவென்று சொன்னால், அந்த பினாமி பேர்வழிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கடந்த ஆட்சியிலே நாங்கள் மனு கொடுத்திருந்தோம். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம், அந்த மோசடி பேர்வழிகள் அன்றைக்கு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இன்றைக்கு வந்திருக்கிற ஆட்சியும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டி வருகிறது. இது அங்கே சட்டம்—ஒழுங்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி நீங்கள் மனு கொடுத்தீர்கள். அதனை ஆய்வில் எடுத்துக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். எல்லோரும் பட்டா வாங்கி விட்டார்கள். முன்னாள் ஆட்சியில் அனைவருக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. முறைப்படி எப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்தத் துறை பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. துரிதமாக அந்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது என்னிடத்தில் மனுக்களைக் கொடுத்தார். புதுக்கோட்டை கிராமம் என்று நினைக்கின்றேன். உடனடியாக நான் மாவட்ட ஆட்சியரை தொடர்புக்கொண்டு அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டத்திலே இருந்தும்கூட சென்று சிலர் பட்டாக்களைப் பெற்றுள்ளதாக என்னிடத்தில் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்களை மாவட்ட ஆட்சியரிடத்தில் கொடுத்து, உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லி, அது எந்த நிலையில் இருக்கிறது என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தயவு செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்ல வேண்டாம். அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றோம். நீங்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்றுதான் பேசாமல் இருந்தேன்.

ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'தானே' புயலினால் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை. போதிய அளவு அதிகாரிகளும் இல்லாத காரணத்தினால், பாதிப்பு அதிகமாக இருந்தது என்று சொன்னீர்கள். ஒன்றை மட்டும் நீங்கள் நன்றாக நினைத்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் 29 ஆம் தேதி இரவு முழுவதும் தொடர்பு கொண்டு, அங்கு இருக்கின்ற மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், மேலும் உயிர் பலி வந்துவிடக் கூடாது என்பதற்காக அன்றையதினம் முழுவதும் நடவடிக்கை எடுத்து, கிட்டத்தட்ட 7,000 பேரை பாதுகாப்பிற்காக பள்ளியில் தங்க வைத்திருக்கின்றோம் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதுமட்டுமல்லாமல் போதிய அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் நிவாரணப் பணி பாதிக்கப்பட்டதாகச் சொன்னார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். எங்களோடு பலமுறை பேசி அந்த நிவாரணப் பணியில் கலந்து கொண்டவர். உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமென்று வெளி மாவட்டங்களிலிருந்து கிட்டதட்ட 200 வட்டாட்சியர்களை அங்கு அழைத்திருந்தோம்.





அதுமட்டுமல்ல கோட்டாட்சியர் 20 பேர்களை அங்கே அழைத்திருந்தோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். 4 இலட்சம் பேர்களுக்கு கிட்டத்தட்ட பத்து நாட்களிலே அந்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நீங்கள் தயவு செய்து அதைப் பாராட்ட வேண்டும். இதைக் குறையாக சொல்லக்கூடாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** தூத்துக்குடியிலே நடந்த நில மோசடியில் பட்டா மாற்றுகிற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது வரவேற்கத் தகுந்தது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, வன்முறையிலே ஈடுபடுகிற அந்த பினாமி பேர்வழிகளின்மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை, அவர்கள் கைது செய்யப்படவில்லை. எனவே, அந்தக் குற்றவாளிகள் தப்பிவிடக்கூடாது, அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டம்—ஒழுங்கு சம்பந்தப்பட்ட வரையில் இங்கே அமைதியான நிலைமை இருப்பதாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நிலைமை என்னவென்று சொன்னால், ஆளுநர் அவர்கள் இங்கே உரையை படித்துக் கொண்டிருக்கிற அதே தினத்தில், தமிழ்நாட்டிலே 3 இடங்களிலே கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. எனவே, இன்றைக்கு பல இடங்களிலே பட்டப் பகலிலேயே கொள்ளை அடிப்பது, வங்கிகளில் கொள்ளை அடிப்பது, வீடுகளிலே இருக்கிற பெண்களைக் கொலை செய்து நகைகளைக் கொள்ளை அடிப்பது போன்ற சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது, உறுப்பினர்கள் நிறைய பேர் பேச வேண்டும்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஆகவே, சட்டம்—ஒழுங்கைப் பாதுகாக்கிற நடவடிக்கையை கூடுதலாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட—ஒழுங்கைப் பாதுகாப்பதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு யாரும் சொல்லிக் கொடுத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இணையாக, அவரைப்போல 'நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே', (மேசையைத் தட்டும் ஒலி) சாமியாராக இருந்தாலும், சாமானியனாக இருந்தாலும் ஒன்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று விருப்பு வெறுப்பின்றி வெளிப்படையாக கடும் நடவடிக்கைகளை எடுத்து, இரும்புக்கரம் கொண்டு அடக்கி, சட்டம்– ஒழுங்கை நிலைநாட்டி வருபவர் வேறு யாரும் கிடையாது. ஆனால், ஏதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்கள் நடக்கலாம், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அப்படி நடைபெறுகின்ற சம்பவங்களுக்கு என்ன நடவடிக்கையை எடுத்தது அரசு என்பதுதான் முக்கியமே தவிர, நடவடிக்கைகளை மூடி மறைத்து, குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு அளித்தது கடந்த கால தி.மு.க. ஆட்சி. கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே குற்றவாளி. .. (குறுக்கீடுகள்) நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** தி.மு.க. ஆட்சியில்... (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் மேலெழுந்தவாரியாகச் சொல்லவில்லை. உதாரணத்தையே சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மேலெழுந்தவாரியாகச் சொல்லவில்லை, உதாரணத்திற்கு என்ன சம்பவங்கள் என்பதைச் சொல்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, எப்படி சட்டம்– ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது, இப்போது புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே எப்படி நிலைநாட்டப்படுகிறது என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, எப்படி சட்டம்– ஒழுங்கு



நிலைநாட்டப்பட்டது என்பதற்கு மதுரை சம்பவங்களே ஓர் உதாரணம். (குறுக்கீடுகள்) ஆனால், புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு அப்படியல்ல. யார் தவறு செய்திருந்தாலும், எந்தத் தவறு இருந்தாலும், அந்த இடத்திலே அங்கே கடுமையான நடவடிக்கை எடுத்து, உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. நடவடிக்கை எடுக்காமல் இருந்தால்தான் தவறு—சம்பவங்களுக்கு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது அம்மாவினுடைய அரசு. ஆனால், தி.மு.க. ஆட்சியில் நடந்ததுபோல, குற்றவாளிகளுக்கு வக்காலத்து வாங்குவதோ அல்லது சட்டம்—ஒழுங்கைப் பாதுகாப்பதிலே விருப்பு வெறுப்போடு நடந்து கொள்வதோ புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு அல்ல. எங்களுடைய கட்சிக்காரர்களே இருந்தாலும்கூட, சட்டம்—ஒழுங்கை நிலை நாட்டுவதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இணையாக இந்தியாவிலே எந்த முதலமைச்சருமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு சிறப்பு வாய்ந்ததாக, அம்மா அவர்கள் இந்த ஆட்சியில் நல்லாட்சி நடத்தி, தமிழகத்திலே சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு மூத்த உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது,.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** இரண்டு நிமிடம் கொடுங்கள். சட்டம்– ஒழுங்கைப் பொறுத்தவரையில், உதாரணமாக காவல் நிலையங்களிலே நடைபெறுகிற சாவுகள் சமீப காலத்திலே அதிகரித்து வருகின்றன. பாராட்டக்கூடிய பணி செய்யக்கூடிய காவலர்களைப் பாராட்டுவது நல்லது. ஆனால், தவறு இழைக்கக்கூடிய காவலர்கள்மீது தயவுதாட்சண்யமில்லாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுவதைப் பார்த்தால் இப்போது முடிப்பது மாதிரி தெரியவில்லை. நீங்கள் உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் உ. தனியரசு அவர்கள். (குறுக்கீடு) பேசியது போதும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முடிப்பது மாதிரி தெரியவில்லை. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும். உட்காருங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–20

**திரு. க. பாலகிருஷ்ணன்:** சரி. அடுத்து, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற மாற்றுத் திறனாளிகள், பெண்கள் என விளிம்பு நிலையிலே இருக்கிற இப்படிப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, 60 சதமான ஊனம் இருந்தால்தான் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை கிடைக்குமென்கிற பல நிபந்தனைகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேலே சொத்து இருந்தால் நிவாரணமே கிடைக்காது என்கிற விதிமுறை இருக்கிறது. அவற்றையெல்லாம் தளர்த்த வேண்டும்.

பாளையங்கோட்டை சித்தா கல்லூரி, நாகர்கோயில் ஆதித்தனார் கல்லூரிகள் போன்றவற்றில் மாணவர்கள் சேர்க்கை முடிந்து ஆறு மாதங்களாகியும் அக்கல்லூரிகள் திறக்கப்படவில்லை. தலித் மக்களுக்கான இட ஒதுக்கீடு, மக்கள் தொகை அடிப்படையிலே 18+1=19 விழுக்காடு என்று இருப்பதை மக்கள் தொகை அதிகரித்திருக்கிற காரணத்தினால் 19+1=20 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்த்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். திருமங்கலத்தில் செவரக்கோட்டையில் சிப்காட் நடவடிக்கைக்காக அங்கே விவசாய விளைநிலங்கள் கையகப்படுத்தப்படாது என்று இந்த அவையிலே ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது நின்றபாடில்லை. அங்கே நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, விவசாய விளைநிலங்களைக் கையகப்படுத்தக்கூடாது என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, தமிழ்நாட்டிலே வன உரிமைச் சட்டம் அமலாக்கப்படவில்லை. அதை அமலாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக திண்டுக்கல் மாவட்டம் பெரியம்மாபட்டியில் உபரி நில விநியோகத்திலே நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக ஈடுபட்டு பல ஆண்டுக்காலம் நிலுவையிலே இருந்த பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இப்போது வந்திருக்கிற வருவாய்த் துறை அமைச்சரும் மீதம் இருக்கிற நடவடிக்கையை எடுத்து, அங்கே இருக்கிற உண்மையான பயனாளிகளுக்கு அந்த நிலத்தை வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டு தமிழக ஆளுநர் அவர்கள் இம்மாமன்றத்தில் உவந்தளித்த உரையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான இந்நல்லரசு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்கள் பற்றியும் மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் விரைந்து செய்து தர அரசு முனைந்து செயலாற்றுவது குறித்தும் அழுத்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. குறிப்பாக, சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான அனைத்து குறியீடுகளிலும் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக தமிழ்நாட்டை மேம்படுத்தத் தீர்மானித்திருப்பது; தேர்தல் வாக்குறுதிகளை தாராளமாகவும் விரைவாகவும் நிறைவேற்றி வருவது; ஒளிவு மறைவற்ற திறமையான நிருவாகத்தை வழங்கிட எண்ணி செயலாற்ற இருப்பது; ஆற்று நீர் ஆதாரத்தைப் பெறுவதில் நம் தமிழ்நாடு கடை மடை மாநிலமாக உள்ளதால் ஏற்படும் பதட்டத்தைப் போக்கி நமக்கான உரிமையைப் பாதுகாத்து மீட்டெடுப்பதில் அறிவுவழி நடந்து, உரிமை காக்க வாதாடி வருவது; மாநில அதிகாரங்களைப் பறிக்க மத்திய அரசு முயற்சிப்பதைச் சுட்டிக்காட்டி துணிந்து மறுத்துரைத்திருப்பது; மத்திய நிதியுடன் மாநில நிதியையும் இணைத்து மாநில அரசுகளே

திட்டம் தீட்டிச் செயல்படுத்த சுதந்திரம் வழங்க மத்திய அரசை வலியுறுத்தியிருப்பது; 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக சுமார் 1000 கோடி செலவில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தர இருப்பது; மீனவர்களின் உயிர் காத்து, உரிமை மீட்பதில் உறுதியான நடவடிக்கை; மருத்துவம், பொறியியல் கல்வியில் நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வரும் மத்திய அரசின் முயற்சியைக் கைவிட வலியுறுத்தி இருப்பது; மேற்கு மாவட்டங்களின் முக்கியத் தொழிலாக வளர்ந்து, இயங்கி வந்த சாய, ஜவுளித் தொழிலையும், விவசாயிகளையும் விளைநிலங்களையும் பாதுகாத்து, முடங்கிக் கிடந்த தொழிலும் விவசாயமும் செழித்து வளர்ந்திட சுமார் ரூபாய் 250 கோடிக்கும் அதிகமாகத் தந்து, மீண்டும் தடையின்றி இயங்க நடவடிக்கை எடுத்து இருப்பது; மின் பற்றாக்குறையைப் போக்கிட அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4,704 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திட திட்டங்களைத் துவக்கி நிறைவேற்ற இருப்பது; சீரான வளர்ச்சிக்கு தரமான சாலைகளை உருவாக்க இருப்பது; புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வந்து, ஏழை மக்களின் நோய் போக்கிட உதவி இருப்பது; 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து செயலாற்றி, எதிர்க்கட்சிகள்கூட குறிப்பிட்டுக் குற்றம் சொல்லமுடியாதபடி அரசு நிர்வாகத்தை மக்களுக்கு மிக அருகில் வைத்து உதவியது, இன்னமும் உதவக் காத்திருப்பது, இப்படி ஆளுநர்தம் உரைமூலம் நாட்டு மக்களுக்கு உண்மையைச் சொல்லி அலங்காரம், ஒப்பனைகள் ஏதும் இன்றி, ஏழையெளிய மக்களின் வாழ்வில் ஏற்றம் பெறச்செய்யும் யதார்த்தமான இந்த உரை, கவர்ச்சி காட்டி மக்களை மயக்கத்தில், உறக்கத்தில் வைத்திருக்க விரும்பாத மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசியல் நிருவாக அறிவாற்றலை பிரதிபலிக்கும் நேர்மையான உரை என்பதனால் மகிழ்ந்து வரவேற்று, நன்றி பாராட்டி, ஒரே ஒரு கோரிக்கைமீது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1—25

உலகின் கடைசி அரசியல் அனாதைகளாக இலங்கைத் நாட்டில் உயிருடன் எஞ்சியிருக்கும் தமிழ் மொழி பேசும் இலங்கைத் தமிழ்



மக்கள் அரசியல் சுதந்திரத்தையும், சட்டபூர்வமான சம உரிமையையும், வாய்ப்பையும் பெற்று, சொந்த மண்ணில் பாதுகாப்புடன் உயிர் வாழ, 'நடுங்காத மனமே மகத்தான ஆயுதம்' எனும் இலக்கணத்திற்குச் சான்றாக விளங்கும் நம் முதல்வர் அன்புத்தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்புடன் ஆவன செய்ய வேண்டி கேட்டு வாய்ப்புக்கு மீண்டும் நன்றி பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையில் தமிழக அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான அறிவிப்புகள் உள்ளதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறேன். மிகப் பெரிய நிதிச் சுமையுடன் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த அரசு, தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள், உடனடியாக அமல்படுத்தப்படுமா என்று வினா எழுப்பியவர்கள் ஆச்சரியப்படும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருவதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகிறோம்.

இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாற்றும் உறுதியான நடவடிக்கையோடு பல முன்னோடித் திட்டங்களான, அனைவருக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கிராமப்புற சுகாதாரத் திட்டம், அனைவருக்கும் தரமான கல்வி, மாணவ, மாணவியர் சிறப்பாகக் கல்வி கற்கத் தேவையான பல்வேறு அரசு சலுகைகள், கிராமப்புற மக்கள் பொருளாதார உயர்வு பெற விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள், அனைத்து குடும்ப கார்டுகளுக்கும் விலையில்லா அரிசி போன்ற திட்டங்களை அரசு நிறைவேற்றியுள்ளது. அதோடு விலையில்லா கிரைண்டர், மிக்ஸி, மின் விசிறி, தாலிக்குத் தங்கம், திருமண நிதியுதவி போன்ற திட்டங்களை வாக்களித்த மக்களுக்கு அளிப்பது மன நிறைவைத் தந்துள்ளது.

மத்திய அரசின் அலட்சியப் போக்காலும், பாராமுகத்தாலும், தொடர்ந்து நமது மாநிலம் உரிமைகளை இழந்து வந்துள்ளதை சுட்டிக்காட்டி, சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட இலங்கைத்

*[திரு. வெ. பொன்னுப்பாண்டி]* [2012 பிப்ரவரி 1

தமிழர்களுக்கு ஆதரவான தீர்மானம், கச்சத் தீவை மீட்க வேண்டும் என்ற தீர்மானம், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம், தூக்குக் கயிற்றை நெருங்கிக்கொண்டிருந்த பேரறிவாளன், முருகன், சாந்தன் போன்றவர்களின் தூக்குத் தண்டனையை நிறுத்த இந்த அரசால் கொண்டுவரப்பட்ட நல்ல நடவடிக்கை ஆகியவற்றை கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகிறோம்.

அதேபோல அணையின்மீதும் உரிமையுள்ள மாநிலத்திலுள்ள பாதுகாப்புக் குழுவின் கட்டுப்பாட்டில் அணைகள் இருக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தியதும் சரியான நடவடிக்கையாகும். தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த 'தானே' புயலின் பாதிப்பை சரிப்படுத்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. ஒரு மணி நேரம் மின்சாரம் இல்லை என்றால் அதன் பாதிப்பை நாம் உணருகின்ற இந்த நேரத்தில், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட மக்களின் கஷ்டத்தை நாம் நினைக்கும்போது அந்த மக்களுக்காக போர்க்கால அடிப்படையில் அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை பாராட்டாமல் இருக்கமுடியாது.

நான்கூட ஒரு மின் நுகர்வோர் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். மின்வெட்டு பற்றியும், பழுதான மின் மாற்றிகள் பற்றியும் பேச வேண்டும் என்று எண்ணி சென்றிருந்த நான், கடலூர் நிலவரத்தைக் கேள்விப்பட்டு எதையும் பேசாமல் அங்கிருந்து திரும்ப நேர்ந்தது. பல மின் மாற்றிகளும், ஆயிரக்கணக்கான மின் கம்பங்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சிலவற்றிற்காக அதிகாரிகள் மீது கோபப்படுவது நியாயமில்லை என்பதை உணர்ந்து நான் அங்கிருந்து திரும்பினேன்.

*பிற்பகல் 1–30*

அந்த மாவட்ட மக்களுக்கு தமிழக அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டுள்ள, பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனரமைப்புப்



2012 பிப்ரவரி 1] *[திரு. வெ. பொன்னுப்பாண்டி]*

பணிகளுக்காக ஒதுக்கப்படும் தொகையினை உயர்த்தியும், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். 'தானே' புயலால் பாதிப்புக்கு ஏற்றவாறு மாநில அரசு கோரியுள்ள நிதியை மத்திய அரசு உடனே ஒதுக்கீடு செய்யவேண்டும்.

கூட்டணிக் கட்சித் தலைவர்கள்கூட, எதற்கும் **காங்கிரஸ் கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும் நம் மாநிலத்தின் நலன்மீது அக்கறை செலுத்தவில்லை. 'தானே' புயல், முல்லைப் பெரியாறு போன்ற பிரச்சினைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தத் தவறி இருக்கின்றது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் பேச இருக்கின்றார் அல்லவா? அப்போது பேசுவார், உட்காருங்கள். அவர் பேசும்போது பதில் சொல்லட்டும்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் முடிந்தவுடனேயே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் பேச இருக்கின்றார் அல்லவா? அவர் பேசும்போது பேசட்டும்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் முடிந்தவுடனேயே, 58 வயது கடந்தவர்களுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியான செய்தியாக 500 ரூபாயிலிருந்து ஓய்வூதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்தி அறிவித்தார்கள். நாங்கள் நன்றி சொல்லப் போன இடத்தில், பொதுமக்கள் எங்களிடம் இந்த அரசுக்கு நன்றி சொன்னார்கள். உடனே உதவித்தொகை கேட்டு மனுக்களை கொடுத்தார்கள். மனுக்களை கிராம நிருவாக அதிகாரிகள் ஏனோ தானோ என்று விசாரிப்பதால், முடிவு தெரியாமல் மீண்டும் மீண்டும் மனுக்களை கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். உதவித் தொகை பெற வறுமைக் கோடு பட்டியல் தேவையில்லை என்ற அறிவிப்பை கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனாலும், இன்றைக்கு அந்தப் பட்டியலை வைத்துதான் உதவித் தொகை பெற பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றார்கள். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் பேச இருக்கின்றார் அல்லவா? அவர் பேசும்போது பதில் சொல்லட்டும்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** அதற்குத் தெளிவான வழிகாட்டுதலை உருவாக்கவேண்டும். அதேபோல்தான் பட்டா கேட்டு மனு கொடுத்த இலட்சக்கணக்கானவர்களின் நிலையும் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** அரசே நிலத்தைப் பெற்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வீடற்றவர்களுக்கு பட்டா வழங்கினால் இந்த அரசை மக்கள் போற்றுவார்கள்.

அதேபோல, கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம். அந்த குக்கிராமங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யும் 'தாய்' என்கின்ற திட்டம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. குக்கிராமங்களுக்கு 20 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஊராட்சிகளுக்கு தொகை ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஊராட்சிகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் என்பதை அரசாங்கம் அறிவிக்கவேண்டும்.

அதேபோல, பஸ் கட்டணம், பால் விலை உயர்வு என்பது கொஞ்சம் கசப்பாக இருந்தாலும் வருகின்ற காலங்களில் உயரும் என்று எதிர்பார்க்கப்படும் மின் கட்டணத்தை அரசு உயர்த்தாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 63 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருந்தாலும், காவல் துறை மற்றும் கல்வித் துறைக்குத்தான் அதிக அளவிலே வேலைக்கு நியமனம் செய்யப்படுகிறார்கள். மாற்று வேலைகளான வனத்தைக் காப்பது மற்றும் பல்வேறு உள்ளாட்சிப் பணிகளில் நியமனம் செய்வது, காலிப் பணியிடங்களை நிரப்புவது போன்ற நடவடிக்கைகளின்மூலம் படித்தவர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை பிறக்க வழிவகை ஏற்படுத்த வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 1] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

தமிழகத்தில் மூடப்பட்ட பல்வேறு ஆலைகளைத் திறப்பது சம்பந்தமாகவும், பெரும்பான்மையான அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை முறைப்படுத்துவது சம்பந்தமாகவும் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். குடிசையில்லாத கிராமங்கள் என்ற திட்டத்தின்மூலம் வீடு கட்டிக்கொள்ள அரசு நிதியொதுக்கியுள்ள அதே நேரத்தில், இன்னும் பேரூராட்சி மற்றும் நகராட்சிகளிலும் குடிசை வீடு மற்றும் சிறிய பழுதடைந்த வீடுகளில் குடியிருந்து வருகின்றவர்களையும் அரசு கவனத்தில் கொண்டு அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

போக்குவரத்துத் துறையில் புதிய பஸ்களை வாங்கினாலும் மக்கள் தொகைக்கு ஏற்ப கிராமப்புறங்களுக்கும் புதிய வழித் தடங்களில் பஸ்களை விடுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெங்காயத்தை உரித்தால் மட்டும் கண்ணீர் வரும். ஆனால், தென் மாவட்ட மக்களுடைய வாழ்க்கையில், வெங்காயம் விளைச்சல் செய்தாலும்கூட இன்றைக்கு கண்ணீர் வருகின்றது. தென் மாவட்டங்களில் வெங்காய விளைச்சல் அதிகமான காரணத்தால் அறுப்புக் கூலிகூடக் கொடுக்க முடியாமல் பல விவசாயிகள் வெங்காயத்தை நிலத்திலிருந்து எடுக்காமலே விட்டுவிட்டார்கள். பாதிக்கப்பட்ட வெங்காய விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் முப்பதாயிரம், நஷ்ட ஈடாக வழங்கப்படவேண்டும்.

*பிற்பகல் 1-35*

கரும்பு விவசாயிகள் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்று இன்றைக்கு போராடிக்கொண்டிருக்கின்றார்கள். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500/– என்கிற வகையில், விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வீசிய சூறாவளிக் காற்றால் சேதமடைந்த வாழை விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும்.

ஆளுநர் உரையில் இடம்பெறாவிட்டாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகின்ற 4 ஆம் தேதி அன்று பதிலுரை தெரிவிக்கின்றபோது நல்ல பல செய்திகளை அறிவிப்பதாகச்

*சொன்னார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டதுபோல 58 வயதான அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தென் மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கனவான, ராஜபாளையம்– தேனி– வருசநாடு மலைப்பாதைத் திட்டம் என்ற அறிவிப்பையும், ஸ்ரீவில்லிபுத்தூரில் அரசு கலைக் கல்லூரி, அதேபோல வத்திராயிருப்பை தனி வட்டமாக பிரிப்பது, ஸ்ரீவில்லிபுத்தூரில் 24 மணி நேரமும் செயல்பட்டுக் கொண்டிருந்த மருத்துவமனையை* CEMONC CENTRE *என்ற நிலையிலிருந்து எடுத்திருக்கின்றார்கள். அதையும், மீண்டும்* CEMONC CENTRE *என்ற அடிப்படையிலே மாற்றம் செய்ய வேண்டும்.*

*தமிழகத்தினுடைய சாலைகளில் மனநலம் பாதிக்கப்பட்டோர் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் சாலைகளில் சுற்றித் திரிகின்ற காரணத்தால் பல்வேறு சமூக விரோத நடவடிக்கைகளும் ஏற்படுகின்றன. இவர்களால், சாலையில் வாகன ஓட்டிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரிதாக பாதிப்புகள் ஏற்படுகின்றன. இவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே மாவட்டந்தோறும் அரசு மறுவாழ்வு மையங்களை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர் மனோகரன் அவர்கள்.*

**திரு. ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரங்கன் ஆட்சி செய்யும் திருவரங்கத்திலேயிருந்து புறப்பட்டு, தமிழ்ப் புவி அரங்கத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற எங்கள் அன்னையே, ஆண்டாள் நாச்சியாரின் அம்சமே, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தகால ஆட்சியில் பாதிப்பிலிருந்து தமிழகத்தையும், 'தானே' புயலின் தாக்குதலிலிருந்து கடலூர், விழுப்புரம் மாவட்டங்களையும், மீட்டெடுக்கும் அரும்பணியில் நிராயுதபாணியாய் ஓயாது பாடுபட்டுவரும் மாதரசியே, விலையில்லாத அரிசி தந்து ஏழைகளின் பசி தீர்க்கும் அன்னலட்சுமியே, கல்விக்கு முதலிடம் தரும் கலையரசியே, கருணையின் கடலான அலை அரசியே, தமிழ்த் திருநாட்டை இந்திய திருநாட்டின் முதன்மை மாநிலமாக, முன்மாதிரி*





*மாநிலமாக மாற்றிட அல்லும், பகலும் அயராது பாடுபட்டு வருகின்ற அருளரசியே, இணையற்ற உழைப்பால், ஈடற்ற சாதனைகளால் மக்கள் மனதில் தங்க சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கின்ற எங்கள் பேரரசியே, ஏடுகள் மட்டுமல்லாது, எல்லா நாடுகளும் போற்றுகின்ற பேரறிவுப் பெட்டகமே, ஞாலம் வியக்கும் ஞானத் தலைவியே, என் ஊனிலும், உதிரத்திலும், உயிரோடும், மூச்சிலும் ஒன்றான எங்கள் குல தெய்வமே, நரகாசுரர்களை வீழ்த்தி, பேசும் தெய்வமாய் இப்பேரவையில் வீற்றிருக்கும் பொற்கால முதல்வரே, புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மேதகு ஆளுநர் அவர்கள் இப்பேரவையில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நல்வாய்ப்பினை வழங்கியமைக்கு இதயம் மகிழ்ந்து, இனிய நன்றியினை அம்மாவின் திருவடிகளில் பணிவுடன் சமர்ப்பித்து எனது உரையினைத் துவக்குகின்றேன்.*

*"நாளுக்கொரு திட்டம் தந்து, நன்மையெல்லாம் சேரச் செய்து, சமதர்மப் பூக்காடாய், தமிழ்ச் சமுதாயத்தை மாற்றிக்கொண்டிருக்கும் அம்மாவின் ஆட்சியே, எங்கள் மாட்சி; அம்மாவே எங்களுக்கு எல்லாமும் ஆச்சு" என்று உள்ளாட்சி தேர்தலிலும், ஒட்டுமொத்த வெற்றியை அம்மாவுக்கு அன்பு தமிழ்நாட்டு மக்கள் அள்ளித் தந்து மகிழ்ந்திருக்கின்றனர். இன்று தனது ஈடற்ற ஆற்றலால், ஏற்றமிகு செயல் திறனால், விவேகமான மக்கள் நலத் திட்டங்களால், வீறுகொண்ட சிம்மப் பார்வையால், திசைகள் எட்டும் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு, அம்மா அவர்கள் இந்திய அரசியல் வானில் இமயமென உயர்ந்திருக்கின்றார்கள். அம்மா அவர்களின் அளவற்ற கருணைக்கு ஆயிரமாயிரம் நிகழ்வுகளை அடுக்கடுக்காய் கூறமுடியும். ஆயினும், சமீபத்திய ஒரேயொரு நிகழ்வை, என் உள்ளம் நெகிழ்ந்த ஒரு சம்பவத்தை மட்டும், இந்த நேரத்தில் எடுத்துரைத்திட விரும்புகிறேன்.*

*பிற்பகல் 1–40*

*ஜனவரி 15, பொங்கல் பண்டிகை நாளன்று, நள்ளிரவு நேரத்தில் சென்னை, சேப்பாக்கம், எழிலகம் அரசு அலுவலக வளாகத்தில் திடீர் தீ விபத்து. அந்த தீயுடன் போராடிய தீயணைப்பு வீரர் ஒருவர் தன் இன்னுயிரை இழக்கிறார்; மேலும், இரு அலுவலர்கள் தீக்காயங்களுக்கு ஆளாகி சிகிச்சைக்கென மருத்துவமனையில்*

அனுமதிக்கப்படுகிறார்கள். தீயணைப்புப் பணிகளில் தீரமுடன் ஈடுபட்டு இன்னுயிரை இழந்த வீரரின் குடும்பத்திற்கு அருள் உள்ளம் கொண்ட நம் அம்மா அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததோடு நிதியுதவியுடன் அண்ணா விருதையும் குடியரசு தினத்தன்று அவர்கள் குடும்பத்திற்கு வழங்குகிறார். மறைந்தவர் குடும்பத்திற்கு மன ஆறுதல் மட்டுமல்லாமல், மாநில அரசின் கௌரவத்தையும் வழங்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை உள்ளத்தை மன நெகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கும்பிடும் தெய்வம்கூட காலம் நேரம் பார்த்துதான் உதவும். தமிழ்நாட்டின் காவல் தெய்வம் அம்மா அவர்கள் தெய்வத்தினும் விரைந்து உதவிக் கரம் நீட்டுபவர். கருணைப் பணியாற்றுபவர் என்பதற்கு இந்த நிகழ்வு ஒன்றே சத்திய சாட்சியாய் அமையும்.

கடந்த ஆட்சியாளர்களைப் போல தறிகெட்டு ஆட்டம் போட்ட 'தானே' புயல், தமிழகத்தின் கடலூர் மாவட்டத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டபோது வாழ்வாதாரங்ளையும், வாழ்ந்த இல்லங்களையும் இழந்து தவித்த மக்களுக்கு, போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் துரிதப்படுத்தியதோடு, பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நிவாரணம் கிடைத்திட அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, முனைந்து செயலாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரும்பணி எவராலும் செய்திட முடியாத பெரும் பணி. வீடு இழந்த மக்களுக்குப் பயன்படும் வகையில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்று மகராசி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் கருணை உள்ளத்திற்கு அடுத்த சான்றாகும். வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சி பெறச் செய்ய விரைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் நம் அம்மா அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

1.34 கோடிக்கு மேலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில் புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; தொழில் வளர்ச்சிக்கு வல்லுநர் குழு; கூடுதல் மின்சாரம் தயாரிக்க புதிய மின் திட்டங்கள்; பிளாஸ்டிக் சாலைத் திட்டங்கள்; விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டங்கள்; சேமிப்புக் கிடங்கு வசதிகள் மற்றும் சந்தைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்; விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம்; இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த புதிய திட்டம்; ஏழைக் குடும்பங்களுக்கு விலையில்லா கறவை பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்குதல்; பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியுடைய அனைத்துக் குடும்பங்களுக்கும் விலை இல்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்குதல்—இது போன்ற நலத் திட்டங்களுக்கு முன் எப்போதும் இல்லாத அளவாக 8 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி அறிஞர் அண்ணா அவர்கள் காண விரும்பியவாறு ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களே, நாங்கள் கண்டு வணங்கும் கண்கண்ட தெய்வம் நீங்கள்!





அம்மா அவர்களின் சாதனைப் பட்டியல் இன்னும் தொடர்கிறது. இல்லங்களில் உலை கொதிக்க வழியில்லா ஏழையெளியவர்களுக்கு நாட்டிலேயே முதல் முறையாக விலை இல்லா அரிசி மாதந்தோறும் வழங்கப்படுகிறது. வறுமையில் வாடும் நகர்ப்புற மக்களை இதற்கு முன் ஆண்ட அரசு கண்டுகொள்ளாத நிலையில், அம்மக்களின் வாட்டத்தைப் போக்கிடவும் ஒருங்கிணைந்த திட்டம்; தமிழ்நாட்டில் உள் கட்டமைப்புக்கும், சமூகப் பாதுகாப்புக்கும் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாயில் புதிய திட்டங்கள்; புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்ட மக்களுக்கு 850 கோடி ரூபாயில் நிவாரணப் பணிகள்; கடனில் தத்தளிக்கும் மின் வாரியத்தைக் காப்பாற்ற நிதியுதவி; சாதனை சரித்திரம் படைத்து வரும் அம்மா அவர்கள் சட்டத்தின் வழி ஆட்சி செய்பவர்கள் என்பதும் நாடறிந்த ஒன்று.

கடந்த ஆட்சியாளர்களின் அராஜக, ஆதிக்க நில அபகரிப்பால் வஞ்சிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை ஏற்று, ஏய்த்தவர்கள் எவராக இருந்தாலும் சட்டத்தின் பிடியில் கொண்டு வந்து அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்கும் பணியிலும் களம் இறங்கி இருக்கிறார்கள், காவியத் தலைவி நம் அம்மா அவர்கள். அன்று களியாட்டம் போட்டவர்கள், இன்று களி தின்னும் பயத்துடன் முன் ஜாமீனுக்கு முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இலட்சணத்தில் நாங்கள் நிரபராதிகள் என்று வாய்ச் சவடால் வேறு. கெடுதலை

விளைத்தவர்களுக்கெல்லாம் இனி விடுதலை கிடையாது. சட்டம் தன் கடமையைச் செய்யும். 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று எங்கள் வீட்டுப் பிள்ளை படத்தில் நம் புரட்சித் தலைவர் அவர்கள் சாட்டையைச் சுழற்றிக் கொண்டு பாடினார். இன்று நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டத்தின் துணையோடு தவறு இழைத்தவர்களுக்கு எதிராகச் சட்ட சாட்டையைச் சுழற்றியிருக்கிறார். களையெடுக்கும்போது, களைகள் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தப்படும். தவறு செய்தவர்கள் எவரும் அம்மாவிடமிருந்து தப்பிக்க முடியாது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணத்தில் கருவாகி, வண்ணத்தில் உருவாகியிருக்கும் திட்டங்கள் அனைத்தும் மக்களைச் சென்றடையும். நல்லாட்சிக்காக, கடந்த 5 ஆண்டுகளாக ஏங்கிக் கிடந்த தமிழக மக்கள் இல்லங்களில் ஒளி விளக்கு ஏற்றும். இதனை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதனால்தான் உள்ளாட்சித் தேர்தலில் மட்டுமின்றி நான் வாழும் திருச்சி மாநகரில் சமீபத்தில் நடைபெற்ற மேற்கு தொகுதி இடைத் தேர்தலிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாக்காளப் பெருமக்கள் வெற்றிவாகைச் சூடி மகிழ்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் வரப்போகின்ற இடைத்தேர்தலிலும் சங்கரன்கோவில் தொகுதி மக்களும் வரலாற்று நாயகி நம் அம்மா அவர்களுக்கு வாகை மலர்களை வாரித் தரக் காத்திருக்கிறார்கள். இதுமட்டுமல்ல எதிர்வரும் எல்லா தேர்தல்களிலும் தமிழக மக்கள் தங்கத் தாரகை நம் அம்மா புரட்சித் தலைவியின் பக்கம் நிற்பார்கள். செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அரசோச்சும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செங்கோட்டையில் அரசோச்சும் நாளும், காலமும் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இவ்வேளையில் இப்பேரவையில் நேற்று பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களும், இன்று பேசிய திரு. எ.வ. வேலு அவர்களும் ஏதோ வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அத்துணை பேர்களுக்கும் கறவை மாடுகள் வழங்குவதாக, அதேபோல பசுமை வீடுகள்



கட்டித் தருவதாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே சொன்னதைப்போலவும் இப்போது ஆண்டுக்கு 12,000 கறவை மாடுகளும், 60,000 பசுமை வீடுகளும் தருவதாக மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள் என்கின்ற அளவிலும் நேற்றும் இன்றும் கருத்துகளைப் பதிவு செய்திருக்கின்றார்கள். கடந்த 13-4-2011 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருச்சியிலே, தேர்தல் அறிக்கையிலே என்ன அறிவித்திருக்கிறார்களோ அதைத்தான் இப்பொழுது ஆளுநர் உரையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சொல்லியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலன் ஒன்றையே மனதில் கொண்டு செயல்படும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் திட்டங்களாய், ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி சீராக, சிறப்பாக நிறைவேறும் என்பதைத் தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள். அம்மா அவர்களே, எங்கள் மாதரசியே, நாடு உங்கள் பக்கம். நல்லவர்கள் உங்கள் பக்கம். அறம் உங்கள் பக்கம். திறம் உங்கள் பக்கம். தீரம் உங்கள் பக்கம். தீரர்களும் உங்கள் பக்கம். வீரம் உங்கள் பக்கம். என்றும் வெற்றியும் உங்கள் பக்கம்தான்; உங்கள் பக்கம்தான் என்று மகிழ்ச்சியுடன் கூறி, நிறைவாக (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் நெஞ்சம் நிறைந்த புண்ணியத் தாயே, உங்களது பொன் மொழி ஒன்றையே இப்பேரவையில் எடுத்துக்கூறி எனது உரையை நிறைவு செய்திட விழைகிறேன். "கல்லிருந்து அவசியமற்ற பகுதிகளை, கழிவுகளை அகற்றிட உள்ளிருந்து ஒரு தெய்வச்சிலை பிறக்கிறது. அப்படிப் பிறக்கும் அந்த முழு உருவச் சிலையிலிருந்து கண் திறக்கின்றபொழுது அந்தச் சிலையைச் செதுக்கும் சிற்பியின் உளியும், அவரது விழியும், எத்தகைய கவனத்தோடு இருக்குமோ அத்தகைய கவனத்தோடுதான் இன்றைக்கு தமிழகத்தின் அரசாட்சியை நான் நடத்தி வருகிறேன்" என்று எங்கள் கருணைத் தாயே நீங்கள் இதயம் கசிந்து சொல்லியிருக்கின்றீர்கள். பொறுக்க முடியவில்லை, பூம் பூம் மாட்டுக்காரர்களுக்கு. வயிற்றெரிச்சல்; தங்கள் வாயிலிருந்து புகையைக் கக்குகிறார்கள். சத்தியத் தாயே உளிபட்டுச் சிதறும் கற்கள் உளரத்தான் செய்யும். புதிய பொற்காலத்தை நோக்கி தலைநிமிர்ந்து தங்கள் ஆட்சியில் தமிழகம் நடைபோடுவதைத் தளர் நடைகளால் தாங்கிக் கொள்ள

[திரு. ஆர். மனோகரன்] [2012 பிப்ரவரி 1

முடியவில்லை. புறம் தள்ளுவோம், பொல்லா மனத்தினரின் பொல்லாங்கு வார்த்தைகளை. தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக, முன்மாதிரி மாநிலமாக மாற்றும் தங்களின் எண்ணமும் செயலும் வெல்லும். எங்கும் ஜெயம், எதிலும் ஜெயம் என்று ஜெயபேரிகை முழக்கத்துடன் வெற்றி நடைபோடும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) திரு. எஸ். ஜாண் ஜேக்கப், Please sit down. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர், என்ன clarification?

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடுகுடுப்பைக்காரன் என்றார். மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆரே அந்த வேடம் போட்டு நடித்திருக்கிறார். இன்று சட்டமன்ற உறுப்பினர் பூம் பூம் மாட்டுக்காரன் என்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கேட்கிறேன், உங்களுக்கு குடுகுடுப்பைக்காரனைப் பிடிக்காதா?

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** அதுதான் எம்.ஜி.ஆரே நடித்ததை அவர் கிண்டல் செய்துவிட்டார். இன்று இவர் பூம் பூம் மாட்டுக்காரன் என்கிறார். குருவிக்காரர், கிளி ஜோசியர் வரை வந்து விடுவார்கள் என்று நினைக்கிறேன். கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு பேசிய கம்யூனிஸ்டு உறுப்பினர் அவர்கள் ** என்று ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார். நான் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இல்லையென்றால் அவை உரிமை மீறல் என்ற ஒரு அடிப்படையில் அவை உரிமைக் குழுவுக்கு refer செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில் தமிழகத்திலே இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினையான முல்லைப் பெரியாறு பிரச்சினையிலும், அதைப்போல 'தானே' புயலால் கடலூர், விழுப்புரம் மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டபோது நிதி உதவியை உடனடியாக வழங்காமல் இருக்கிற மத்திய அரசு என்று அதைச் சுட்டிக்காட்டுகிற நேரத்தில், இப்படிப்பட்ட பிரச்சினைகளில் பிரதமர், இலங்கைப் பிரச்சினை உள்ளிட்ட எல்லாப் பிரச்சினைகளிலும் ஒட்டுமொத்தமாக தமிழர்களுடைய பிரச்சினைகளிலே மத்திய அரசு, குறிப்பாக இதைப் பற்றி ** கருத்துகளைச் சொல்லவில்லை என்று சொன்னாரே தவிர, (குறுக்கீடு) அவரை வேறு ஒரு அர்த்தத்தில் குறைபாடாகச் சொல்லவில்லை. எனவே பிரதமர் . .

*பிற்பகல் 1–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஜேக்கப். ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்டுப் பேசக் கூடாது. (குறுக்கீடு) திரு. ஜேக்கப், please sit down. அவர் பேசி முடித்த பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். மூன்று, நான்கு பேர்கள் எழுந்தால் நான் யாருக்கு வாய்ப்புக் கொடுக்க முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் சட்டமன்றத்தில் நாங்கள் மட்டும் சொல்லவில்லை. பத்திரிகைகளில் கடந்த காலத்தில் எந்தப் பிரச்சினையிலும் ** என்று கொட்டை எழுத்துகளில் எல்லா பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் யார் பேசப் போகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 பிப்ரவரி 1

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பிரதமர் இல்லை. அது மட்டுமல்ல, கண்ணியம் மிக்க பொறுப்பில் இருக்கும் பிரதமர் அவர்களை இவ்வாறு **என்று உண்மைக்குப் புறம்பான ஒரு விஷயத்தை அவர் தெரிவிக்கிறார். அவ்வாறான, அவைக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் பயன்படுத்தக்கூடிய இந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அது மட்டுமல்ல, அத்தகைய பேச்சுகளில் கண்ணியம் மிக்க பொறுப்பில் இருப்பவர்களை இவ்வாறு சாடுவது தவறு. அவை முன்பு இவ்வாறு பேசுவது தவறு என்று கூறிக் கொள்வதுடன், அவை உரிமை மீறலுக்கும் இதை உட்படுத்தலாம் என்ற கருத்தைக் கூறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு)

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் ஆளுகின்ற காங்கிரஸ் ஆட்சி தமிழகத்தைப் புறக்கணித்து வருவதில் யாருக்குமே இங்கு சந்தேகம் இல்லை. அவர்களுக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஏனென்றால், தமிழகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய நிதி எதுவும் கொடுக்கப்படுவதில்லை. உரிமைகள் எதுவும் கொடுக்கப்படுவதில்லை என்பது சாதாரண குக்கிராமத்தில் இருக்கின்ற அனைவருக்குமே தெரிந்த விஷயம். ஆனால், அவர்கள் காங்கிரசுக்காக வாதாட வேண்டுமென்று நினைத்தால், செல்வி பாலபாரதி அவர்கள் சொன்னதுபோன்று, அவர்கள் பிரதமரையே சந்தித்து, அவரிடம் பேசி தமிழகத்திற்கு நிறைய பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருவரில் யார் பேசுகிறீர்கள்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 1]

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் அவர்கள் இவ்வாறு அந்தக் கருத்தைக் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். பிரதமரிடம் அதைப் பேசி காங்கிரஸ் உறுப்பினர்கள் பெற்றுத் தரலாம் என்று மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் இதைக் கூறியிருக்கலாம். அதை விட்டுவிட்டு, அவையில் இல்லாத ஒருவரை, கண்ணியம் மிக்க பொறுப்பில் இருப்பவரை, இவ்வாறு கிண்டல் செய்வது, கேலியாகப் பேசுவது மிகவும் தவறு. ஒன்று, அவ்வாறு கூறியதற்காக அவர் மன்னிப்பு கேட்கட்டும் அல்லது அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். இவ்வாறான வார்த்தைகளை இந்த அவையில் பயன்படுத்தக் கூடாது என்பதை அடிக்கடி பேரவைத் தலைவர் அவர்களே பலருக்கும் கூறும்பொழுது, இதை நிச்சயமாக கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தத் தமிழக மக்களுடைய பிரதிநிதியாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். இதே சட்டமன்றத்தில் தமிழர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்கள் முன்வைக்கின்ற கோரிக்கைக்கு பிரதமர் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை என்பதை காங்கிரஸ் நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, அவர்கள் சொல்லுவதைப்போல, தமிழர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களிடம் கெஞ்சி, அவர்கள் recommendation செய்து பொருளுதவி வாங்க வேண்டியதில்லை. முதல்வர் அவர்கள் சொல்லுகின்ற கோரிக்கையை ஏற்று அவர் நடந்தாலே போதும். எனவேதான், பிரதமர் அதில் கருத்து சொல்லாத காரணத்தால், அவர் **இருக்கிறார் என்பதைத் திரும்பத் திரும்ப நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் அவர்கள் கூறியதையே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி எஸ். விஜயதரணி] [2012 பிப்ரவரி 1

கூறுகிறார்களே தவிர நான் கூறுவது, ** என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். அதன் பின்னால் உள்ள கருத்துகள் பலவாறாக இருக்கலாம். அவர்கள் கோரிக்கைகள் வைக்கிறார்கள். அதை நிறைவேற்றவில்லை. அதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தலாம். கூறிய வார்த்தை தவறு. அதற்கு ஆயிரம் காரணங்களைக் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் கூறுகிறார்கள். அது மிகவும் தவறு. காரணங்களைக் காரணங்களாகக் கூற வேண்டுமே தவிர, இதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. நான் கூறியது புரியாததுபோல மீண்டும், மீண்டும் அவர் கூறிக் கொண்டிருக்கிறார். இதுபோன்ற வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் தினந்தோறும் கூறிக்கொண்டிருக்கிற விதிமுறைகளையும் நான் இங்கு கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தவறான அந்த வார்த்தைகளை, உண்மைக்குப் புறம்பான வார்த்தைகளை அவையில் பயன்படுத்தக்கூடாது என்ற கூற்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் பல முறை கூறியிருக்கிறார். **என்று கண்ணியம் மிக்க பிரதமரைக் கூறுகிறார்கள். மற்ற வகையில், பிரதமரிடம் கோரிக்கை வைத்திருப்பதைப் பற்றியதையெல்லாம் கூறலாம். அதை அவ்வாறே கூறியிருக்கலாம். கம்யூனிஸ்டு உறுப்பினர், இவர் கூறியதுபோல் கூறாமல், ** என்ற வார்த்தையைக் கூறுவது தவறானது. ஆகையால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பாரதப் பிரதமரைப் பற்றி தனிப்பட்ட முறையில் உறுப்பினர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்ற விஷயங்கள் அவைக் குறிப்பில் இருக்கும்.

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்கள், நேற்றையதினம் ‘குடுகுடுப்பைக்காரன்’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டபோது அது அவைக் குறிப்பிலிருந்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

நீக்கப்பட்டது. ஆனால், இன்று நீங்கள் அதை மீண்டும் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, நான் கேட்க விரும்புவது, அந்த ‘குடுகுடுப்பைக்காரன்’ என்ற வார்த்தை அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா, இல்லையா என்பதை திரு. சிவசங்கர் அவர்கள் விளக்க வேண்டும்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** குடுகுடுப்பைக்காரர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். (குறுக்கீடு) அதைத் தவறான முறையிலே, தவறான அர்த்தத்திலே பயன்படுத்தக்கூடாது என்பதுதான் நேற்றைய விவாதம். இன்றைக்கு நாங்கள் சொல்வது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு ஏன் நீங்கள் இவ்வளவு பெரிதாகப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நேற்றைய பிரச்சினை நேற்றோடு முடிந்தது. இன்றைக்கு உங்கள் உறுப்பினர்தான் அந்த வார்த்தையைப் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தை இருக்க வேண்டுமா, நீக்கப்பட வேண்டுமா? (குறுக்கீடுகள்) சரி, விடுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு மிக்க தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் உணர்வுகளையும், தமிழக காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளையும் பதிய வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, தமிழக மக்களின் உள்ளங்களில் குமுறிக் கொண்டிருக்கும் எண்ணங்கள், ஏக்கங்கள் பலவும் கவர்னர் உரையில் காணாமல் இருப்பது தமிழக மக்களுக்கு ஒரு ஏமாற்றத்தைத் தருகிறது. வரும் 12—வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 1,85,000 கோடி திட்டப் பணிகளுக்காக தமிழக அரசு செலவிடத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியிருக்கிறீர்கள். அதில் எந்தெந்த துறைகளில், எந்தெந்த மாவட்டங்களில் செலவிட இருக்கிறீர்கள் என்பது பற்றி அறிய முடியவில்லை.

தண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், முல்லைப் பெரியாறு விஷயத்தில் தமிழக அரசின் நடவடிக்கையில் நாங்களும் முழுமையாகப் பங்குபெறுகிறோம். ஆனால், இதர தண்ணீர் சம்பந்தமான பிரச்சினைகளைத் தமிழக அரசு மறந்துவிட்டதா அல்லது கண்டுகொள்ளவில்லையா என்ற ஆதங்கமும்,

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2012 பிப்ரவரி 1

எதிர்பார்ப்பும் எங்களிடையே விஞ்சி நிற்கிறது. குறிப்பாக, நெய்யாறு இடதுகரைச் சானல் பிரச்சினை பற்றி தமிழக அரசு கண்டுகொள்ளாதது எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. இதுபோல, நெல்லை மாவட்டம், செண்பகவல்லி தடுப்பணை பிரச்சினை, பாம்பனாறு அணை பிரச்சினை ஆகியவற்றையெல்லாம் தமிழக அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். தண்ணீர்ப் பிரச்சினையே தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினை என்பதால் ஏரிகள் அனைத்திலும் ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றைப் புனரமைக்க வேண்டுமென்று தமிழக காங்கிரஸ் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இன்று சுமார் 33,000 ஏரிகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் சுமார் 5,200 ஏரிகள் பொதுப் பணித் துறையின் வசம் உள்ளன. குடிநீருக்கும், சுற்றுலா மேம்பாட்டுக்கும் பயன்படுத்துவதுபோல, பாசனத்திற்காகவும் ஏரிகளையும் குளங்களையும் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல குளங்கள் ஆவணங்களில்தான் இருக்கின்றனவேயொழிய, நிஜத்தில் இல்லை. குளங்கள் பாசியும், சேறும் நிறைந்துள்ளதால் மழைக்காலங்களில் தண்ணீர் கடலுக்குச் செல்கிறது. இந்த நிலை நீடித்தால் குளங்கள் அழிந்து போகும். இவற்றைச் சீரமைக்கும் திட்டங்கள் ஏதும் ஆளுநர் உரையில் இல்லை.

பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம் உள்ளதாகக் கூறியிருக்கிறீர்கள். இதை வரவேற்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப்போன்று, 30 மைக்ரானுக்கும் குறைவான பாலிதீன் கவர்கள் பயன்படுத்துவதைத் தமிழகம் முழுவதும் தடை செய்ய வேண்டும். இதற்கு அடிப்படையாக, இத்தகைய பைகளைத் தயாரிக்கும் நிறுவனங்களை மூட வேண்டும். இத்தகைய நிறுவனங்களுக்கு மாற்றுப் பைகள் தயாரிக்க அல்லது தொழில்கள் செய்ய அரசு நிதியுதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கும் திட்டங்களான, 108 ஆம்புலன்ஸ் திட்டமானாலும் சரி, இந்திரா குடியிருப்புத் திட்டமானாலும் சரி, பல்வேறு திட்டங்கள் மாநில அரசால் மறைக்கப்படுகின்றன. பசுமை வீடுகள் திட்டத்திற்குத் தமிழக அரசு



2012 பிப்ரவரி 1] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

வழங்கும் 1½ இலட்சம் ரூபாயை 3 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும். அப்படியானால் மட்டுமே தரமான வீடுகளை பயனாளிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** பயனாளிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒவ்வொரு வீடும் 200 சதுர அடி என்ற அளவை மாற்றியமைத்து 300 சதுர அடியில் தரமான வீடுகளை அரசு வழங்க வேண்டும். நடப்பு நிதியாண்டில் ரூ.539 கோடியே 83 இலட்சம் செலவில் 3,000 புதிய பேருந்துகளை வாங்கப் போவதாகக் கூறியிருக்கிறீர்கள். இதை நான் வரவேற்கிறேன். அரசு புதிய பேருந்துகளை வழங்கினாலும், நாகர்கோவில் மண்டல அதிகாரிகள் புதிய பேருந்துகளை வேறு மண்டலங்களுக்குக் கொடுத்துவிட்டு, அங்குள்ள பழைய பாழடைந்த வண்டிகளை வாங்கி ரிப்பேர் செய்து அவற்றை சாலையில் ஓட்டுகிறார்கள். இதனால் அடிக்கடி விபத்துகளும், தட முடக்கமும் ஏற்படுகிறது.

தொழிலாளர்களுக்கு அரசு வழங்குகின்ற நிதியை வேறு வழிகளில் செலவு செய்கிறார்கள். தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்கின்ற பணத்தையும் உரிய நிறுவனங்களில் செலுத்துவதில்லை. மொத்தத்தில் அரசின்மீது தொழிலாளர்களும், பொதுமக்களும் அதிருப்தி அடைவதற்கு அதிகாரிகள் காரணமாக இருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,704 மெகா வாட் அளவிற்கு கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதாகக் கூறியிருக்கிறீர்கள், வரவேற்கிறேன்.

முதலாவதாக பகலில் எரியும் தெரு விளக்குகளை அணைக்க ஒரு திட்டம் தீட்டுங்கள். மின் கட்டணம் செலுத்தாமல் இலவசமாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் நபர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் மின் இணைப்பைத் துண்டித்துவிட்டு, கட்டண பாக்கிகளை வசூல் செய்யுங்கள். இலவசங்கள் என்பதை தகுதியானவர்களுக்கு மட்டுமே வழங்குங்கள்.

வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாக வட மாநிலங்களிலிருந்து, தினமும் வந்து குவியும் இளைஞர்களால் தமிழகத்திற்கு பேராபத்து

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2012 பிப்ரவரி 1

காத்திருக்கிறது. இதனால் தமிழக மக்களுக்கு வேலையின்மையும், வறுமையும் ஏற்படுவது ஒருபுறம் இருக்க, கொலை, கொள்ளை, வழிப்பறி, செயின் அறுப்பு போன்ற கிரிமினல் குற்றங்களும் அதிகரிக்கும். இவர்கள் ரேஷன் கார்டுகளும் வாங்கி, வாக்குரிமையையும் பெற்று வருகிறார்கள். இதுபோன்ற விஷயங்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளாதது வேதனையாக உள்ளது.

இதுபோக 'தானே' புயலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உருப்படியான திட்டங்கள் ஏதும் இல்லாதது எமக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அமைச்சர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் தனி உதவியாளர்களாக அதிகாரிகள் இருக்கிறார்கள். இதுபோல சட்டமன்ற உறுப்பினர்களும் சிறப்பாகப் பணிபுரிய, பட்டதாரியாகவோ அல்லது அரசுத் துறை அல்லது அரசு நிறுவனம் ஏதேனும் ஒன்றில் பணிபுரிகின்ற நபரை, அதுவும் சட்டமன்ற உறுப்பினர் விரும்புகின்ற ஒருவரை, தனி உதவியாளராக நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜாண் ஜேக்கப், நீங்கள் மிகவும் சீக்கிரமாக உரையை முடித்தீர்கள். மிக்க மகிழ்ச்சி. நன்றி.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-2-2012) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

6. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 20-9-2011 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் அரசாணை (நிலை) எண் 79-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



2012 பிப்ரவரி 1]

[1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2010-2011 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

8. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கையும், ஆண்டுக் கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

9. 2010-2011 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

10. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619— ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

11. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

4. 2011-2012 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

*5. 2011-2012 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)*

*6. 2011-2012 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

******